ஓம்

பரப்ரஹ்மணேநமः

ஸ்ரீ சங்கரபூஜ்ய பகவத்பாத

ஆசார்ய சுவாமிகளின் மூக்கிய

சிஷ்ய வொருவராகிய

ஸ்ரீ தோடகாசார்யர்

தேவவாணியிற் றிருவாய்மலர்ந்தருளிய

தோடக மென்னும்

வேதசார சமூத்தரணம்.

ஸ்ரீ திருக்களர் ஆண்டவரென்னும்

ஸ்ரீ வீரசைவரான தேசிக பாதசேகர நியாய சந்திர

வேதாந்த பாஸ்கர மஹாமண்டலேஸ்வர

ஸ்ரீ சுப்பய்ய ஞானதேசிகேந்திர சுவாமிகள்

தமிழில் செய்யுள் வடிவமாய் இயற்றியருளிய

மூலமும்,

ஸ்ரீ சிதம்பரம் பொன்னம்பலஞான தேசிகர் மடாலயம்

ஸ்ரீ சிதம்பரஞான தேசிகர் பாதசேகரராகிய

ஸ்ரீ சுப்பய்ய சுவாமிகள்

இயற்றிய

உரையும்.

நா. முனிசாமி முதலியார்

அவர்களால் பிரசுரிக்கப்பட்டது

சென்னை "ஆனந்தபோதினி" பவர் பிரஸ்ஸில்

பதிப்பிக்கப்பட்டன.

காபி ரைட்-ரிஜிஸ்டர்ட்.] 1921 [விலை அணா 8.

ஓம்

பரப்ரஹ்மணேநமः

ஸ்ரீ சங்கரபூஜ்ய பகவத்பாத

ஆசார்ய சுவாமிகளின் மூக்கிய

சிஷ்ய வொருவராகிய

ஸ்ரீ தோடகாசார்யர்

தேவவாணியிற் றிருவாய்மலர்ந்தருளிய

தோடக மென்னும்

வேதசார சமூத்தரணம்.

ஸ்ரீ திருக்களர் ஆண்டவரென்னும்

ஸ்ரீ வீரசைவரான தேசிக பாதசேகர நியாய சந்திர

வேதாந்த பாஸ்கர மஹாமண்டலேஸ்வர

ஸ்ரீ சுப்பய்ய ஞானதேசிகேந்திர சுவாமிகள்

தமிழில் செய்யுள் வடிவமாய் இயற்றியருளிய

மூலமும்,

ஸ்ரீ சிதம்பரம் பொன்னம்பலஞான தேசிகர் மடாலயம்

ஸ்ரீ சிதம்பரஞான தேசிகர் பாதசேகரராகிய

ஸ்ரீ சுப்பய்ய சுவாமிகள்

இயற்றிய

உரையும்.

நா. முனிசாமி முதலியார்

அவர்களால் பிரசுரிக்கப்பட்டது

சென்னை "ஆனந்தபோதினி" பவர் பிரஸ்ஸில்

பதிப்பிக்கப்பட்டன.

காபி ரைட்-ரிஜிஸ்டர்ட்.] 1921 [விலை அணா 8.

PRINTED AT THE "ANANDA BODHINI" POWER PRESS,


15, VENKATESA MAISTRY STREET,

SOWCARPET, MADRAS.

ஓம்

பரப்ரஹ்மணேநமஃ

உபோத்காதம்.



ஆநந்தகல்யாண குணங்கள் நிறைந்த மகாதேவரது அநுக்ரஹ லீலாவிக்ரஹமாகிய ஸ்ரீசங்கரபூஜ்ய பகவத்பாத ஆசாரிய சுவாமிகள் அஸ்தாமலகரென்னும் நாமம் வாய்ந்த சீடனைத் தமக்கு துணையாக்கிய பின் பதுமபாதாதி சீடத் திருக்கூட்டங்களோடு ஒருகால் சிருங்ககிரியென்னும் புரியில் ஸ்ரீ சாரதாம்பிகையைப் பூஜித்துக்கொண்டிருக்குங்காலத்தில் தமது தருமத்தில் வழுவாது நடப்பவரும் ஜீவகாருண்யமே உருவானவரும், அதிவிநயரும் தேசிகசேவையிற் றற்பரரும், மிகுந்த சமாதிதசித்தருமாய ஆனந்தகிரியென்னும் நாமம்வாய்ந்த ஒருவர் அத்வைதஸ்தாபநாசிரியராகிய ஸ்ரீ ஜகத்குரு சந்நிதியைச் சரணகதியாயடைந்து மடிசெல்வழி நாற் செல்வதுபோலவும், கட்கமை போலவும், உடற் குயிர்போலவும், அனவரதம் ஆத்தம் அங்கம் தானம் சற்பாவம் என்னும் நான்குவிதப் பணிவிடைகளையும் அளவில்லாத அன்போடு செய்துவந்தனர். அக்காலை, சாஸ்திரங்களிற் பிரவிருத்தி சிறிதுமின்றிக் கேவலம் சேவையிலேயே அன்புபூண்ட அவ்வன்பரைத் தயாநிதியாய் மான்மழுவெழுத்துமறை முதற் பொருளாயுணர்த்திவந்த வினைறவர் தமது திருவுளத்தடைத்துப் பதுமபாதாதி முனிவர்கள் சாந்தி பாடமாகிய சிரவணஞ் செய்யும் பொழுது தமது திருவார்த்தையைச் சிரவணித்தாய்யுமாறு கருணை புரிந்தனர். இங்ஙனம் நடந்து வருநாளொன்று அவ்வன்பர்.

ஓரோர்காற் றமது தேசிகேந்திரர் சேவைமுடியா திருப்பிற் சிறிது பொறுத்து வருவார். அவ்வக்கால் உலககாயகரெனிய குரவர்

II

பெருமான் சாந்திபாடஞ் செய்பவரை நோக்கிச் சிறிது பொறுங் கள்; நிரி சிறிதுபோதில் வந்துவிடுவன் பின்னர்ச் சிரவணஞ் செய் யலாமென்று திருவாய்மலர்ந்தருளுவார். அதுகுறித்துச் சர்வ வித்யா சம்பன்னராகிய பதுமபாதாதி மூனிவர் மனங்கன் நப்பித் துக் கொண்டே வந்தன. சிறிதுநாட்கழித்து ஒருநான் அவர் தேசி கர் பெருமான் பரிவட்டம் சாத்தஞ்செய்ய நதிக்குச் சென்றிருக் குங்கால் சாந்திபாடஞ் செய்யச் சகல்திரக் கணக்காகச் சிடர் கூடி யிருக்கச் சாந்திபாடம் நடக்க ஆக்ஞருபுரிய வேண்டுமென்று குரவர் பெருமானைப் பதுமபாத மூனிவர் பிரார்த்தித்தபொழுது அவர் வாராமலிருக்கச், சிறிதுபொறுங்கள் நிரியும்கணப்போதில் வந்து விடுவன் என்று தேசிகேந்திரர் திருவாய்மலர்ந்தருளினர் அதைச்செவியுற்ற பதுமபாத மூனிவர் சகியாதவராகிச் சாஸ்திர் திலன நிகாரியாய்க் குட்டிடம் போலச் சடமாய்ப் புத்தியீன ருய்த் தன் வேலையைச் செய்துகொண்டிருக்கும் அவனுக்காக என் எதிர்பார்க்க வேண்டுமென்று பீதியோடுந் தெரிவிக்க; அதைத் திருச்செவியுற்ற தயாசமுத்திரமாகிய தேசிகர் பெரு மான் பதுமபாதரது மிகுந்த கர்வம் நீங்கும்பொருட்டும் பக்தர்கள் பால் அனுக்கிரகத்தை வெளியிடும் பொருட்டும் தமது அன்பரு கிய நிரியின்பால் சதுர்த்தசவித்தைகளும் உளவாமாறு திருவுளத் திலக்கணமே கருணைபுரிந்தருளினர் குரு பரன்றிருவருளால் அவ் வித்தைகளைப் பூரணமாகப் பெற்று அவ்வன்பர் பாதங்கடோறும் நான்கு சகணங்கள் வாய்ந்த தோடகசந்தத்தால் மறைமுடியாவை யுந் தொகுத்துச் சுருதிசார சமுத்தரணம் என நாமஞ்சூட்டி இந் நூலைச் சகந்நாயகரெனிய தேசிகர் பெருமான் றிருவடியிற் சமர்ப் பித்தனர். அதன் சொற்பொருளமைதியும் தேசிகன் சேவை யின் வலியால் விளைவில் இவ்வாறு இயற்றியதையும் பத்மபாதர் கண்ணுற்று தமது கர்வத்தை விடுத்துப் பொழுத்தருளுமாறு றீ

III

சங்கரமூனிவர் திருவடித் தாமரையில் வீழ்ந்து அனேகங்கோடி நமஸ்காரம் செய்தனர். கருணையே திருவுருவமாய எபதுயிர்க் கிறைவர். அதனை அவ்வாறே பொறுத்தருளினர் என்பது சங்கர திக்விஜயத்தின் கண்ணுள்ள இந்நூலவதரித்த சரித்திரத்தின் சுருக்கமாம்.

இத்தகைய அருமையும் அருளும் வாய்ந்த நூல் தேவவாணி யுணர்ந்தார்க்கே யன்றித் தமிழ்மக்களுக்குப் பயன் படாமை கருதி ஸ்ரீ திருக்களர் ஆண்டவரென்னும் ஸ்ரீமத் வீரசேகர ஞான தேசிகர் பாதசேகராகிய நியாய சுந்திர வேதாந்த பாஸ்கர ஸ்ரீமத் மஹாமண்டலேசுவர சுப்பய்ய ஞான தேசிகேந்திர சுவாமி கள் தமிழில் செய்யுள் வடிவமாய் இயற்றியருளிய மூலமானது கூரிய மதியுடையோர்க்கன்றி எனையோர்க்குப் பயன் படாமை கருதி ஸ்ரீமத் பொன்னம்பல ஞான தேசிக சுவாமிகள் மடாலயம் ஸ்ரீ சிதம்பர ஞான தேசிகர் பாதசேகராகிய சுப்பய்ய சுவாமிக ளியற்றிய உரையும் சேர்த்து. ந. முனிசாமி முதலியார் அவர் களால் பிரசுரிக்கப்பட்டது.

7-4-1921.

ஓம்

பரப்ரஹ்மணே நம:

தோடக மென்னும் வேதசார சமுத்தரண மூலமும் உரையும்.

பாயிரம்.

வன்னி விநாயகர் துதி.

மங்கல வுருவணி மருவுதற் கரிய ணிகிச்
சங்கையி றரியாதீ தந் தனிலொளி ரொளிய தாகி
யெங்கணற் குரவணி யின்பமே யீயும் வன்னி
யைங்கர விறைவன் பொற்ற ளணுதினம் போற்றுவாமால்.

பஞ்சமூர்த்திகள் வணக்கம்.

மறைதெரி யொழுகு மருந்தவர்க் கருளும்
வன்னியைங் கரணமா வடிவே
லுறைதிருக் கரண மதுமுனிக் கருளு
மூயர்திரு புவனா யகனை
நிறைதரு கருணை நிலயமா தாகி
நிகழ்திரி புவனா யகியைச்
சிறையறுத் தருளும் வீரமா தவனைத்
தினம்புனிற் திடரொழித்திடு வாம். (2)

சங்கர பூஜ்ய பகவத் பாதாசாரிய சுவாமிகள் வணக்கம்.

பெண்மை பாதிய னென்பெயர் பெயர்க்கவோ விடத்தை
யுண்மை யார்கள னென்பதை யொழிக்கவோ வுலகில்
வெண்மை மாமலி விட்டொரு விரத்தனைப் போற்றே
தண்மை யேதருஞ் சங்கர முனிவனைப் பணிவாம். (3)

ஓம்

பரப்ரஹ்மணே நம:

தோடக மென்னும் வேதசார சமுத்தரண மூலமும் உரையும்.

பாயிரம்.

வன்னி விநாயகர் துதி.

மங்கல வுருவணி மருவுதற் கரிய ணிகிச்
சங்கையி றரியாதீ தந் தனிலொளி ரொளிய தாகி
யெங்கணற் குரவணி யின்பமே யீயும் வன்னி
யைங்கர விறைவன் பொற்ற ளணுதினம் போற்றுவாமால்.

பஞ்சமூர்த்திகள் வணக்கம்.

மறைதெரி யொழுகு மருந்தவர்க் கருளும்
வன்னியைங் கரணமா வடிவே
லுறைதிருக் கரண மதுமுனிக் கருளு
மூயர்திரு புவனா யகனை
நிறைதரு கருணை நிலயமா தாகி
நிகழ்திரி புவனா யகியைச்
சிறையறுத் தருளும் வீரமா தவனைத்
தினம்புனிற் திடரொழித்திடு வாம். (2)

சங்கர பூஜ்ய பகவத் பாதாசாரிய சுவாமிகள் வணக்கம்.

பெண்மை பாதிய னென்பெயர் பெயர்க்கவோ விடத்தை
யுண்மை யார்கள னென்பதை யொழிக்கவோ வுலகில்
வெண்மை மாமலி விட்டொரு விரத்தனைப் போற்றே
தண்மை யேதருஞ் சங்கர முனிவனைப் பணிவாம். (3)

பத்மபாதாதி நால்வர் வணக்கம்.

கங்கையிற் கமலமீது கதிசெயுங் கழலி ணினைப்
புங்கவ ரீச ணென புனிதனைக் குரவன் பாத
பங்கய வருளாற் பாடும் பரமனைப் பெருமை வாய்ந்த
வங்கையா மலக னென்னு மமலனைப் பணிகுவாமே. (4)

பரமகுரவர் வணக்கம்.

மூடிமறை யறையு மெமைமையமக் கருளு மூத்தோ
மேசதே சிகனைத், துடியிடை யுடையர் துரும்பென வருளுந்
துகளறு துறவிறை யவனைச், சடையிறை யடியின் மனமுறை
வருளுஞ் சத்தறி வம்பரா ரியனைத், திடமுடன் மனத்திற்
சிந்தைசந் ததமுஞ் திகழ்தரப் புரிந்திரு ளிரிப்பாம். (5)

அருளிறை வணக்கம்.

தீர சாகரஞ் சிறிதெனக் கருணையிற் சிறந்த
நார சேகர னருள்கரி முகனமக் குறுஞ்சம்
சார சாகரந் தணந்திடச் சமிவனந் தனிலாம்
வீர சேகர மூனிவரன் மிளிர்பதந் தொழுவாம். (6)

அவை யடக்கம்.

சங்கரதே சிகனருளா லறையுமறைச் சாரசமூத் தரணை
மான, விங்கிதனைத் தமிழ்மொழியி லெளியனென் யாத்திகை
விதயத் தோரல், பொங்கரவி னிறைதனதா யிரமுகத்தா
லரன்புகழைப் புகழ வேணக்கி, யிங்கொருபுன் கிருமியதை
கிகர்புகழ விதயமுன விணைய தாமே. (7)

நூற்றோணையுங் கூறுவான் றுணிந்த வேட்கையும்.

இவ்வெழி லுமுத நூலை யிருசதத் தொருபதத் தின்முந்
செவ்விய செய்யுளாலே சிறியனுஞ் செப்ப றுணி
வெவ்விதத் திறுமென் சிந்தை யின்பறி வருவில் வாழ
வவ்விய மலது வேறோ ராசையைப் பற்றி யன்றால்.

பாயிரம் முற்றிற்று.

இதந்தரு மறையின் பொருளினை வடிக்குமினிமையார்ந்
தோடகத் துரையை, விதம்பெறத்தமிழ்ப் லாக்கிட யாமெம்
விருப்புயிர்த் துணைவனு மெந்தைச், சிதம்பர சபையி லுடை
யொடு நடிக்குஞ் சிலம்படி மனத்தினிற் பதித்துச், சிதம்பர
னான தேசிகன் றனது சீரடி சென்னி சேர்த்திடுவாம்.

உ

ஸ்ரீ கணேசாயநமம :

நூல்.

(அவதாரிகை)—இம்மூதற் செய்யுளால் ஈசுவரனையுங் குருவையும் வணங்குகின்றூர்.

மூவுல கிறையா மரியினை மூனிவர் தொழுவனை மூதிர்ந் தசத் துவனை, மேவருஞ் சத்தி தனயனற் சுதனை மினிர்பர மேட்டியீட் டினனைத், தூவுகொண் மூவி லமலகம் புரையு மூருவனை வகிட்டதூய் குலனைச், சிவநாயகனை யுக்கிர தவ னைச் சிந்தையிற் றினம்பணிந் திடுவாம். (1)

(பதவுரை)—மூவுலகிறையா மரியினை-மூவுலகிற்கு நாதனும் அஞ்ஞானத்தைக் கெடுப்பவரும், மூனிவர் தொழுவனை - மனன சீலரால் துதிக்கத் தக்கவரும், மூதிர்ந்த சத்துவனை - மேன்மை யான சைதன்யரும், மேவருஞ்சத்தி தனயனற்சுதனை-பொருந்து தற்கரிய மாயாசத்தியின் காரியப்பிரபஞ்சமான புத்திரனை நல்ல புத்திரனுக வுடையவரும், மினிர்பாமேட்டி யீட்டினனை - விளங்கு கின்ற இராணிய கர்ப்பனை யுண்டாக்குபவரும், தூவு கொண்மூ வில் அமலகம் புரையும் உருவனை - மழை துளிக்கும் மேகமின்றிய பரிசுத்த ஆகாயம்போன்ற சொரூபரும், சிவநாயகனை - சிவனை நியமிப்பவரும் ஆன, உக்கிரதவனை - பிரக்ஞானகனான ஈசுவ ரனை, சிந்தையிற் றினம் பணிந்திடுவாம் - மனதா லெப்போதும் வணங்குவாம்.

(பதசாரம்)—மூவுலகிறை அரியென்பதாதியால் இம்மூதற் செய்யுளில் இவ்நூல் தேவதை குருவணக்க வழியாக இயற்ற விரும்பிய பிரகாணத்தின் விஷய, சம்பந்த, பிரயோஜனங்களை யுங் குறிப்பாற் கூறுகின்றூர். ஆகேஷபம் "சாஸ்திரவேக தேசத் துள்ளதாய் அதன் காரியத்தைப் பிரதி பாதிப்பது பிரகாணம்" என வதனிலக்கண மூணர்ந்தார் கூறுவர். "ஓர் பலனைக்

குறித்து இயற்றப்பட்ட பொருட் கூட்டத்தின் முழு நிறை வைக்கூறு நூல் சாஸ்திரம்" என வதனி லக்கணமாம். சுருதி சார சமூகத்தாண மென்னு மிப்பிரகாணம் நிர்க்குணப் பிரற்மத் தின் ஒன்றுந் தன்மையைக் கூறுஞ் சிறந்த யுக்தி மாத்திரங் கூறு கின்றமையின் சாரீரக சாஸ்திர வேக தேசத்துள்ளதும் சமன் வயம், அவிரோதம், சாதனம், பலம் என்னும் அர்த்த நான்கையுங் கூறுகின்றதேனும் சாஸ்திரார்த்தத்தைச் சுருக்கிக் கூறுகின்ற மையின் சாஸ்திர காரியத்தைக் கூறுவதாயுமிருக்கின்றது. அதனு ணும் இஃது அதனுடைய விஷய சம்பந்த பிரயோஜனங்களை யுடையதாகின்றது; இதனுல் விஷய சம்பந்த பிரயோஜனங் களை வேறாகக் கூறுங் கவ்டத்தால் யாது பலன்?

சமாதானம்; இங்ஙனங்கூறிய தன்மையே அங்ஙனமேனும் கேட்போரின் முயற்சிக் கேதுவாக சாரீரக சாஸ்திரத்துள்ள விஷய சம்பந்த பிரயோஜனங்களையே பிரகாணரம்பத்தில் நினை ப்பிக்கின்று ரென்பதாற் ரூடமின்ரும். இங்ஙனம் முதற் செய்யுள் விஷய முதலியவற்றைக் கூறுங் கருத்துடையதாகுங் கால் விரவின் விடையாக இச்செய்யுள் கூறத்தக்க தென்று முதற்கண் விரைக் காட்டப்படுகின்றது. ஆகூடம்; பிரற்மம் அறியப்படினும் அறியப்பட்டாவிடினும் விஷய சம்பந்த பிரயோ ஜனமின்மையால் இப்பிரகாணம் ஆரம்பிக்கத்தக்கதன்று எங்ஙன மெனின், பிரற்மம் வேதாந்த சாஸ்திரத்தினு மன்னியத்தால் அறியப்படின் இதற்கு விஷயமின்று. எது எதனுலேயே அறி யப் படுகின்றதோ அது அதற்கு விஷயம். எங்ஙனம் கண் முத லிய வற்ரூல் ரூப முதலியவைபோன்று. அன்னிய சாதாரண மின்மை விஷயமாம். மற்றும் வேறு பிரமாணத்தா லறியப்படா விடின் அக்காலா காயபூப் போன்று சாஸ்திரத்தாற் கூறமுடி யாது; எங்ஙனமெனின், யாது ஒரு போதும் புத்தியில் வினங் காத விசேஷண முடையதோ அவ்வசக்கியத்தைக் குறித்து எங் ஙனஞ் சாஸ்திரங் கூறும்? கூறமுடியாது. ஆகவே சாஸ்திரத் திற்கு பிரற்மத்தோடு சம்பந்த மின்று. சேர்க்கை நீக்க மின்மை சம்பந்தமாம். எது எதனுனேயே அறியப்படுகின்றதோ

வேறொன்று லறியப்படுகின்றதின்றே. அது அதனோடு சம்பந்த மூடையதாகின்றது. எங்ஙனம் வியாகரணத்தால் சப்தத்தின் நன்மை யறியப்படுகின்றமையின் அதற்கதனோடு சம்பந்தமாம். பிரஹ்மம் மூற்றிலும் அறியப்படாமையின் அசக்கியத்தைக் கூற ஆரம்பித்தமையின் இங்ஙனம் (வியாகரணத்தால் சத்தத்தின் நன்மை போன்று) வேதாந்த சாஸ்திரத்தால் பிரஹ்மம் அறியப்படுவதின்று. அறியப்படாமையால் சம்பந்தமின்று. விஷய சம்பந்தமின்றேற் பலனுமின்றும் எனினின் அது அதனைச் சார்ந்திருத்தலின்.

சமாதானம், பிரஹ்மம் மூற்றிலும் அறியப்படினும் அறியப்படாவிடினும் இங்ஙனங் கூறிய ஆகேஷபம் பொருந்தும்; ஆனலவ்விரண்டு மின்று. எங்ஙனமெனின், பிரஹ்மாதி பதங்களாலும் உலகத்தாலும் அறியப்படுகின்றமையின் மூற்றிலும் அறியப்படாமையின்று. பிரஹ்ம சத்தம் பெரிய பொருளின் சம்பந்தமாய் தேசத்தாலுங், காலத்தாலும், வஸ்துவாலும் அனவச்சின்ன வஸ்துவை நிலை பெறுத்துகின்றது; அங்ஙனமே உலகத்திலும் நானென்று பிரத்தியகான் மாவறியப்படுகின்றமையின் அனவச்சின்ன வஸ்துவை நிலைபெறுத்துகின்றது. இவ்வான்மா வுண்மையிற் பிரஹ்மமேயாம். இதலால் பிரஹ்மம் மூற்றிலும் அறியப்படாததன்று; பிரமாணத்தா லறியப்படாமையின் மூற்றிலும் அறியப்பட்டது மன்று. பதம் நினைப்பிப்பதாலும் உலக வழக்கு பிரமாண மொன்றுண்டெனவுடன் படாமையாலும் பதத்தாலும் உலகத்தாலு மறியப்பட்டது பிரமாணத்தா லறியப்பட்டதாகாது. ஆகையால் பிரஹ்ம மூற்றிலும் அறியப்படாமையான் விஷயமும் அறியப்படாமையாற் சம்பந்தமும் பொருந்துகின்றது. விஷய சம்பந்த மூண்மையால் பலனுமுண்டெனக் கூறுகின்றார் மூவுலகிறை என. ஆண்டு மூவுல கென்பது லாகாயாதி வுலகு சத்தினி நியாயத்தாற் கொள்ளற்பாலது. மூவுலகிறையும் அரியம் என உம்மைத் தொகையாம். தனது மாயாப் பிரதிவிம்ப கூட ஸ்தசைதன்ய பரமாத்மா மூவுலகிறையாம் அவ்வுலகிற்குக் காரணமாதலினுனும் நியந்தாவாதலினுலும்

மூவுலகிறையெனப்படுகின்றூர்; அவரே அரிக்கின்றமையின் அரி யெனப்படுகின்றூர் எதை அரி (அழி)த்தலிறை லென்னுமவர நிகழ அதே அஞ்ஞானத்தை யரித்தலிறை லென்று பொருளாற் பெறப்படுகின்றது. வாக்கியத்தா லுதித்த புத்தி விருத்தியி லேறிய பிரத்திய காத்மா அஞ்ஞானத்தைக் கெடுப்பது. இத னுல் வாக்கியார்த்த ஞானத்தால் அஞ்ஞான நாசம் பிரகாணத் தின் பிரயோஜனமென்று கூறப்பட்டதாகின்றது. கூறவே மூவுல கென்றது அனர்த்தம் அதன் காரணம் ஆன்மாவின் அஞ்ஞானம், புருஷார்த்த மென்பது அஞ்ஞான நாசம் அதன் காரணம் ஆன்ம ஞானம் எனப் பொருளால் அனர்த்தம் அதனேது, புருஷார்த் தம் அதனேது ஆகிய விவைகள் வேறு லாபமாக குறிப்பிக்கப் பட்டன. துதிக்கத்தக்கவனென்பதால் கூறத்தக்கவனென்பதாம். இதனுல் வேதாந்த சாஸ்திரத்திற்குப் பிரத்யகாத்மாவோடு பிரதி பாத்திய பிரதி பாதக லக்ஷண சம்பந்தமாம்; விஷயமும் அன்ய சாதாரணமாகாமையாகக் காட்டப்பட்டது. இங்ஙன மிச்செய் யுட்கு பிரகாணாரம்பத்தில் அவாவப்பட்ட விஷய சம்பந்த பிர யோஜனம் வருணிக்கப்பட்டது. இனி, பத சம்பந்தங்கூறு வாம்:—மூவுலகிறையாமரியினை வணங்குகின்றேன் என சம்பந் தம். எப்படிப்பட்டவரை யென விசேஷணை வேட்கை வரமற் றைய பத மனேத்துஞ் சேர்க்கப்படுகின்றது. துதிக்கத்தக்கவர் என்பதால் வேதாந்தங்களாற் பிரதிபாதிக்கத்தக்கவர் என்று அன்ய சம்பந்த ரீக்கத்தால் விஷயங் கூறப்பட்டது; அங்ஙனமே வேதாந்தங்களிறைற் கூறப்படுவதே என்று சேர்க்கையின்மை ரீக் கஞ் சம்பந்தம் எனச் சம்பந்த நிரூபணமும் எண்டே காணத்தக் கது. மூதிர்ந்த சத்துவம் என்றால் உத்திருஷ்டமான அநுக்கர ணம்; அந்தக்காரணம் சத்துவ விருதியோடிருக்கையில் தத்துவ மஸி வாக்கியத்தி லந்தக்கரண பரிணம வடிவஞான மூதயமாகின் றது. இதனல் சத்துவ சத்தத்தால் லக்ஷனையால் ஞானம் லக்ஷிக் கப்படுகின்றது. அவ்வந்தக் காணபரிணம ரூபமும் சத்துவ காரியமுமாகிய ஞானம் சொரூபஞான வியாப்தமாகவுண்டாகின் றமையின் சத்துவசத்தால் லக்ஷித லக்ஷனையால் சொரூபஞானம்

லக்ஷிக்கப்படுகின்றது. அதனல் முதிர்ந்த சத்துவமெனின் உதாசைதன்ய மென்பது பொருள் அன்மொழித்தொகையால் மேன்மையான சைதன்யர் என்பதாம். பாமேட்டி சட்டினன் என்பதால் பிரஹ்மா முதலானவர்களுக்கும் காரணத்தன்மையால் எல்லாவற்றினு மேன்மை யென்பது பொருள். சர்வகாரணத்தன்மையால் சர்வோத்கிருஷ்டமெனக் கூறப்படுமாயின் "கூடினும் விடினுந் தருமந்தருமியைக் கலக்கும்" என்னு நியாயத்தால் விகாரமும் சேடனை பெறப்பட்டது. அங்ஙனமாகவே நித்திய முக்தத்தன்மை பொருந்தவில்லை யென்னுஞ் சங்கையை ஆகாய திருஷ்டாந்தத்தால் நீக்குகின்றார் தாவுகொண்மூ வென உருவமென்பது சொரூபம்.

எங்ஙனம் ஆகாயம் மேகாதிகளிருப்பினு மின்றெனினும் நிரவயவத்தன்மையால் அசங்கமாயும் நிஷ்கிரியமாயுமிருக்கின்றதோ அங்ஙனமே யிதுவுங் கிரியையின்றியதுஞ் சங்கமின்றியதுமாம் என்பது பொருள். ஆகாசம் "அது வுண்டாக்கியதுவே தழைஞ்சது. வேறுகக் காண்போனின்று. நீ யதுவாயிருக்கின்றாய்" என்பது முதலிய சுருதிகளில் ஜீவபரமாத்மாக்களின் அபேதங் கேட்கப்படுகின்றமையானும் ஜீவனுங்கர்த்தா போக்தாவாயிருத்தல் பிரசித்தியாதலினுனும் மீண்டும் ஆன்மா விகாரமுடையதோ தென்று சங்கித்து ஆன்மாவின் கர்த்துருத்துவம் அந்தக்கரண உபாதியாலாக்கப்பட்டதாகவின் இங்ஙனமின்றெனச் சமாதானங் கூறுகின்றார் சிவனையகன் என; அந்தாவஸ்தையில் ஜீவனே தியமஞ் செய்வதாக விருப்பதால் ஜீவனையகனும். சுழற்றம் மணி போன்று முன்னிலை மாத்திரத்தால் எல்லாக் காரியகாரண சமூகத்தையு மியக்குகின்றமையின் நிர்விகாரத்தன்மை பொருந்தமுடையதென்பது பொருள். முதிர்ந்த சத்துவனை யென்றவிடத்திற் குறிப்பித்த விஞ்ஞான கனத்தன்மையினை வெளிப்படையாகக் கூறுகின்றார் உக்கிரமெனின் அதிகம் அல்லது அடங்காமையாம் தவமெனின் ஞானமாம் இதனல் மிகுந்த ஞானமுடையவனென்பதாம் "எவருக்கு ஞானவடிவந்தவசோ" என்னு முண்டக சுருதியால் பிரஞ்ஞானனென வென்

டது பொருள். இங்ஙனமாய ழுவுலக நாதலெனிய தரிணைய யெப்
போதும் வணங்குகின்றேனென தெய்வ வணக்க பரமாகக் கூறப்
பட்டது. இனி, குரு வணக்க பரமாக விங்ஙனமாம்:—வசிட்ட
தாய் குலனை - சுத்திர கருத்தாவான வேதவியாசரும், ழுவுல
கிறையாமனியினை - ழுவுலக நாதனெனவரியும், பூதிர்ந்த சத்து
வனை-மிகுந்த சத்துவ குணத்தோடுங் கூடியவரும், உத்தரதவனை-
சர்வஞ்ஞரும், மேவருஞ்சத்தி தனையனந்தனை - சாண்டற்கரிய
சத்தி முனிவரின் புத்திரரும், பரமேட்டியிட்டனை - சத்தி முனிவரின் புத்திரரும், பரமேட்டியிட்டனை -
பிரமாவிற்குச் சமானரும், தாவுகாண்ண ழுவில் அமலகம்புனைய
பூருவனை - மேக தீங்கிய வாகாயத்தைதப்போல தீவ வருணரும்
ஆகிய வியாசபகவானை; சிந்தையிற் றினம் பணிந்திருவாம்-மனதா
லெப்போதும் வணங்குவாம். பூரீ வசிஷ்ட பகவானுடைய பரம்
பரையிலுண்டானமையின் பூரீ வியாசபகவன் வசிட்டனென்
னப்படுகின்றார். "நாராயணன் வியாசர், நேரே சங்கரன் சங்
கர்" என்னும் புராணப் பிரசித்த வசனத்தால் ழுவுலகிறையா
மனியினை யென்றது வியாச பகவானை. என்னிடம் சென்றதை
பூலோசனை வழிவருவனம். அல்லது ழுவுலகிறையா மனியென்
பது மட்டில் தேவதா சமஸ்காரமாகவும் மற்றையது குரு சமஸ்
காரமாகவுங் கிலர் கூறுவர்.

(அ-கை)—இங்ஙன முதற் செய்யுளாற் பிரகரணாரம்பத்தி
லுபேக்ஷிக்கப்பட்ட விஷய சம்பந்த பிரயோஜனங்களைக் கூறி
யிப்போது "கர்மத்தாற் சம்பாதிக்கப்பட்ட லௌகிக்களைப்
பிரமஜ்ஞானன் ஆராய்ந்து வைராக்கிய மடைந செய்யப்படாதது
செய்கையாலின்று தாதினை யறியும் பொருட்டு தனன் சுரோத்
திரியராயும் பிரமநிஷ்டராயுமுள்ள குருவை சமித்தைக்
கையிற் கொண்டடைந்தான். அந்த வித்வானனை
வர் சபீபத்தில் வந்தவணமும், நன்றாய்ச் சாந்த சித்தமுடையவனும்
சமதமோதிகூடியவனுமானவன் பொருட்டு எதை லக்ஷணமான
புருஷனை அறிவாலே அந்த உண்மையான பிரமவித்தை
யைச் சத்தியமாகச் சொன்னார்" என்பனை முதலிய வபந்யத்

வாக்கியங்களை ஆதரித்து நித்யா நித்ய விவேகாதி சாதன சதுஷ்டய சம்பன்ன பிரஹ்ம வித்தையின் அதிகாரியைக் கூறுகின்றார்.

சகல லோகமும் தொழிவினிற் சனித்திட மதனற்
புகலு நாசம துறுமெனப் புந்தியூ டோர்ந்தே
யகல லாயில தனைத்தொழி லாலுற லரிதென்
றகில மீதினின் றடைந்தனன் விரத்தியை யொருவன் (2)

(ப-ரை)—ஒருவன் சகல லோகமும் - எல்லா வுலகங்களும், தொழிவினில் - கர்மத்திலும், சனித்திடமதலால் - உண்டாகின்ற மையின், புகலும் நாசமதுறுமெனப் புந்தியூடோர்ந்து - கூறுகின்ற வழிவை யடையுமென்று மனதா லாராய்ந்து, அகில மீதினின்று - எல்லாவற்றினின்று, விரத்தியை - வைராக்கியத்தை, அடைந்தனன் - அடைந்தான். (அ-ரை). என் வைராக்கிய மடைந்தானென்னிற் கூறுகின்றார். தொழிலால் - அனுஷ்டிக்கப்பட்ட கர்மத்திலால், அகல லாயிலத்தை - நாசமற்ற பலத்தை, உறல் அரிதென்று - அடையப்படமாட்டாதென்று என்பதாம்.

(ப-மீ)—புண்ணியவானனை வொருவன் நான்குவித கர்மங்களாற் சம்பாதிக்கப்பட்ட எல்லா வுலகங்களையும் நாசமுடையதாக மனதா லாராய்ந்து கர்மத்தா லழிவற்ற பலம் அடையப்படமாட்டாதென்று எல்லாச் சாதன சாத்தியங்களினின்று வைராக்கியத்தை யடைந்தான் என்பது பொருள். (2)

(அ-ரை)—எல்லாச் சாதன சாத்தியங்களினின்றும் வைராக்கியமடைந்த புருடன் என் செய்தானெனிற் கூறுகின்றார்.

அவிநாசி பதம்மறி வேட்கையறு யழகார்ந்துற வாநெறி
மேவினரோ, தவமாயதி யாநெறி யேயுளமுய்த் தனதுண்
மை யுணர்ந்தவ ணையருநூற், கவியாகிய சற்குரு வைச்சரண்
கதியாகவடைந்தெழு மன்புடனே, புவிமீது பணிந்துபணிந்
தழுதேதொழுதன்குறை நின்று புகன்றனனே. (3)

(ப-ரை)—அவிநாசிபதம் - நாசமற்றவான்மாவை, அறிவேட்கையறுய் - அறியுமிச்சையுடையோனாய், அழகார்ந்துறவாம் நெறி

றியகாயினை - வேறு புகலிடமின்றிய காயடியேனை, மிகும் அன் பதனால் - அபார கருணையால், நீ - தேவரீர், இனிது ஆட்கொடு - பிரியத்தோடு அடிமைகொண்டு, மிளிர் ஆர்கலிஇன்றும் எடுத் குள் - விளங்குகின்ற சம்சாரசாகரத்தினின்றுங் கரையேற்றி யரு ள்வீராகவும் என்பதாம்.

(உ-ம்)—எ பகவானே அதேக குற்றமுற்ற சமுசாரசமுத் திரத்தில் விழுந்தகான் தங்களையே துணையாக வடைந்தேதுக லின், கருணையால் இச் சமுசாரத்தினின்றுங் கரையேற்ற வேண்டும். (4)

(அ-கை)—இங்ஙனஞ் சீடன் கருத்துணர்ந்த குரு அவனுக் குக் கட்டளை யிடுகின்றார்.

விடமமாம்விட யந்தனின் வேட்கையை விடுத்தே
யுடலை யானெனு மூளமொழித் துயர்பர வொளியிற்
றிடமு தாய்நிட்டை யடைந்தனு தினம்பர மான்ம
நெடுவிழ்ஞானங் கொண்டவித்தைகா ரியமய னீப்பாய். (5)

(உ-ரை)—விடமமாம் - உயர்வு தாழ்வான, விடயந்தனின் வேட்கையை விடுத்து - விடயத்துள்ள ஆசையைவிட்டு, உடலை நானெனுமூள மொழித்து - தேகோகமென்னும் புத்தியை யொ ழித்து, உயர்பர வொளியில் - மேன்மையான பரமான்மாவில், நிட்டை அடைந்து - நிலத்து, அனுதினம் - எப்போதும், ப ரமான்ம நெடுவிழ்ஞானங்கொண்டு - பரமான்மாவின் நிலத்த ஞானத்திலல், அவித்தை காரியமயல் நீப்பாய் - அஞ்ஞான கார் யமாய் உடலிலியானெனை நின்ற மயலை யொழிப்பாய் என்பதாம்.

(உ-ம்)—எப்போதும் ஆன்மாகாரமாகத் தொடர்ந்த விருத் தியை யுடையவலுய்க்கிராவண மனன நிருத்தியாசன நிட்டை யிருப்பாயாக. மற்றும் ஆன்ம ஞானத்திலல் மோகமாயும், அவித் தியா காரியமாயும், தேகேந்திரியாதிகளில் ஆன்மபுத்தியாயுமிருக் கின்றபிராந்தியை நீக்கிவிடு. (5)

(அ-கை)—கூறிப்போந்த பொருளை விளித்துரைக்கின்றார்

பஞ்ச கோசத்தில் யானெ னதென்னவே படரு
நெஞ்சை நீத்தெந்த நூன்று நிர்க் குண வறி வுருவாய்
நெஞ்சி லேயிலங் கனந்தசத் தியவொரு நிறைவை
யுன்சி டாதனை வரதமூ மகமென வறிநீ (6)

(ப-ரை)—பஞ்ச கோசத்தில் - அன்னமய மூதலியனைவர்து கோசங்களில், யானென தென்னவே படரும் - நானென்றும் என்ன தென்றும் விரியும், நெஞ்சை நீத்து - புத்தியைக்கெடுத்து எஞ்ஞான்றும் - எப்போதும், நிர்க்குண அறிவுருவாய் - நிர்க்குண மாயும் ஞானவடிவாயும், நெஞ்சிலே யிலங்கு அனைத்த சத்திய ஒரு நிறைவை - இருதயத்தில் விளக்குவதும் அந்த மற்றதும் நித்திய மானதும் ஆன ஒப்பற்ற பூரணவான்மாவை, நீ, அஞ்சி டாது - சோர்வின்றி, அனவரதம் - எப்போதும், அகமென வறி- நானென்று அறிவாயாக வென்பதாம்.

(ப-மி)—அன்ன மயாதியாயும் ஆன்ம பரிச்சின்னவே துவாயும் இருக்கின்ற வைக்து கோசங்களில் யானென தென்னும் புத்தியைவிட்டு, ஞானவடிவாயும் தேசகால வஸ்து பரிச்சேத மற்றதும் பிராகபாவ மூதலியதின் றியதும் சத்துவாதி குண மின்றியதும் புத்திசாக்ஷியாயுமிருக்கின்ற பிரம்மத்தை நானென்று அறிவாயாக "சத்தியம் ஞானம் ஆனந்தம் பிரம்மம் ஆனந்தம் பிரம்ம மென்றறியவேண்டும். ஆனந்தம் ஆத்மா. இவ்வான்மா பிரம்மம். சாக்ஷியும் ஞானமும் கேவலமும்" என்னுமிவை மூதலிய சுருதிகளால் நானே பிரம்மமாயிருக்கின்றேனென வறிவாயாக. (6)

(அ-கை)—ஆக்ஷேபம் சாக்ஷியந்த மற்றதனைப் பிரம்மத்திற்குக் கூறப்பட்ட அந்த மின்மை பொருந்தாது. எனெனின், பிரம்மம் ஆன்மாவாதலினாலும் ஆன்மாவுக்கு சரீரந்தோறும் ஜன்ம மரணமாகிய நியமலிங்கத்தால் அனுமிக்கப்பட்ட பேதமுடையதாலுமாம். உலகத்திலும் நீ நானென்னும் பேதப் பிரசித்தியாலும், பேதமுடையதா யிருத்தலால் என்று சங்கித்து நியமலிங்கம் வியதிகரண அநித்தியினாலும் (சடத்வத்திலின்மை)

ஆமக விருத்தமாதலினுலும் கூடாதென வபிப்பிராயங்கொண்டு உலகப்பிரசித்த பேதம் பிராந்தி மாத்திரம் என விரண்டு திருவ்டாந்தங்களாற் கூறுகின்றூர்.

நீர்பேதம் பன்மையினை யினன்றனக்கு நிகழ்த்தியிடு
நீர்மை போலு, மார்குடங்க ளாதிபன்மை யம்பரத்திற்
காற்றியிடு மதனைப் போலுஞ், சீர்சருவ காலமவி காரமெனச்
செறினினது மதிச்சான் றிற்கே, யேர்மதியின்
பேதமது பன்மையினை யியற்றுமென விதயத் தோர்வாய்

(ப-ரை)—இனன்றனக்கு - சூரியனுக்கு, நீர் பேதம் - வாவி கூப தடாகாதி தண்ணீரின் பேதம், பன்மையினை - நாநாத்துவத்தை, நிகழ்த்தியிடும் நீர்மைபோலும் - உண்டாக்குந்தன்மைபோலும், அம்பரத்திற்கு - ஆகாயத்திற்கு, ஆர்குடங்களாதி-மண்ணுற் பொருந்திய குட முதலியனவை, பன்மை - நாநாத்துவத்தை, ஆற்றியிடும் அதனைப்போலும் - உண்டாக்குவதைப் போலும், எர்மதியின் பேதமது - உபாதியாகப்பொருந்திய அந்தக்கரண வேற்றுமையானது, சீர் - சிறப்பாய், சருவ காலம்-எப்போதும், அவிகாரமென - விகாரமின்றி, செறி னினது மதிச்சான்றிற்கு - பொருந்திய வுனது புத்திசாக்ஷியான ஆன்மாவிற்கு - பன்மையினை, நாநாத்துவத்தை - இயற்றுமென - உண்டாக்குமென்று, இதயத்தோர் வாய் கருதிக்கொள்வாயாக வென்பது.

(ப-ம்)—ஒரே சூரியன் நீரின் பேதத்தால் நாநாவாவதுபோலும் ஒரே ஆகாயங் கடாதிகளின் பேதத்தால் நாநாவாவது போலும் உன் புத்திசாக்ஷியாகிய விகாரமற்ற ஜான்மாவும் புத்தியின் நாநாத்தன்மையால் பேதமுடையதாகத் தோன்றுகின்றது. ஒரே தேவன் எல்லாப் பூதங்களிலும் ரகசியன் சர்வ வியாபி சர்வ பூதத்திற்கு மந்தராத்மா. கர்மத்தைக்காண்போன் சர்வ பூதத்திலும் வசிப்பவன் சாக்ஷியும் சேதனமும் கேவலமும் நிர்க்குணமும் ஒருவராயிருந்து நாநாவாகச்சரித்தார். ஒன்றுயிருப்பவரை நாநாவாகக் கற்பிக்கின்றூர்கள். ஒன்றுகவே பார்க்க

வேண்டும். ஈண்டு நாநாவற்பமுமின்று. ஒன்றே அத்வைதம் ஒரே பூதாத்மா எல்லாப்பூதங்களிலும் நிலைத்திருக்கின்றார். ஒன்றுகவும் நாநாவாகவும் காணப்படுகின்றார். ஜலசந்திரன்போன்று வேறு பிரிக்கப்படாதது பூதங்களில் வேறு பிரிக்கப்பட்டது போன்றிருக்கின்றது" என்பது முதலிய சுருதி ஸ்மிருதிகளால் ஆன்மா வொன்றெனக் கூறப்பட்டிருத்தலின் கூறிய அனந்தம் பொருந்தியது (7)

(அ-கை)—ஆகேபம் அங்ஙனமாயினும் ஆன்மா சம்சாரி யாதலினல் எங்ஙனம் பிரஹ்மமாத லென்ற சங்கித்துச் சகல சம்சார தர்மத்தோடுங் கூடின. அந்தக்கரண வுபாதியாலாக்கப்பட்டமையின் ஆன்மா சம்சாரி போன்றிருக்கின்றது. உண்மையில் அசம்சாரியே யெனக் கூறுகின்றார்.

சூரிய னெளியை யொப்பச் சுயம்பிர காச மாகி
யேரவி காரி யாகி யிருக்குமுன் னலென் ஞான்றுஞ்
சீருல கினர்தஞ் சித்த சரிதத்தைத் தெரிக லாலே
யாரசம் சாரி யென்றே யறிகுதி மைந்த னேநீ. (8)

(ப-ரை)—சூரிய னெளியை யொப்ப - சூரியப் பிரகாசம் போன்று, சுயம் பிரகாசமாகி - தானே விளங்குகின்ற, எர் அவி காரியாக இருக்கும் உன்னல் - பொருந்திய விகாரமின்றி யிருக்குமுன்னல், சீர் உலகினர்தம் - சிறந்த வுலகத்தவரது, சித்த சரிதம் - புத்தியின் சஞ்சாரம், எஞ்ஞான்றும் - எப்போதும், தெரிதலால் - அறியப்படுகின்றமையின், ஆர் அசம்சாரியென்று - பொருந்திய சம்சாரமின்றியவனென்று, மைந்தனே - சீடனே!, நீ அறிகுதி - நீ யறிவாயாக வென்பதாம்.

(ப-ம்)—எல்லா விஷயங்களையும் ஒரேகாலத்தில் விளக்குகின்ற சூரியப் பிரகாசம்போன்று சுயம் பிரகாசமாய் விகாரமின்றிய வுன்னல் பிராணிகளின் புத்தி சஞ்சாரமனைத்தும் அறியப்படுகின்றதால் ஆன்மாவான வுனக்குப் பந்தமின்று. (8)

(அ-கை)—ஆகேபம் ஆனல் ஆன்மாவிகாரமின்றியதெனின் இச்சரீரத்தில் பரிணமி யார்? புத்தியே பரிணமி ஆன்மாவன்

உபாகத்தை யபேகூத்தலிலுலும், கைதன்ய பலத்தைப் பற்று தலிலுலும் சத்த முதலிய பொருள்களின் விளக்கத்தை யுண் டாக்குகின்றது. புத்திக்கு அறியப்படும் பதார்த்தத்தோடுண்டா மவ்வுபாகமும் கிரமமாகவும் சில பொருள்களோடு முண்டாகின் றது. அதுவும் சில விஷயங்களின் விளக்கமாகிய காரியத்தால் கருதத்தக்கது. சில விஷயங்களோடு உண்டா முபாகமும் புத் தியின் பரிணமமின்றிப் பொருந்துவதின்று. இங்ஙனமாகவே புத்தி கிரமமாக விஷயங்களோடு பரிணமமாகிய வுபாகத்தை யபேகூத்து விஷய நிச்சயஞ் செய்கின்றது. ஆகையால் வீட யங்கள் சில அறியப்பட்டனவாகவும் அறியப்படாதனவாகவும் இருக்கின்றன. இதனற் புத்தியே பரிணமமுடையது ஆன்மா வன்று. (9)

(அ-கை)—ஆகூகபம் புத்தியைப்போன்று ஆன்மாவும் கிரம மாகக் காணும் லிங்கத்தால் தனது விஷயமான புத்தி முதலிய வற்றை விளக்கும்பொருட்டுக் கிரமமாகப் பரிணமம் அனுமானிக் கத் தக்கதாம் என்றுசங்கித்து புத்தி யதன் விருத்தி ஆகிய இவை களை ஒரோகாலத்தில் ஆன்மா விளக்குகின்றமையின் இங்ஙன மின்றெனக் கூறுகின்றார்.

மதிவி ருத்திகள் சந்தத மலருந்தன் ஞளியா
லதனி னலவி காரியிவ் வான்மநல் லொளியுடம்
விதமு றும்பரி ணமிய தாகுமேல் விரியிம்
மதிவி ருத்திகண் ஞாதவஞ் ஞாதமாய் மலரும். (10)

(ப-ர)—தன்ஞளியால் - ஆன்மப் பிரகாசத்தால், மதி விருத்திகள் - புத்திவிருத்திகள், சந்ததம் - எப்போதும், அல ரும் - விளங்குகின்றன, அதனினல் - அவ்வேதுவாய், இவ்வான் மநல்லொளியும் - பிரகாசவடிவ வபரோகூவான்மாவும், அவிகாரி- விகாரமின்றியதாம், விதமுறும் - நாநாவிதத்தோடுங்கூடின - பரிணமி அது ஆகுமேல் பரிணமமுடையதாக அவ்வான்மாவாகு மேல், விரி-விரிந்த, இம்மதி விருத்திகள் - இந்தப் புத்திவிருத்தி கள், ஞாதவஞ்ஞாதமாய் மலரும் - அறியப்பட்டனவாகவும் அறி யப்படாதனவாகவும் விளங்கும் என்பதாம்.

(ப-ம்)—சித்ரூபவான்மா புத்திவிருத்திகளை யெல்லாம் எப்போது மறிகின்றதாகலின் விகார முதலிய பரிணாமமற்றதாம் பரிணாமமுடையதேதல் புத்திவிருத்திகள் அறியப்பட்டனவாகவும் அறியப்படாதனவாகவும் ஆகும். அது பொருந்தாது. எனெனின், எல்லாப் புத்திவிருத்திகளையும் ஆன்மா வொரே காலத்தில் விளக்குகின்றது. (10)

(அ-கை)—ஆன்மா பரிணாமமுடையதேல் அறியப்பட்ட அறியப்படாத பிரசங்கத்தாற் றோடங் கூறப்பட்டது. ஆண்டிவ்வா சங்கையாம் இஃதெதங்களுக்குத் தோடமின்று அங்ஙனமே காணப்படுகின்றமையின் எனிற் கூறுகின்றார்.

பரிசுத்த வறிவா முன்றற் பகலிர வுளத்திற் பாயுஞ்
சரிதங்க ளெவையுங் காணுந் தகைமையா மதனி னீனே
யெரிபுத்திப் பகுப்ப தான வியல்புனக் கிலதெப் போது
மூரமந்த வேது வாலே யொப்பிலா யுளத்தி னேடே (11)

(ப-னை)--பரிசுத்தவறிவா முன்னல் - கனங்கமின்றிய சித்து வடிவ ஆன்மாவான வுன்னல், பகல் இரவு உளத்தில் பாயும் சரிதங்கள் எவையும் - எப்போதும் புத்தியின் சஞ்சார மனைத்தும், காணுந்தகைமையாம் - அறியப்படுவனவாம், அதனினல் - அவ்வேதுவால், உனக்கு எரிபுத்திப்பகுப்பதான வியல்பு - பிரபையுடைய புத்தியின் வேறுபாடான தன்மை, எப்போதும் இலது ஒருபோதுமின்று, உரம் அந்த ஏதுவாலே - நிச்சயமான அக்காரணத்தால் உளத்தினேடு - புத்தியோடு, ஒப்பிலாய் நீசமற்றவன்.

(ப-ம்)—அசங்க சித்ரூபவான்மாவான வுன்னல் புத்தி சஞ்சாரப் பிரகாரம் யாண்டு மறியப்படுகின்றமையின் புத்தியின் பேதகுணமான பரிணமித்தன்மை உனக்கின்று. இதனாற் புத்தியே பரிணமியாதலின் ஆன்மா புத்தியின் வேறென்பது பொருள். (11)

(அ-கை)—ஆகேபம் புத்தியே அறிவதும் அறியப்படுவதுமாயிருத்தலின் ஆன்மா புத்தியின் வேறென்றது பொருத்தமின்

றியது. ஆகையால் புத்தியை யறிய காரணமான சிதாத்துமா புத்திக்கு வேறுக வின்றென புத்தமதானுசாரிகளால் அங்கீகரிக் கப்பட்டிருத்தலின் என்று சங்கித்துக் கூறுகின்றார்.

விடயமது தமின்விடயத் தன்மையது மெவ்வகையால் வெளிய தாகுந், திடமதிக டமின்மாட்டு மையமின்றித் திருசியத்வஞ் சித்த மாகு, நெடியவிது வெதுவெலிங் கத னேனே நிகழ்மதியின் விருத்தி யாவும், படர்விடயத் தன்மை யுதாற் குடமாதி கடுப்பப்பர விடய மாமே. (12)

(ப-ரை)—விடயமதுதமின் - விடயங்களில், விடயத்தன் மையதும் - திருசியத்வமும், எவ்வகை - எங்ஙனம், வெளிய தாகும் - வெளிப்படையோ, திடமதிகள் தமின் மாட்டும் - அங் ஙனம் திடமான புத்திகளிடத்திலும், ஐயமின்றி - சந்தேகமின்றி, திருசியத்வம் - திருஷ்டாவாலறியப்படுந் தன்மை, சித்தமாகும்- வெளிப்படையாம், இங்கு - ஈண்டு, நெடியவிது - நீடித்தவிது, எதுவெல் - எவ்வேதுவாலோ, அதனனே - அத்திருசியத்தன்மை யானே, நிகழ்மதியின் விருத்தியாவும் - விளங்குகின்ற புத்தி விருத்தியனைத்தும், படர் விடயத்தன்மையதால் - விரிந்த விட யமாந் தன்மையாயிருத்தலால், குடமாதிகடுப்ப - கடாதிகளைப் போன்று, பரவிடயமாம் - வேறொன்று லறியப்பட்டனவாகளை யாம்.

(ப-மீ)—சௌத்ராந்திகன், வைபாஷிகன், யோகாசாரன் மாத்தியமிகன் ஆகிய நிப்பவுத்தருள் சௌத்ராந்திகரெல் "நிர் கிப்பது கிரகிக்கப்படுவது என்னும் புத்திபேதமுடையதைப் போற் குறிக்கப்படுகின்றது" என்ற விப்புத்தர் வாக்கியத்தில் புத்தியே கிரகிப்பதுங் கிரகிக்கப்படுவதுமென் றங்கீகரித்திருக் கின்றமையின் சம்சய மின்றிப் புத்திகளில் திருசியத் தன்மை மிக வெளிப்படையாம். கட முதலிய விடயங்கள் ஜடமாதை யாற் றிருசியமென்று வாதிப் பிரதிவாதிகளுக்குச் சம்மதம் போன்று உன் மதத்திலும் திருசியத் தன்மையாகி திருஷ்டா வால் வியாபிக்கப்படல் அவ்விரண்டு வாதிகளுக்குஞ் சம்மதம்.

றியது. ஆகையால் புத்தியை யறிய காரணமான சிதாத்துமா புத்திக்கு வேறுக வின்றென புத்தமதானுசாரிகளால் அங்கீகரிக் கப்பட்டிருத்தலின் என்று சங்கித்துக் கூறுகின்றார்.

விடயமது தமின்விடயத் தன்மையது மெவ்வகையால் வெளிய தாகுந், திடமதிக டமின்மாட்டு மையமின்றித் திருசியத்வஞ் சித்த மாகு, நெடியவிது வெதுவெலிங் கத னேனே நிகழ்மதியின் விருத்தி யாவும், படர்விடயத் தன்மை யுதாற் குடமாதி கடுப்பப்பர விடய மாமே. (12)

(ப-ரை)—விடயமதுதமின் - விடயங்களில், விடயத்தன் மையதும் - திருசியத்வமும், எவ்வகை - எங்ஙனம், வெளிய தாகும் - வெளிப்படையோ, திடமதிகள் தமின் மாட்டும் - அங் ஙனம் திடமான புத்திகளிடத்திலும், ஐயமின்றி - சந்தேகமின்றி, திருசியத்வம் - திருஷ்டாவாலறியப்படுந் தன்மை, சித்தமாகும்- வெளிப்படையாம், இங்கு - ஈண்டு, நெடியவிது - நீடித்தவிது, எதுவெல் - எவ்வேதுவாலோ, அதனனே - அத்திருசியத்தன்மை யானே, நிகழ்மதியின் விருத்தியாவும் - விளங்குகின்ற புத்தி விருத்தியனைத்தும், படர் விடயத்தன்மையதால் - விரிந்த விட யமாந் தன்மையாயிருத்தலால், குடமாதிகடுப்ப - கடாதிகளைப் போன்று, பரவிடயமாம் - வேறொன்று லறியப்பட்டனவாகளை யாம்.

(ப-மீ)—சௌத்ராந்திகன், வைபாஷிகன், யோகாசாரன் மாத்தியமிகன் ஆகிய நிப்பவுத்தருள் சௌத்ராந்திகரெல் "நிர் கிப்பது கிரகிக்கப்படுவது என்னும் புத்திபேதமுடையதைப் போற் குறிக்கப்படுகின்றது" என்ற விப்புத்தர் வாக்கியத்தில் புத்தியே கிரகிப்பதுங் கிரகிக்கப்படுவதுமென் றங்கீகரித்திருக் கின்றமையின் சம்சய மின்றிப் புத்திகளில் திருசியத் தன்மை மிக வெளிப்படையாம். கட முதலிய விடயங்கள் ஜடமாதை யாற் றிருசியமென்று வாதிப் பிரதிவாதிகளுக்குச் சம்மதம் போன்று உன் மதத்திலும் திருசியத் தன்மையாகி திருஷ்டா வால் வியாபிக்கப்படல் அவ்விரண்டு வாதிகளுக்குஞ் சம்மதம்.

புத்தி திருசியமென வுபயவாதி சம்மதமாதலின் அதன் வேறுன சாகூஷியிலல் கண்ருக அறியப்பட்டது திருசியமாதலின் கடாதி போன்று என்பது பொருள். (12)

(அ-கை)—அங்ஙனமாங் கால்புத்திகள் தங்களாலும் அன்னி யத்தாலும் அறியப்படுவன வாகுக; விரோதமின்மையா லென்று சங்கித்துக் கூறுகின்ருர்.

அன்னியமா மதனிரு லனவாத மெதனிரு லறிவதா குந், தன்னியல்பை யதனிரு லறியாத தன்மைபதிவ் விட யம் யாது, மின்னவகை யன்னியத்தா லிவ்வுளங்க ளிலங்கி யிடு மியல்பி ருலே, தன்னியல்பை யறியாத தன்மையதாஞ் சகவிடய மனைவகள் போன்மே. (13)

(ப-ரை)—இவ்விடயம் யாதும் - இந்த விடயங்களெல்லாம், அனவாதம் - எப்போதும், அன்னியமா மதனிரல் - தமக்கு வேருகிய புத்தியிரல், எதனிரல் - எவ்வேதுவால், அறிவதா கும் - அறியப்படுவனவாகுமோ, அதனிரல் - அவ்வேதுவால், தன்னியல்பை-தமது தன்மையை, அறியாத தன்மையது-அறியு மியல்பின்றியன, இன்னவகை - இங்ஙனம், இவ்வுளங்கள்-இந்தப் புத்திகள், அன்னியத்தால் - தமக்கு வேருகிய ஆன்மாவால், இல ங்கியிடும் இயல்பிருலே - விளங்குந் தன்மையிருனே, தன்னிய ல்பை யறியாத தன்மையதாம் - தமது தர்மத்தை யுணராதன வாம், சகவிடய மனைவகள்போன்று - உலகவிடயங்கள் போன்று.

(ப-மி)—கடாதி விடயங்கள் அன்னியரை லறியப்படுவனவா ப்புத் தங்களால் தங்களை யறியாதனபோன்று புத்திகளும் தங்களுக் கன்னிய சாகூஷியிரு லறியப்படுவனவாய்த் தாங்கள் தங்களை அறி வனவன்று. எனனின், கடாதி விடயங்கள் காண்பதும் காணப் படுவதுந் தாமேயாகில் கர்ம கருத்துருபாவ விரோதமாம் அங்ங னமே னண்டும் விரோதமாம். புத்தி, யதன் விருத்திகளும் கட முதலியன போன்று அறியப்படுவனவாதலின் வேருன சாகூஷி யங்கீகரிக்க வேண்டியது வேண்டவே புத்தி சாகூஷியும் ஞானவடி வமும் பரிச்சேதமற்றதும் சக்தியமும் குணமற்றதும் ஹிருதயத்

துள்ளதும் ஆன வான்மாவை பிரஹ்மமா யிருக்கின்றேனென்ற அறியென முன்னதனோடு சம்பந்தமென்பது பொருள். (13)

(அ-கை)—ஆகேபம் பிரஹ்மம் ஆன்மாவாதலிலுமும், ஆன்மா வகங்கார குணமுடைய தாதலிலுமும் பிரஹ்மம் நிர்க்குணமென்னுங் கூற்றுப் பொருத்தமின்றியதாமென வாசங்கித்து அகங்காரம் புத்தியின் பரிணாமமாதலினங்ஙனமின்றெனக் கூறி புத்திக்கு இரண்டு விருத்திகளைக் கூறுகின்றார்.

அனவாதம் விவகார தசையதனில் விடயவா காரமாகி, மனம்விருத்தி யொருவகையாய் மனந்தனக்கு மருவுமனை விடய மாக்கி, நனியகமென் றுன்னுமற்ற விதமாயும் விருத்தியொன்று நனைக லாகுந், தனதொளி யிலிலங்கலான் மதிதருமந் தனக்கிலையென் றுளத்தி லோர்வாய். (14)

(ப-னை)—மனந் தனக்கு - புத்திக்கு, அனவாதம் - எப்போதும், விவகார தசையதனில் - விவகார காலத்தில், விடய வாகார மாகி - திருசி யாகாரமாய், விருத்தி - எண்ணம், ஓர் வகையாய்-ஒரு பிரிவாய், மனும் - பொருந்தும், மருவுமனை - பொருந்திய வவ்விட யாகார விருத்தியை, விடயமாக்கி - திருசியமாக்கி, விருத்தி யொன்று - ஓர் எண்ணம், நனியகமென் றுன்னும் - மிகவும் நானெனக் கருதுவதாய், மற்ற விதமாய் - வேறோர் பிரிவாய், நனைகலாகும் - பொருந்துவதாகும், மதிதருமம் - புத்தி தருமமான இவ்விருவகை விருத்திகளும், தனதொளியி லிலங்கலான் - ஆன்ம விளக்கத்தால் விளங்கப்படுவனவாகலின், தனக்கிலையென் றுளத்தி லோர்வாய்-அறியுமான்மாவான வெனக்கித் தருமமின் றென மனதில் நிச்சயிப்பாயாக.

(ப-மீ)—வியவகார தசையில் எக்காலத்தும் புத்திக் கிரண்டு வித விருத்திகளுண்டு. அதிலொரு விதம் திருசிய கடாதி யாகாரமாயிருக்கும் மற்றையது அவ்விருத்தியை விடயம் பண்ணுவதாக கடத்தைக் காண்கின்றேனெனக் காண்போ ஞகாரமாயுளது. இவ்விரண்டுவித விருத்திகளும் சித்வடிவ வான்மாவால் அறியப்

டுதலின் புத்தியின் தர்மங்களே ஆன்மாவின் தருமமன் றென் பது பொருள். (14)

(அ-கை)—அங்ஙனமாமேல் அகங்காரம் ஆன்மாவின் தரும மாக வினங்குதல் எங்ஙனங் கூடுமெனின், அத்தியாசத்தாற் கூடு மெனக் கூறுகின்றார்.

தனதி னியல்பான் மனத்தினுடைத் தனது குணமாயி னும் புருடன், றனது தரும மெனப்பிறங்கு மெதனு லத னுற் றுணரென், மனதின் விருத்தி யிது தனையே மடமை மிகுத்த மகியோர்கள், பினமி தில்லா வான்மகுண மெனவே பிறழ்ந்திங் கறிகுவரால். (15)

(ப-மை)—தனதின் இயல்பால் - நானென்னும் விருத்தி இயல்பாக, மனதினுடைத்தனது குணமாயினும் - புத்தியின் சொந்த குணமேனும், புருடன்றனது - புருடனது, தருமமென, தருமம் போன்று, பிறங்கும் - வினங்கும், எதனுலதனல் தான்- எவ்வேது வானிங்ஙனம் வினங்குகின்றதோ அவ்வேதுவானே- நானென் - அகமென் றெழாநின்ற, மனதின் விருத்தியிதனை யே - இந்தப் புத்திவிருத்தியையே, மடமை மிகுத்த மகியோர் கள் - இப்புவியிலுள்ள அறிவீனர்கள், பினமதில்லா - வேறு படாத, ஆன்மகுணமென - ஆன்மாவின் குணமென்று, பிறழ்ந் திங்கறிகுவர் - விபரீதமாய்ச் சம்சாரத்தில் அறிவார்கள்.

(ப-ம்)—அகங்காரம் இயல்பாகப் புத்தியின் குணமேனும் அவிவேகத்தினுல் ஆன்மாவின் குணம் போன்று வினங்குகின்றது. அதனுல் அவிவேகி ஜனம் ஆன்மகுணமாக வறிகின்றதேனும் விவேகிஜனம் அங்ஙனமறிகின்றதின் றென்பது பொருள். (15)

(அ-கை)—அகங்காரமான் மதர்மமாகாதாயின் அக்கால் அவ் வகங்காரமுண்டாகா திருத்தலே நலம் என்றுல் அங்குக் கூறு கின்றார்.

உலகினர் தமைமோ கிக்கு முயராதற் பவித்தி டாதே
லுலகரித் தொழில்க ளொன்று மனுபவித் திடலொ ணாதே
யிலகது வான்ம தன்ம மெனக்கொள விலதெந் நான்று
பலவிட யாணுபோகப் பயனில காமக் காலே. (16)

(ப-ரை)—உலகினர்தமை மோகிக்கும் - ஜனங்களை மயக்
கஞ் செய்வதான, உயர் அது உற்பவித்திடாதேதல் - விவகார
மென்னையதான அவ்வகங்காரம் உண்டாகாதாயின், உலகர் -
உலகத்தார், இத்தொழிகள் ஒன்றும் - ஸ்நானபோஜன முதலிய
வித்தொழில்களொன்றேனும், அனுபவித்திடல் - அனுபவித்த
லானது, ஒணாது - பொருந்தாது, இலகது - விளங்குகின்ற
வவ்வகங்காரம், எந்நான்று - எக்கால், ஆன்மதன்மமெனக்
கொளவிலது, ஆன்மாவின் தர்மமென வறிதலின்றே, அக்கால-
அந்நான்று, பல விடயாணு போகப்பயனிலதாம் - பல விடயங்
களை யனுபவிக்கும் பல மின்றியதாகும்.

(ப-ம்)—தேவதைகளையும் மயக்கும் அவ்வகங்கார விருத்தி
யுண்டாகாதேதல் நான் செய்கின்றேன் நான் அறிகின்றேன் என்
பது முதலிய விவகார மார்க்கத்தை ஜனம் அனுபவிக்காது.
ஆகையால் அகம் விருத்தியுண்டாதல் அவசியமாம். அத்தியா
சத்தால் அகம் விருத்தி ஆன்மகுணமாக அனுபவிக்கப் படாதேதல்
விஷயானுபவம் பொருந்தாது. எனெனின் "ஆன்மாவின் காமத்
தின் பொருட்டு எல்லாம் பிரியமுடையதாகின்றது. ஆகும்
பழத்தை நன்றாய்ப் புசிக்கின்றது. நிர்க்குணம் குணத்தை யனுப
விப்பது" என்னு மிவை முதலிய சுருதியான் ஆன்மா விவகார
தசையால் விஷயானுபவமுடைய தென்னும் வெளிப்படை வீ(மை)
தும். ஆகையால் அத்தியாச வழியாக விவகார காலத்தில்
அகங்காரம் ஆன்ம தர்மமென வங்கீகரிக்கவேண்டு மென்ப தற்
பொருள். (16)

(அ-கை)—விபக்ஷத்தில் (ஆன்மாவின் குணமன்று என்ப
தில்) தோஷஞ் கூறுபவராய்க் கூறிப்போந்த பொருளைப் பின்
னிரண்டு செய்யுட்களால் விரிக்கின்றார்.

மனத்தனக்கு விடயவுரு விருத்தியொரு விதமாயே மருவு மாயி, னுனுங்குடங்கண் முதலியன வொப்பாகு மூளவிருத்தி யதனை நாடிடப், பனும்புருடன் றனதுணர்வும் பரிணம மதுதனையேயபற்றுதா யின், மனுங்குடங்க ளாதிய போல் விருத்தியதே மருவுமென மதித் திடாயே. (17)

(ப-ரை)—மனத்தனக்கு - மனதிற்கு, விடயவுருவிருத்தி-விடயாகாரமான விருத்தி, ஒருவிதமாய் - ஒரே விதமாகவே, மருவுமாயின் - பொருந்துமாயினும், உனுங்குடங்கள் முதலியன - கருதுங்குட முதலியவற்றின், ஒப்பாகும் - சமாகாரமாகும், உளவிருத்தியதனைநாடி - மனதின் விருத்தியை விடயமாக்கி, பனும்புருடன் றனதுணர்வும் - சொல்லாநின்ற திருஷ்டாவினை காரஞானமான, பரிணமமது தனையேயபற்றுதாயின் - பரிணமத்தை யடையாதாயினும், மனுங்குடங்களாதியபோல்-பொருந்திய திருசிய குடமுதலியனவேபான்று, விருத்தியதே-திருசிய விருத்தியே, மருவுமென மதித்திடாய் - ஒரே விதமாய மருமெ என கருதுவாயாக.

(ப-ம்)—மனதிற்கு விடயாகார விருத்தி யொன்றே யுண்டாயினும் கடாகார புத்தி விருத்தியை யபேக்ஷித்து அத்தியாசத்தினல் ஆன்மாவான திருஷ்டாவினகார பரிணமமங்கீகரிக்கப்படுவதின் றுயினும் அக்கால் திருசியாகார விருத்தி யொன்றே யுண்டாம் திருஷ்டா வினகார விருத்தியே யுண்டாகாது. (17)

(அ-கை)—ஆகேகூபம் அங்ஙனமே யாகுக எங்களுக்கு யாதெதி யெனிற் கூறுகின்றுர்.

அறிவானு மறிபொருளு மாகியநல் லான்மாவும் புந்தி தானுஞ், செறியாவினென் னபிமான மதுவாத லிலதாகித் திதிய தாங்காற், றிறமான வபிமான வழித்தாய விவகாரந் திகழ்வ தான, நெறியீதை யொருளுான்று மூலகிலுள நிகிலருமே மருவி டாரே. (18)

(ப-ரை)—அறிவானும் அறிபொருளும் - திருஷ்டாவும் திருசியமுமாகிய, நல்ல ஆன்மாவும் புந்திதானும் - ஆனந்தவடிவ வான்மாவும் புத்தியும், செறி - பொருந்திய, யான் என்ன - நான்

என்று, அபிமான மதுவாதல் இலதாகி - அபிமான மற்றதாய், திதியதாங்கால் - நிலைபெறுமாயின், திகழ்வதான - விளங்குகின்ற, நிறமான - நிடமான, அபிமான வழித்தாய விவகாரம் - அபிமானத்தை முன்னிட்ட விவகாரமான, நெறியீதை - இம்மார்க்கத்தை, உலகிலுள நிகிலருமே - உலகத்தவ ரனைவரும், ஒரு ருான்றும் - ஒருபோதும், மருவிடார் - பொருந்திடார்.

(ப-ம்)—காண்பதாயும் காணப்படுவதாயுமுள்ள சிதாத்மா புத்தி ஆகிய விவைகள் நானென்ற திருஷ்டாவி ருகார பரிணமமின்றிய தாகுங்கால் நானறிகின்றேன் நான் செய்கின்றேன் என்ற வபிமானத்தை முன்னிட்ட விவகார மார்க்கத்தை ஜனம் அனுபவிக்கமாட்டாது. இது கருத்து, காண்போ ருகாரமாகவும் காணப்படுவதி ருகாரமாகவும் புத்திவிருத்தி யிரண்டு பிரகாரம். ஆண்டு கண் முதலிய பொறி வழியாகக் கடாதி பொருள்களோடு புத்தி சம்பந்த முடையதாகையில் திருசி யாகாரமாய் பரிணமிக்கின்றது. இங்ஙனமாகையில் புத்தி சாகூியாக அதில் பிரதிவிம்பித்த வான்மாவினிடத்தில் காண்போ ருகார பரிணமம் அத்தியாசம் பண்ணப்பட்டிருத்தலின் ஆன்மாவும் காண்போ ருகார மாயதுபோ லாகின்றது. அதனல் ஆன்மா நான் செய்கின்றேன் நான் அனுபவிக்கின்றேன் என்பது முதலிய விவகாரம் உடையதுபோ லாகின்றது. நிரவயவமும் சித்து வடிவமுமான வான்மா வியல்பாக விவ்விவகார முடையதன்றனைப் பொருள். (18)

(அ-ஈக)—அகங்காரத்தை முன்னிட்டது விவகாரமென்னும் பொருளில் சுவானுபவத்தை பிரமாணிக்கின்றார்.

நோக்கு கின்றேன் யானென்ன முன்னநுண் மதியினுன்னி, நோக்கிடும் விழியைப் பின்னர்விட யுத்நிறுவைபோலித் தாற்போற், கேட்குத லாதியான கிளர் வெளி யாதியின்ற, னீக்கருங் குணங்க ளநுநிலைமையிற் தனகேயன்றே. (19)

(ப-ஈ)—யான், நோக்குகின்றேன்-பார்க்கின்றேன், என்ன முன்னம் - என்று முதலில், நுண்மதியின் உன்னி - நுட்பமான

புத்தியாற் கருதி, பின்னர் - அவ்வெண்ணைத் தணந்தாம், விழி யை - கண்ணை, விடயத்து - திருசியங்களில், நுழைவித்து - சம் பந்தமாக்கி, நோக்கிடும் - புருடன் அத்திருசியத்தைக் காண்பன், போல் - அங்ஙனமே, கேட்குதலாதியான - கேட்கப்படுவனவா தியை, கிளர் வெளியாதியின்றன் - விளங்கும் ஆகாயாதிகளின், நீக்கருங் குணங்களுடும் - நீக்கற்காரிய சத்தாதி குணங்களிடத்தி லும், நிலைமையித்தகையே - முன் கேட்கின்றனென நுண்மதி யாற் கருதி பின் செவியைச் சத்தாதி குணங்களிற் சம்பந்திப் பித்து அதனை அறிவன்.

(ப-ம்)—முதலில் கான் பார்க்கின்றனனைப் புத்தியிற் சிந் தித்து பின்னர் விழியைத் தனது விஷயமான ரூபத்தைக் குறித் துப் பிரோரணை செய்கின்றன். அங்ஙனமே கேட்கின்றன் மூகர்கின்றனென செவி முதலியவற்றைத் தங்கள் விஷயமான சப்த முதலியவற்றைக் குறித்து ஏவுகின்றனென்பது பொருள்.

(அ-கை)—சுவானுபவப் பிரமாண சித்தியின் பொருட்டுச் சுருக்கிக் கூறுபவராய்த் தொடங்கிய பொருளை முடிக்கின்றார். ஒருவரு மகங்கா ரத்தை விடுத்தொரு பொழுதுஞ் செய்யு மருவிவ காரந் தன்னை யடைந்திட லகிலத் தின்றுந் தெரிதரிவ் வேது வாலே திகழ்விவ கார மார்க்க மருவிட வேதுத் தன்மை மதிக்குறுந் திடம தாமே. (20)

(ப-மை)—அகங்காரத்தை, விடுத்து-நீத்து, ஒருவரும்-யாதா மொருவரோணும், ஒருபொழுதும் - ஓர் காலத்திலேனும், செய் யும் - இயற்றற்பாலதாய, விவகாரந்தன்னை - தொழிலை, அடைந் திடல் - இயற்றுதல், அகிலத்தின்றும் - உலகத்திலதாம், தெரி தரு - அறியா நின்ற, இவ்வேதுவாலே - இக்காரணத்தால், திகழ் விவகார மார்க்கம் - விளங்குகின்ற விவகார வழியை, மருவிட வேதுத்தன்மை - அனுசரிப்பதற்குக் காரணமாக, திடமதாய்-நிச் சயமாய், மதிக்குறும் - அவ்வகங்காரம் புத்தியின் கண்நிலை பெற் றிலங்கும்.

(ப-மீ)—உலகிலொருவரு மொருபோதும் அகங்காரத்தை யொழித்து மூழ்க்கு, உணவு முதலிய விவகாரத்தை இயற்றாதவின் புத்தியின் அகம் விருத்தி விவகாரத்தின் பொருட்டு மிகப் பிரசித்தியாம் என்பது பொருள். (20)

(அ-கை)—விவகாரத்தினங்கமாக வகங்காரத்தை நிச்சயித்து இனி யது ஆன்ம தருமமா? அல்லதென் அநான்ம தருமமா? மற் றிரண்டின் தருமமாவென? விகற்பித்து ஆன்ம தருமமென்பதை நிராகரிக்கக் கூறுகின்றார்.

சித்துரு வுயிர்க்குணமோ திகழ்மதிக் குணமோ வன்றி
மெத்திரண் டின்குணமோ மேவுமிவ் வகங்கா ரம்மென்
றுத்திக ளோடும் வீட தறவொரு மயல தில்லா
வெத்தன சிலராலே யீதுநன் குளத்தாற் காண்க. (21)

(ப-னை)—மேவுமிவ்வகங்காரம் - பொருந்திய இந்த வகங் காரமானது, சித்துருவுயிர்க்குணமோ - ஞானவடிவவான்ம குண மா?, திகழ்மதிக்குணமோ - விளங்கும் புத்தியின் குணமா?, அன்றி - அல்லது, மெத்த - பொருந்திய, இரண்டின்குணமோ - ஆன்மாபுத்தி என்னு மிவ்விரண்டின் குணமா? என்று, உத்திக ளோடும் - பொருத்தமாக, ஈது - இவ்விஷயத்தை, வீடதற - மோக்ஷமடைய, ஒரு மயல தில்லா யத்தன சிலர் - சம்சாரத்தில் சுகமுண்டென்னு மியாதொரு மயக்கமுமின்றிய சன்னியாசி களான பரமாம்பர்கள், நன்குளத்தாற்காண்க - மனதால் நன்றாக விசாரித்தறிதல் வேண்டும்.

(ப-மீ)—அகங்காரம் எதன்குணமென முயற்சியுடையோ ரால் நன்மையின் பொருட்டுத் திருஷ்டாந்த யுக்திகளோடு விசா ரிக்கவேண்டு மென்பது பொருள். (21)

(அ-கை)—திருஷ்டாந்தங்களால் விசாரிக்கையில் எங்ஙன மாயிற்றென்னும் அவாவை ஆன்மாவின் குணமாகாதொழிந்த தென நீக்குகின்றார்.

குணமு தாகிற் புருடனுக்குக் குறைவு புரியு மகங்காரங் குணமு தாக வொருபொழுதும் விடய மாதல் கூடாதாங், குணமு தான தருங்குணியைக் குணியின் குறைவில் லவய வத்தைத், துணிவ தாய்விட் டன்னியமாய்த் தலங்கி யிடுத விலதாலே (22)

(ப-ரை)—குறைவு புரியு மகங்காரம் - தாழ்மையையியற்று மகம் விருத்தி, புருடனுக்கு - ஆன்மாவிற்கு, குணமதாகில் - குணமாகுமாயின், ஒருபொழுதும்-எக்காலும், குணமதாக-குணத் தன்மையுடையதாக, விடயமாதல் கூடாதாம் - அறியப்படுதலி லதாகும், (எனெனின்) குணமதானது, அருங்குணியை - அரிய குணியின் வடிவத்தையேனும், குணியின் குறைவில் அவயவத் தை - குணியினது குறைவற்ற காரணமான அவயவத்தையே னும், விட்டு - நீக்கி விட்டு, அன்னியமாய் - தான் வேறாக, துணிவதாய் - நிச்சயமாக, தலங்கியிடுதலிலதால் - விளங்காத காரணத்தால்.

(ப-மி)—அகங்காரம் ஆன்ம குணமாயின் ஆன்மாவால் விளக்கப்படுவதாகாது. எனெனின் குணவடிவ தருமம் குணி யின் சொரூபத்தையேனும் அவயவத்தையேனும் விட்டு நீங்கி வேறுவதின்று. படத்துள்ள வெண்மை படத்தையேனும் அதன் அவயவத்தையேனும் விட்டு வேறுவதின்றுமாறு அகங்காரமும் ஆன்மகுணமாயின் அதனினும் வேறுகாது அதனை லவ்வினா லும் பேதமின்றியதால் விளக்குவது விளக்கப்படுவ தாந்தன்மை பொருந்தாது எனப்பொருள். (21)

(அ-கை)—அங்ஙனமேல் குணம் குணியிலேயே யுள்ளதாய் குணியால் விளக்கப்படுக அல்லது அதன் குணங்களால் விளக் கப்படுக வெனிற் கூறுகின்றார்.

குணிக்குக் குணத்தி னதுபேதங் குறிக்கி லொருவத் துவிறுது. மணிசெய்பே தகமறுது மாத லிலதிங் காத லிறற், குணியி லிருக்குங் குணங்குணியாற் குணியின் குணத்தா லாயினுமே, யறுவ தேதறும் விடயமது வாவ திலையென் பதுதுணிபே. (23

(ப-ரை)—குணிக்கு - குணமுடையதற்கு, குணத்தினது பேதம் - குணத்தின் பேதமானது, குறிக்கில் - ஆராயுமிடத்தில், ஒருவத்து விளைலும் - யாதாமொரு வஸ்துவாலும், அணிசெப் விளக்கும், தேசமதனலும் - தேசத்தாலும், இங்கு-ஈண்டு, ஆதல் இலதாகும் - உண்டாதலின்றும், ஆதலிலை, குணியிலிருக்கும் குணம் - குணியிடத்துள்ள குணமானது, குணியால் - குணியா லாயினும், குணியின்குணத்தாலாயினும்-குணியிலுள்ள பேதினை குணத்தாலாயினும், அனுவதேதனும் - அற்பமும், விடயமாவ தில்லை யென்பது துணிபே-அறியப்படலின் றென்பது நிச்சயம்.

(ப-ம்)—அகங்காரம் ஞானகுணத்தால் விளக்கப்படாது எனெனின் அகங்கார முதலிய சர்வத்திலு மான்மாவிருத்தலின் அகங்காரத்திற்குத் தேசத்தாற் செய்யப்பட்ட வேற்றுமையின்று. ஆராயுமிடத்தான்மாவினு மன்னியவத்து நித்தியாமையின் வத்து வாற் செய்யப்பட்ட பேதமுமின்று. இதனல் கடத்தினும் படம் வேறு என்னும் பேதம் தருமிப் பிரதியோகியை யவாவுதலினை னும் தருமிப் பிரதியோகியும் பேதத்தை யவாவுதலினுனும் அன்னியோன்னி யாசிரய தோடமாம். ஆகலின் பேதநிரூபணம் எதற்கும் இயற்றவொண்ணை தெனப் பொருள். (23)

(அ-கை)—ஞானகுணத்தா லகங்காரம் விளக்கப்படா தென்ற ஈண்டோது கூறுகின்றார்.

அனலிடத் திருப்பதாய வனற்குண மொன்றற் கொன்று
தனிவிடய மதாந்தன்மை சார்ந்திட லிலதெக் காலுந்
தனதுகண் ணுளகுணத்தைதத் தன்குண மதனற் பூவி
லனலதும் விடய மாக வாற்றிடும் வளன தின்றே. (24)

ப-ரை)—அனலிடத்திருப்பதாய - நெருப்பிலுள்ள, அனற் குணம் - நெருப்பின் குணம், ஒன்றற்கொன்று - ஒரு குணம் மற் றோர் குணத்திற்கு, எக்காலும் - ஒருபோதும், தனிவிடயமாந் தன்மை - ஒப்பற்ற விடயமாகு மியல்பை, சார்ந்திடலிலது - பொருந்துவதின்றும், (மற்றும்) தனது கண்ணுள குணத்தை - தன்னிடமுள்ளதோர் குணத்தை, தன் குணமதனல் - தன்னிட

மூன்ன மற்றோர் குணத்தால், பூவில் - உலகில், அனலதும் - நெருப்பும், விடயமாக - அறியப்படுவதாக, ஆற்றிடும்வளன தின்று - செய்துவைக்கும் சாமர்த்திய முடையதின்று.

(ப-ம்)—நெருப்பின் பிரகாச குணத்தால் உஷ்ண குணமேனும் உஷ்ண குணத்தால் பிரகாச குணமேனும் ஒன்றற் கொன்று விஷயமாவதின்று. அங்ஙனமே நெருப்பும் தனது அக் குணங்களால் அவை யொன்றற்கொன்று விஷயமாமாறு வியற்று வது மின்றெனப் பொருள். (24)

(அ-கை)—அகங்காரம் ஆன்ம குணமாயின் ஆன்மாவால் விளக்கப்படலேலாதெனக் கூறப்பட்டது. ஆண்டிச்சங்கையாம்: புத்தி சுகம் துக்கம் இச்சை துவேஷம் பிரயத்தனம் தருமம் அதருமம் ஆகிய விவை ஆன்மாவின் விசேஷ குணமென்று கணை தர் கூறுதலில் எங்ஙன மான்மா நிர்க்குணமெனப் படுகின்ற தெனிற் கூறுகின்றார்.

அனித்த மாமனுண்மகுண மாகுங் குணத்தி னீட்ட மெனைதச், சனித்த வில்லா வான்மகுண மாகச் சாற்றுங் கணைதமுனி. தொனித்த நெறியா லதுகதினையுந் துடைத்து விடுதறாய்மை யதா, மனித்த குணக்கா னித்தமதுங் குனியா யிடுத லணுகாதே. (25)

(ப-னை)—கணைதமுனி - கணைதனெனப் பெயருடை முனி வர், எனை - என்ன, அனித்தமாம் - நித்தியமின்றிய, அனன்ம குணமாகும் - அனன்மாவின் குணமான, குணத்தினீட்டம் - குணத்தின் கூட்டத்தை, சனித்தவில்லா - பிறப்பற்ற - ஆன்ம குணமாக - ஆன்மாவின் குணமென்று, சாற்றும் - கூறுவரோ, அது தனையும் - அங்ஙனங் கூறுவதையும், தொனித்த நெறியால் - மேற்கூறிய வழியாகவே, துடைத்துவிடுதல் தாய்மையதாம் - கெடுத்துவிடுதல் நலமாம், (மற்றும்) நித்தமதும் - நித்தியவான் மாவும், அனித்த குணத்தால் - நித்தியமாகாத குணத்தினால், குனியாயிடுதலணுகாது - குணமுடையதாயினை யாது.

(ப-ம்)—உண்மையில் ஆனென்மாவான புத்தி மூதலியதின் குணமும் திரவிய முள்ளவனை யிருப்பதாயும் ஆன வெக்குணச் சமூகத்தைக் கணைதர் ஆன்ம குணமாகக் கூறினரோ அதை, அகங்காரமான்மகுணமேல் அது ஆன்மாவால் விளக்கப்படாக குணகுணிகளுக்கு அத்தியந்த பேதமின்மையால் என்னு மிவ்வழி யாக நிராகரிப்பதோடு புத்தி மூதலியதும் ஆன்மகுண மாகா தெனத் துடைத்தல் வேண்டும். மற்றும் புத்தி மூதலியவை அனித்தியமாதலினுனும் நித்திய வான்மாவின் குணமாகாது. இதனல் நித்திய வான்மா வனித்திய குணங்களாற் குணியாகாது.

(அ-கை)—ஆகாயம் நித்திய வாகாயம் அனித்திய சத்த குணத்தால் குணியாவது போல எண்டுமாகுக வென்ரு சங்கித்துக் கூறுகின்ரூர்.

அம்பரந் தனக்குச் சனித்தலை மறைக ளளவறுமுறை யறைதலினு, லம்பர மனித்த மாகுமென்றறிக வருங்கணபுக்கின்மா மதத்திற், பம்பிய வனித்த குணத்தப் பொருளோப் பயிற்றிடக்குணியமேதையாக, வம்பர மதனை யலதொரு வுவமை யறைந்திடற் கில்லையே யாமால். (26)

(ப-ரை)—மறைகள் - சுருதிகள், அம்பரந் தனக்கு - ஆகாயத்திற்கு, சனித்தலை - உண்டாதலை, அளவறு முறையறை தலினல் - பலதரங் கூறுதலின், அம்பரம் - ஆகாயம், அனித்த மாகுமென்றறிக, அரும்- அரிய, கணபுக்கின்மா மதத்தில்-கண தூனிவருடைய பெருமை வாய்ந்த மதத்தில், பம்பிய - ஆவரா மான, அனித்த குணம் - நித்தியமாகாத குணமானது, நித்தப் பொருளை - அனித்தியமாகாதபொருளை, குணியாகப் பயிற்றிட-குணமுடையதாகச் செய்வதற்கு, அம்பரம தனையலது - ஆகாயத்தை யொழித்து, ஒரு வுவமை யறைந்திடற்கு இல்லையேயாம்-உவமானங் கூற யாதொரு பொருளுமின்ரூம்.

(ப-ம்)—"அந்த விந்த வான்மாவினின்று மாகாயமுண்டா யிற்று" என்பது மூதலிய சுருதிகள் பலதரம் ஆகாயத்தி னுற் பத்தியைக் கூறுதலின் அது அனித்தியம். ஆகலின் இவ்வாகாய

திருவ்டாந்தத்திறல் ஆன்மா அனித்திய சம்யோக குணத்தால் குணியாவதின்று. மற்றும் கணதர் மதத்தில் அனித்தியகுணம் நித்தியவஸ்துவைக் குணியாக்க ஆகாயத்தின் வேறாய் திருவ்டாந்தம் அற்பழுமின்றும். ஆகவின் ஆன்மா வனித்திய குணத்தாற் குணியாவதின் றெனப் பொருள். (26)

(அ-கை)—ஆகேஷபம், நித்தியத்திற் கனித்தியங் குணமாகாதேல் அக்காலெங்ஙனம் மூர்த்தா மூர்த்தங்களான உலக்கை ஆகாயம் இவைகளின் சம்பந்தம்போன்று ஆன்மா மனம் என்னுமிவைகளுக்குச் சம்யோகமென்னுங் குணமுண்டாமெனின் அது பிரசித்தி யின்மையான் இங்ஙனமின்றென விரண்டு செய்யுட்களாற் கூறுகின்றார்.

மனமொடு புருடனெனுமப் புருடனவனெடு மனமது வேனுங், கனமுசல மொடு ககனம தேனுங் கம்மொடு முசலம தேனு, மனுநல யோகம் வியோகம தேனு மருவிட விலையிவ ணெதனாற், பனுமவ யவித்வ மவைகட்கு நீக்கப் பட்டுள தாதலின் மாதேகா. (27)

(ப-னை)—மனமொடு - மனதோடு, புருடனெனும் - புருஷனெயினும், புருடனவனெடு - புருஷனோடு, மனமதுவேனும் - மனமாயினும், கனமுசலமொடு - கனமான வுலக்கையோடு, ககனமதேனும் - ஆகாயமாயினும், கம்மொடு - ஆகாயத்தோடு, முசலமதேனும் - உலக்கையெனும், மனுநலயோகம் வியோகம தேனும் - பொருந்திய நல்ல சேர்க்கையையேனும் பிரிவையேனும், இவண் - ஈண்டு, மருவிடலிலை - அடைவதின்று, எதனால் - எவ்வேதுவாலெனின், அவைகட்கு - ஆகாயம் புருடன் ஆகிய அவைகளுக்கு, அவயவித்வம் - அவயவமுடைமை, நீக்கப் பட்டுளது ஆதலின் - நிராகரிக்கப்பட்டுளதாகவின்.

(ப-ம்)—ஆகாயமும் புருடனும் நிரவயவமாதலின் சாவயவ உலக்கை முதலியவற்றோடு சேர்க்கையையேனும் பிரிவையேனும் அடைவதின்றும். (27)

மற்றும்.

உலகினிற் பழுதை குடமுத லனசா வயவங்க ளொன்
றிலே டொன்று, யிலகிடக் கூடு மியல்புள வீது திருட்டமற்
றிதனே யினையா; யலகிலித் திருட்ட மதைவிடாப் புருட
னுலதி ருட்டமா மதையுங், கலகமில் கருத்திற் சுயமதாய்க்
கருதிக் கறையற விருத்தலு மூரித்தே. (28)

(ப-ரை)—உலகினில் - உலகத்தின்கண், சாவயவங்கள்-அவ
யவத்தோடுங் கூடியவையான, பழுதை குட முதலியன - ரஜ்ஜு
குட முதலிய பொருள்கள், ஒன்றிலேடு ஒன்றாய் - ஒன்றோடு
பொருந்துவனவாய், இலகிடக்கூடும் - விளங்குதல் கூடும், இயல்
புனது - தன்மையை யுடைத்து, ஈது திருட்டம் - இது பிரத்தி
யக்ஷமாம், இதனையே யினையாய் - இதையொப்ப, இத்திருட்ட
மதை விடாப் புருடனல் - நேரேகண்ட விதனை மறவாத ஆஸ்தி
கனல், அலகில் - கணக்கற்ற, அதிருட்டமாம் அதையும்-காணப்
படாத வேனைய வத்துவையும், கலகமில் - சஞ்சலமின்மிய, கருத்
தில் - மனதால், சுயமதாய் கருதி - தானே யூகத்தினல் இங்ஙன
மாயசாவயவ பதார்த்தங்களுக்கே சம்பந்த மாம் என விசாரித்து,
கறையற விருத்தலு மூரித்தே - நிரவயவப் பொருளுஞ் சம்பந்த
மடையும் என்னுந் தோஷமின்றி யிருத்தல் விவேகிகட் குரிமை
யாம்.

(ப-மீ)—சாவயவ ரஜ்ஜு கட முதலியனவே ஒன்றொடொ
ன்று சம்பந்தப் பிரிவுகளையடைகின்றனவென்று வுலகிற் காணப்
பட்டதால் வேறு காணப்படாத சாவயவவஸ்துக்களும் சம்யோக
வியோகங்களை அடைகின்றனவெனக் கண்டதை மறவாதவுரல்
யூகித்தறியத் தக்கதென்பது பொருள். (28)

(அ-கை)—ஆகேஷபம், காண்டல் பிரமாணமாயின் அக்கால்
சாவயவ நிரவயவங்களான உலக்கை ஆகாயங்களுக்கும் சம்பந்தங்
காணப்படுகின்றமையின் ஈண்டுங் காண்டல் பிரமாணமாகின்ற
தென்று சங்கித்து ஆகாய மதீந்திரியமாகையால் அதன் சமவாயி

யான சம்யோகமும் அதிந்நியமாகையாற் காண்டல் பிரமானமாகாதெனக் கூறுகின்றார்.

அவயவப் பொருளு மவயவ மிலதா மவையொடு மவயவ மிலது, மவயவப் பொருளா மவையொடும் யோக மதுவிலை காகுமே யதுதான், புவியினிற் றிருட்ட மெதனிலு விவணம் பொருந்திடு மதனிலு முன், செவியுறக் கூறு மதுமிக த்திதமா மென்றுசிந் தையினறிந் திடுநீ. (29)

(ப-ரை)—அவயவப் பொருளும் - சாவயவவஸ்துக்களும், அவயவமிலதாமவை யொடும் - நிரவயவவஸ்துக்களோடும், அவ யவ மிலதும் - நிரவயவவஸ்துக்களும், அவயவப்பொருளாம் அவையொடும் - சாவயவவஸ்துக்களோடும், யோகமது விலதா கும், சேர்க்கையுடையனவாகாவாம், அதுதான் புவியினிற்றிருட் டம் - சாவயவ நிரவயவவஸ்துக்களுக்குச் சம்யோக மின்மை யானது பூமியின்கண் காணப்பட்டது, எதனிலு விவணம் பொ ருந்திடும் - எவ்வேதுவா லிங்ஙனம் பெறப்படுமோ, அதனி லுல் - அவ்வேதுவால், நாம் முன் செவியுறக் கூறுமது - நம் மால் உமது செவிக்கு நன்கு விளங்கும்படி சாவயவ நிரவயவ வஸ் துக்களுக்குச் சம்யோக மின்றெனக் கூறப்பட்டதானது, திதமா மென்று நீ சிந்தையி லறிந்திடு, நிலைபெற்றதென நீ மனதிற் கருதுவாயாக.

(ப-ம்)—அவயவமுடையவை அவயவமின்றியவைபோடும் அவயவமின்றியவை அவயவமுடையவைபோடும் சேர்க்கைய டைவதின்றென வுலகிற் காணப்பட்டது. சாவயவ நிரவயவங் களுக்குச் சம்யோக வியோகங்களைக் காண்பதான பிரமானம் யாண்டுங் காணப்படவில்லை. இந்த பிப்பிராயம் ஆகாய வுலக்ை களின் சம்யோகங் காணப்படுவதின்று சம்யோகா சிரயத்திற் கத் தன்மையா மேல் சம்யோகத்திற்கு மத்தன்மையால் வாயுதரு சம்யோகம்போன்று, ஆகையால் உலக்கை யாகாயங்களின் சம் யோக மதீந்திரியமாகுங்கால் காணக்கூடாமையின் ரண்டுங்கான்

டல் பிரமாணமெனப் பூர்வ பக்ஷியாற் கூறப்பட்டது மிகச் சதுர (29)
மெனப் மொருள்.

(அ-கை)—நிரவயவ வஸ்துவும் உபசாரமாக அங்கீகரிக்கப் பட அவயவமுடையவைகளோடு சேர்க்கையுடையதாமெனிற் கூடாதெனக் கூறுகின்றார்.

அவயவ மில்லா வெல்லா வரும்பொரு டமக்கா ரோப
வவயவ விடத்தில் யோக மணுகுவ திலதெக் காலும்
புவியிற் கற் பிதமா னான பொருளினி னிலைமை யாக
வவமுறும் பொய்யாம் புந்தி யதிதிட மாத லாலே. (30)

(ப-னா)—அவயவ மில்லா வெல்லா அரும்பொருள் தமக்கு நிரவயவமான வெல்லா அரிய பொருள்களுக்கு, ஆரோப அவயவ விடத்தில் - ஆரோபிக்கப்பட்ட அவயவத்தையு டையதாகுங் கால், எக்காலும் - எப்போதும், யோகமணுகுவதிலது - சம்யோகத்தை யடைவதின்று, [எனெனில்] புவியில் - உலகில், கற்பிதமான பொருளினில் - மித்தையா லஸ்துவில், நிலைமையாக - நிலைபெற்றதாக, அவமுறும் - நிஷ்பல மடையும், பொய்யாம் புந்தி - மித்தையா புத்தியானது, அதிதிடமாதலால் - மிகத்திடமாயிருத்தலினால்.

(ப-ம்)—இயல்பாக நிரவயவ வஸ்து கற்பிதபாகத்தோடு சம்பந்த முடையதன்று. எனெனிற் கற்பித சுத்தி வெள்ளி மூதலியவற்றில் மித்தையா புத்தி நன்றாய் வியாபித்திருத்தலின் கற்பித பாகத்தோடு சம்பந்தமுடையதன்றென்பது பொருள்.

(அ-கை)—மற்றும் ஆன்மா புத்தி மூதலிய அனித்திய குணங்களால் குணியெனக் கூறும் வைசேடிகரின் அனுமானம் திருஷ்டாந்தத்தை யவாவுதலின் அத்திருஷ்டாந்தம் சத்தியம் நிர்க்குணமே அத்வைதமான பிரஹ்மம் அதின் வேறான வெல்லாம் வாக்குமட்டில் அனித்தியம் எனக்கூறும் வேதாந்திகளுக் குண்டெனக் கூறமுடியாமையானும் நித்தியம் அனித்தியகுணத்தால் குணியாகும் என்னும் பக்ஷம் அசம்பவமென இரண்டு செய்யுட்களாற் கூறுகின்றார்.

மறைமுடி மதத்தில் வேத மருமம நறிந்த மேலோ
ருறுமுல கெவைக்கு மூல மாகியுள் ளுணர்வே மெய்யா
யறை யொரு பரம வான்ம பதத்தைநிக் கியம காயே
மறைமுடி யதனிற் சொல்வர் மற்றதை யனித்த மாயே (31)

(ப-ரை)—வேதமருமம் அது அறிந்த மேலோர் - வேதத்தின் கருத்தை யறிந்த பெரியோர், மறைமுடி மதத்தில் - வேதாந்த மதத்தில், உறும் உலகெவைக்கும் மூலமாகி - பொருந்திய வுலகெவைக்குங் காரணமாயும், உள்ளுணர்வு - ஞானவடிவமும், மெய்யாய் - சத்தியமாயும், ஒரு - ஒன்றுயும், அறை - கூறுகின்ற, பரமான்மபதத்தை - பரமான்மாவாகிய பதத்தை, மறை முடியதனில் - வேதாந்தத்தில், நித்தியமதாய் - சத்தியமாகவும், மற்றதை அனித்தமாய் - பரமான் மாவினுமன்னிய வுலகை மித்தையாகவும், சொல்வர் - பிரதிபாதியா நிற்பர்.

(ப-மீ)—வேதாந்த மதத்தில் வேதாந்த தாற்பரிய முணர்ந்த பெரியோர் "ஒன்றே அத்விதீயம். நித்தியம் விபு எங்குமுள்ளது சூக்ஷுமம்: இவையெல்லாம் பிரஹ்மமே. இவையெல்லாம் ஆன்மாவே. இவையெல்லாம் நிச்சயமாகபிரஹ்மமே. நாமரூபம் வாக்குமாத்திரம் மண் மாத்திரமே சத்தியம்" என்னுமிவை முதலிய வேதாந்தங்களில் சகல வுலககாரணமும் ஞானவடிவமும் சத்தியமும் எகமுமான பரமான்ம பதமேசத்தியம். அதின் வேறுய வெல்லாவுலகும் அனித்தியமெனக் கூறுநிற்பர் எனப் பொருள். (31)

நண்ணுமத னேயே தருக்கருக்கு நாசகுண நழுவாவத்து, நிண்ணமது வாகவொரு திருட்டாந்தஞ் சிறிதேனுஞ் செறிவ தின்றும், வண்ணமது வாகயாம் வழங்கியதே வண்மையா மதனினனே, யெண்ணுவித்த மனித்த குண மதனனே குணியாவ திலதெக் காலும். (32)

(ப-ரை)—நண்ணுமத னேயே - பொருந்திய அனித்திய குணமுடைய நித்துவத்துவின்மையால், தருக்கருக்கு - வைசேடிகருக்கு, நாசகுணம் நழுவாவத்து நிண்ணமதுவாக - அனித்திய

குணத்தை யுடையது நித்திய வஸ்து (என்பதற்கு) உறுதியாக, ஒரு திருட்டாந்தம் சிறிதேதனுஞ் சொல்லுகின்றும் - யாதொரு திருஷ்டாந்தஞ் சிறிதும் பொருந்துவதின்றும், வண்ணமதுவாக யாம் வழங்கியதே வண்மையாம் - அழகாக யாம் கூறியதே பொருத்தம், அதனினலே - அவ்வேதுவால், வண்ணநித்தம் - கருதும் நித்திய வஸ்து, அநித்தகுண மதனலே - அநித்திய குணத்தினல், எக்காலும் - ஒருபோதும், குணியாவது இலது - குணியாகமாட்டாது.

(ப-ம்)—இங்ஙனம் வைசேடிகருக்கு அநித்திய குணமுடைய நித்திய வஸ்து வுதாகரிக்க வற்பமு மின்றுதலால் நித்தியம் அனித்திய குணத்தாற் குணியாவதின்றென எம்மாற் பூர்வங் கூறப்பட்டது நிலைபெற்ற தென்பது பொருள். (32)

(அ-ஈக)—இங்ஙனம் பிரசங்கத்தால் சேர்ந்த குணதமதத் தைக் கண்டித்து இனி அகங்காரம் அந்தக் காண தர்மமாகத் நிக்கின்றவராய் அது ஆன்மாவின் தர்மமென்பது பொருத்தமின் றியதெனக் கூறுகின்றார்.

அறிவுருவின் குணமாத லெதனினு லன்றுகு மகங்கா ரந்தான், நிறவிடய மதுவாதற் குரியதாய்த் திகழுமிகழ் விடையா கிற்கி, யறவிளக்கு மதியினது குணம் போன்றவ் வகங்கார மதற்கு மேலோய், செறிவிடயத் தன்மையுள தாதலிறற் றிருக்கினது குணமதாமோ. (33)

(ப-ஈ)—அகங்காரந்தான் - அகங்காரமானது, எதனினுல் - எவ்வேதுவால், அறிவுருவின் - ஞானவடிவ ஆன்மாவின், குண மாதல் அன்றுகும் - குணமாகாதோ, (அதனுல்) நிறவிடயமது வாதற்கு உரியதாய் திகழும் - நன்றுய் விடயமாவதற்கு யோக் கியமாக விளங்கும், இகழ் - இழிந்த, விடயாகிர்தி - நிருதிய வடிவமாய், அறவினக்கும் மதியினது குணம் போன்று - மிகவும் விளக்குவதான புத்தியின் குணத்தைப் போல, மேலோய்! விவேகியே! அவ்வகங்காரமதற்கு - அந்த வகங்கார குணத்திற்கு,

செறிவிடையத்தன்மை யுள தாகலினல் - பொருந்தியவிடைய மாந் தன்மை யிருத்தலினல், திருக்கினது குணமதாமோ? - திருவ்ஃ டாவான வான்மகுண மாகுமா?

(ப-ம்)—அகங்காரந் திருசியமா மியல்புடைத்து ஆன்மா வங்ஙனமன்று ஆகலின் திருசிய வகங்காரந் திருக்குவடிவ ஆன்மா வின் குணமாகா. இதனல் அகங்காரம் விடயாகாரமான புத்தியி னது குணம் போன்று விடயமாதலின் ஆன்மாவின் குணமென் பது பொருந்தாது. ஆயின் அந்தக் காண தர்மமே யாமென்பது பொருள்.

(33)

(அ-கை)—அகங்காரம் ஆன்மாவின் குணமன்றெனக் கூறு பவராய் பரிசோதிக்கப்பட்டதுவம்பதார்த்தமும் பரிசோதிக்கப் பட்ட தத்பதார்த்தமும் ஒன்றெனறுணமைக்கிய விலக்கணமான வாக்கியார்த்தத்தைக் கூறுகின்றூர்.

விடையந்தன தருவொன்றிடும் விரிபுந்தியின் குண மொன், றிடர்புந்தியி னதுவாமகந் தையதொன்றிரண் டனையுந், தடையொன்றற வறியும்மெவ னவிகாரசற் புருடன், திடமிங்கிவன் சிவனெமன த்தெளிவாயறை குவமால்.

(34)

(ப-ஸ)—விடையந் தனது உரு ஒன்றிடும் - விடயாகாரத்தை அடையும், விரிபுந்தியின் குணமொன்று - விரிந்த புத்தியின குணம் ஒன்று - இடர் புந்தியினதுவாம் - துக்க காரண புத்தியி னதுவான - அகந்தை அது வொன்று - அகங்கார மொன்று, இரண்டனையும் - இத்திருசிய வடிவ விருத்தியும் அகங்காரமும் ஆகிய விவ்விரண்டனையும், எவன் - எந்த, அவிகார சற்புருடன் - விகாரமின்றிய சத்தாமாத்திர வான்மா, தடையொன்றறவறி யும் - யாதொரு பிரதிபந்தமுமின்றி அறிகின்றதோ, இவன் - இவ் வான்மா, திடம் - திடமாக இங்கு - ஈண்டு, சிவனெமனத் தெளிவா யறைகுவம் - சிவனேயென்று நிச்சயமாகக் கூறுவோம்.

(ப-ம்)—திருசியாகார புத்தி விருத்தியும் திருஷ்டாவிஞகார பரிணம வகங்காரமும் ஆகிய விவ்விரண்டுவித புத்தியின் பரிண

மத்தையும் எப்பரமான்மா விகாரமின்றியதாய் விளக்குகின்றதோ அந்தப் புத்தியின் கான்ரூன புருடன் " காண்போ னன்யனன்று நீ யதுவா யிருக்கின்ரூய் " என்பது முதலிய சுருதிகளால் பரமான்மாவெனப் படுகின்ரூனென்பது பொருள். (34)

(அ-கை)—கூறப்பட்ட சமன்வயத்தில் (பொருத்தத்தில்) பிரத்தியக்ஷ முதலிய வேறு பிரமாண விரோதஞ் சங்கிக்கப்படு கின்றது.

அற்ரேறலுட லகமாயுழ லறிவீனனே யெவணஞ்
சொற்றீர் பர மான்மாவெனச் சொலுவோமென வினவிற்
கற்ரூய்க்கச டுறுமாறிது குறைவேகழ றிலம்யா
கற்ரூய்மறை யதுவும்பொரு ளிதைதேயநவில் வதலுல் (35)

(ப-னை)—அற்ரேறல் - அங்ஙனமாயின், உடல் அகமாயுழல் அறிவீனனே - உடல் தானென்னும் புத்தியோடு சம்சாரத்திற் சுழலும் அற்பஞ்ஞ ரீவனே, பரமான்மா வெனச் சொலுவோம் என - பரமான்மாவே யென்று கூறுவோமென, எவணஞ் சொற் றீர் - எந்தப் பிரகாரம் பிரதி பாதித்தீர்கள் (என்று), வினவில் - கேட்குமிடத்தில், கற்ரூய் - வித்துவானே யாம், இது - இப் பொருளை, கடுறுமாறு - தோடமுண்டாம் வண்ணம், குறைவு - தாழ்ச்சியாக, கழறிலம் - கூறுகின்ரோமல்லேம், [எனினின்] கற்ரூய் மறையதுவும்-நல்ல மாதாவை யொத்தவேதமும், பொரு ளிதையே நவில்வதலுல் - இப்பொருளையே கூறுவதலுல்.

(ப-ம்)—இச்சம்சாரியான ரீவன் பரமாத்மாவென்று விரோ தமாகத் தங்களால் எங்ஙனம் பிரதி பாதிக்கப்படுகின்ரூனினின் தத்துவம் பதார்த்தங்களுக்குச்சார்வஞ்ஞுத்துவம் அற்பஞ்ஞுத்துவும் முதலிய விருத்த தருமங்கள் மாயை அதன் காரிய அந்தக் கா ணம் என்னு மூபாதிகளாற் செய்யப்பட்டமையின் விரோத மின்று. அதாவது இரண்டிடத்திலும் விசிட்டங்களுக் கேகத்து வம் அசம்பவமேனும் விட்டுவிடாத விலக்கணையால் விருத்தாம் சங்களை நீக்கி அவிரோத வானந்த பிரத்தியக் ரோதுவம்பது

லகூடியார்த்த சுத்த சதானந்த அத்வைத போதத்திற்கும் தக்ட
லகூடியார்த்தத்திற்கும் ஓரே லிலக்கணங் குறிக்கப்பட்டமையின்
கானிப் பொருளை விரோதமாகக் கூறவில்லை. சுருதியு மிதனைப்
பிரதி பாதித்தலின் விரோதமின்றென்பது பொருள். (35)

(அ-கை)—ஞானற்பமும் விரோதமாகக் கூறவில்லை என்னும்
பொருள் தோன்றச் சுருதிப் பிரமாணத்தைக் கூறுகின்றார்.

கருதுதற் கரியன் கருத்திலுக் கிலாநற் கருதுதற்கல்
லை யெனவோர், திருவது விதுவோ டெதுபர மதனிற்
றிகழ்தது வேயொரு வனெனச், சுருதிகளிவற்றிற் றிருக்கிது
தனக்குத் தாய்பர மான்மமெய்ப் பதமாம்' வருமொரு
பான்மை விரிவது வாக வழங்கிடப் படுமென மதியே (36)

(ப-கை)—கருதுதற்கரியன்-கருதத் தகாதவன் கருதுபவன்
என்று அக்ஷரப் பிராஹ்மணம், கருத்திலுக்கிலை - மதியை யறிப
வனை அறிகின்றீர்களில்லை என்று உக்தஸ்தப் பிராஹ்மணம், நற்
கருதுதற் கல்லலையே - நன்றாய் எண்ண முடியாதவன் என்னு
கின்றவன் என்று அந்தர்யாமிப் பிராஹ்மணம், எனவோர் திரு
வது - இங்ஙன மாய வொப்பற்ற அழகியதான அந்த விந்தப் பிர
ஹ்மம் காரணமின்றியது காரியமின்றியது உள்ளில்லாதது வெளி
யில்லாதது இவ்வான்மா, பிரஹ்மம் என்று மதுப் பிராஹ்மணம்.
தீ யதுவா யிருக்கின்றாயென்று சாந்தோக்கியம், இது - இவை
யெல்லாம் யாதொரு வான்மா என்று மைத்திரேயிப் பிராஹ்ம
ணம், எது பரமதனில் திகழ்தவே - இங்கியாதொன்று மேன்மை
யாக விளங்குகின்றதோ அது அங்கு, யாது அங்கு விளங்குகின்
றதோ அது விங்கு விளங்குகின்றது. மரணத்தினின்றும் மரண
மூறுவன் என்பது காரணமாகக் காண்போன் என்று கடவல்லி.
யாது வாக்காற் கூற முடியாதோ எதனல் வாக்குக் கூறுகின்
றதோ அதனையே பிரஹ்மமென வறியாது இதுவென வுடாகிக்
கப்படுகின்றதோ அதுவன்று என்று தலவகாரம், ஒருவன் - எவ
னே வொரு தீரன் திருப்பிய காட்டமுனைடையோனைப் பிரத்திய
காத்துமாவையறிந்தான் அமிர்தத்தன்மையையிரும்பினவன்னன்று

கடவல்லி, என-இவை முதலாக, முதலிய சுத்தத்தால் வேறு சுருதியும் "அந்தர்யாமி அமிர்தன். எந்த அவன் இவன் புருஷனிடத்திலோ எவன் ஆதித்தனிடத்திலோ அவன் இவன்எகன். தத்துவமசி. அகம்பிரஹ்மாஸ்மி. அயம் ஆத்மா பிரஹ்மம். பிரக்ஞானம் பிரஹ்மம். இவ்வமிர்தம் பிரஹ்மமே முன்னும் பிரஹ்மம் பின்னும் பிரஹ்மம் தெற்கும் பிரஹ்மம் வடக்காகவும் கீழுமேலும் பரவியது ஸ்ரேஷ்டமான பிரஹ்மமே யிவ்வுலகில். முன்னிவ்வொரோயான்மாவாக விருந்தது அற்பமும் வேறின்று. இது மூன் பிரஹ்மமாகவே யிருந்தது அகம் பிரஹ்மாஸ்மி யென்று அப்பொழுது ஆன்மாவையே யறிந்தான் அதினின்று மிவ்வெல்லா முண்டாயிற்று. எவனிந்தப் புருஷனே அவனைக விருக்கின்றேன். அறியப்பட்டதினும் பின் அறியப்படாததினும் அது வேறே. அதர்மத்தினும் வேறு, தர்மத்தினும் வேறு செய்யப்பட்ட வினினின்றும் வேறு பூதபவ்வியத்தினும் யாது வேறோ அதைப் பார்க்கின்றாய் அதைச் சொல்லு. சத்தமின்றியது பரிசமின்றியது ரூபமின்றியது குறைவின்றியது அங்ஙனமே ரசமின்றியது நித்தியம் யாது கந்தமின்றியதும். அறிதியனந்தம் மகதத்துவத்தினும் பரம் சுத்தியம் அதனை நிச்சயித்து மரண வாயினின்றும் கன்றாய் விடுபடுகின்றான். யாது காட்டமுடியாதது கொள்ளமுடியாதது கோத்திரமற்றது வருணமற்றது கண்ணற்றது காதின்றியது அது யையின்றியது பாதமின்றியது நித்தியம் விபு எங்கு முள்ளது சூக்ஷ்மம். அ!கார்க்கி இதனை அழிவற்றதாகப்பிராஹ்மணர்கள் சொல்லுகின்றார்கள் ஸ்தூலமின்றியது அணுவின்றியது குறிலின்றியது நெடுவின்றியது சிவப்பின்றியது நேஹ மின்றியது குறியின்றியது தமசின்றியது. ஆகாய மின்றியது சங்கமின்றியது ரசமின்றியது கந்தமின்றியது கண்ணின்றியது காதின்றியது முகமின்றியது மனமின்றியது ஒளியின்றியது பிராணனின்றியது வாயின்றியது அளவின்றியது உள்ளின்றியது வெளியின்றியது அது வற்பமும் சாப்பிடுகின்றதின்று அதை அற்பமும் சாப்பிடுகின்றதின்று பிரஹ்மமாகவே யிருந்துகொண்டு பிரஹ்மத்தை யடைகின்றன். பிரஹ்மத்தை யறிந்தவன் பிரஹ்மமே யாகின்றன்" இங்ஙனம

யதும் மூற்கூறப்பட்டவைகளாகவு மூள்ள - சுருதிகள் இவற்றில் இச்சுருதிகளில், திருக்கிது தனக்கு-திருக்குவடிவ வான்மாவிற்கு, தூய்பரமான்ம மெய்ப்பதமாம் வரு ஒரு பான்மை - பரிசுத்த பரமான்மாவென்னும் உண்மைத் தன்மையாக வரும் ஒன்றை, வினவதுவாக வழங்கிடப்படு மெனமதி - விளிவாகக் கூறப்படுமென நீ கருதுவாயாக.

(ப-ம்)—கருதுதற்கரியன் என்பன முதலிய சுருதிகளின் ஆரம்ப வாக்கியம். இவை முதலிய சுருதிகளாணும் மற்றுஞ் சில வேறு சுருதிகளாணும் புத்தியதன் விருத்தி ஆகிய விவற்றிற்குச் சாக்கியான பிரத்தியக் போதத்திற்கு எகசுகவடிவ கூடஸ்த ஞான வடிவமாகிய பரமான்ம பதமாந்தன்மை நன்முகப் போதிக்கப் பட்டதினல் தத்துவம் பதார்த்தங்களின் தாதாத்துமியத்தில் யாதொரு விரோதமும் மின்றெனப் பொருள். (36)

(அ-ஈக)—" அதனையே பிரஹ்மமென்றறி " என்ற தளவ காரசுருதியை வெளிப்படுத்துகின்றூர் இரண்டடைச் செய்யுளால். ஆண்டு " யாது வாக்காற் கூறமுடியாதோ. எதைக் கண்ணற் காண்கின்றுனில்லை. எதைக்காதாற் கேட்கின்றுனில்லை, எதைப் பிராணனற் பிராணிக்கின்றுனில்லை. எதை மனதாலறிகின்றுனில்லை " என்றவிப்பாகத்தை விரித்துக்கூறுகின்றூர்.

எதுவெவ்ந ஞான்றும் வாக்கா லிசைத்திடற் கில்லாதாகு
மெதுவெவ்ந ஞான்று நோக்கா லேக்கிடற் கில்லாதாகு
மெதுவெவ்ந ஞான்றுங் காதாற் கேட்பதற் கில்லாதாகு
மெதுவெவ்ந ஞான்றுநெஞ்சா லெண்ணிடற் கில்லாதாகும்.

(ப-ஊ)—எது + தாகும் - எப்பரமான்மாவாக்கால் எப்போதுங் கூறமுடியாது-எது + தாகும் - எப்பரமான்மா வெப்போதும் கண்ணுற் காண்டற்கில்லாதாகும், எது + தாகும் - எவ்வான்மா எப்போதுங் காதாற் கேட்கமுடியாது - எது + தாகும் எப்பரமான்மா வெந்த ஞான்றும் அந்தக் காணத்தால் அறியமுடியாது.

(ப-ம்)—ஜனம் வாக்கு கண் மனம் ஆகிய விவற்றுல் ஆன்ம தத்துவத்தை யறியாது. ரூப முதலியவையின் ஞதவின் இரு

வடிவ காணத்திலுலும் அதன் வடிவம் விளக்கப்படுவதில்லை சயம் பிரகாச மாதலின், அவிவேகத்தா லான்மாவிலா ரோபிக்கப்பட்ட மித்தையா பொருளின் தருமத்தை நீக்குதலிலுல் ஆன்மாவை நித்திய முத்தமாய் நிருபித்தலின் சாஸ்திர வுபதேச மனர்த்த மெனக் கருதத் தக்கதன்றென்பது பொருள். (37)

(அ-கை)—"எதனல் வாக்கு வசனிக்கின்றதோ. எதனற் கண் காண்கின்றதோ. எதனற் காதிதனைக் கேட்கின்றதோ. எத னல் மனம் மனனிக்கின்றதோ. எதனற் பிராணே நடுகின்ற தோ" என்ற விப்பாகத்தை விரித்துக் கூறுகின்றார்.

வாக்கொடு நயன மாங்கே வண்செவி மனமுந் தாமும்
போக்கறு மெதனினலே பொலிந்துசென் றிடமெப்போது
நீக்கமில் பரமமான பதமதே நீதானென்ன
நோக்குதி யெனவே வேத நவன்றதிங் கதிகாரிக்கே. (38)

(ப-னை)—வாக்கொடு + தாமும் - வாக்கு கண்வளமூடைய செவி மனம் ஆகிய வினைகள், எப்போதும் - போக்கருமெதனி லலே பொலிந்து சென்றிடும், நித்திய வெவ்வான்மாவால் விளக்கப்பட்டனவாய்த் தங்கள் விடயங்களைக் குறித்துச் செல்லுமே, நீக்கமில்பரமமான பதமதே நீதானென்ன நோக்குதி யென - அந்த வியாபகபரமான்மாவை நாலையிருக்கின்றே றென னீ யறிவாயாக வென்று இங்கு அதிகாரிக்கு, இச்சுலோகத்திற் சாதன சதுஷ்டயமுடையோனுக்கு - வேதம் நவின்றது.

(ப-ம்)—எக்காலும் வாக்கு முதலிய வெல்லா வினைத்திரி யும் உண்மைச் சத்தித்தால் மேலைவிருத்தி கொள்ளற்பாலது. ஆகிய வினைகள் ஜடமாதலின் தந்தம் விடயங்களைக் குறித்துச் செல்லும்படி சித்துவடிவ வான்மாவாற் பிரேரிக்கப்படுகின்றன வாதலின் தமது காரியங்களை யியற்றும் வன்மையன. சுருதி யிற் பரமபதத்தை யான்மாவாக வறியெனவறியும் சேட்டை யுடையோனுக்கு ஆன்மாவின் உண்மையை யுபதேசிக்க தென் பது பொருள். (38)

(அ-கை)—இங்ஙனந்த லவகார சுருதியை விரித்துக் கூறி இனிச் சாந்தோக்கிய சுருதியை விரித்துக் கூறுகின்றார்.

மறையிவை பரம வான்மமெய்ப் பதத்தின் மானம
தாகச் சிற் சிலவே, யறைதரலாய வெம்மிறை வீண்டு வரு
மணி மாதிய குணமா, றறிவுரு வான சத் தென ப்பூர்வ
மறைந்திடு மதுவுடற் கரிதீ, செறிதர வாகுவா யென வரிய
திருமறை முடியறைந் திடுமே. (39)

(ப-ரை)—மறையிவை - இவ்வேதங்கள், பரமவான்மமெய்ப் பதத்தில் - பரமான்ம பதத்தன்மையுண்டென்னு முண்மையில், மானமதாக - பிரமாணமாக, ஈண்டு எம்மிறல் - இங்கு எம்மால், சிற்சில வேயறைதரலாய - அற்பமாகவே கூறப்பட்டன.

(ப-ம்)—ஜீவான்மா பரமான்மாவாயிருக்கின்ற தென்னும் பொருளில் கருதுதற்காரியன் என்பன முதலிய விச்சுருதி களும் சில பிரமாணமாகவே யெம்மாற் கூறப்பட்ட தெனப் பொருள்.

(39)

(அ-கை)—இனிச் சாந்தோக்கிய சுருதியைக் கூறுகின்றார். பூர்வம் - முன்னர், அரும் அணிமாதிய - அரிதான சூக்ஷ்ம மத்துவ முதலிய, குணமார் அறிவுருவான - குணத்தோடுங் கூடிய ஞானவடிவ வத்து, சத்து என அறைந்திடும் - சத்து என்று கூறப்பட்டது (பின்னர்) உடற்கரி நீ - தேக சான்றுகிய ஆன்மாவான நீ, அது செறிதராவாகுவாயென - அதுவாகப் பொருந்தியிருக்கின்று யென்று, அரிய திருமறை முடியறைந் திடும்-அருமைப்பாடுடைய அழகிய வேதாந்தங்கள் கூறுகின்றன.

(ப-ம்)—"அந்த இந்த இது அணிமா இவ்வெல்லா மிதன் வடிவே அது சத்தியம் அது ஆத்மா நீயதுவாயிருக்கின்றாய் சுவேத கேதுவே" என்ற இவை முதலிய சுருதிப் பிரமாணத் தாற் குறிப்பிக்கப்பட்ட சூக்ஷ்மத்தன்மை சர்வக தத்தன்மை யம்பிரகாசத்தன்மை முதலிய குணமுடையது. சத்து என ஆரம்பிக்கப்பட்டது. "வே சௌமியனே! இது முன் சத்தாகவே

இருந்தது ஒன்றே அத்துவிதீயம் அது பார்த்தது. அது தனை சைச் சிருட்டித்தது" என்னு மிவை மூதலிய சுருதிகளால் எப் பிரஹ்மம் எல்லா வுலக காரணமாக வாரம்பிக்கப்பட்டதோ அப் பிரஹ்மமாகவே நீ யிருக்கின்று யென்று சுருதியேகதன்மையை யுபதேசித்தது "இச்சீவாத்துமாவாக வனுப்பிர வேசித்து நாம ரூபங்களைச் செய்கின்றேன்" பிரவேசங் கேட்கப்படுதலின் சத்து ரூபப்பிரஹ்மமே ஆன்மாவெனப் பொருள். (89)

(அ-கை)—சுருதிக்குத் தன்னிற் பிராமாண்யத்தன்மை யிருத்தலின் அதை ஆதரித்துப் பிரத்திய காண்மாவிற்குப் பிர ஹ்மதத்தன்மை என்னிற் கூறப்பட்ட தென்ற வாண்டிரீதா சங் கையாம்:—கூறப்பட்ட சுருதி சரீரகத்திற் கதியந்தாபேதத் திற் ரூற்பர்ய மின்று ஆனல் அம்சாம்சி பாவத்தைப் போதிப்ப தும் பிராகிருதி விகிருதி பாவத்தைப் போதிப்பதும் என்ற வாண் டுக் கூறுகின்றார்.

எவ்வணங் குடங்க ளாதி யிடமிரு விசும்பி னுக்குச்
செவ்வவ யவம்வி காரஞ் செறிந்திடல் சிறுது மின்று
மவ்வணம் பிரமத் திற்கிவ் வாருயி ரவய வத்தோ
டெவ்விகா ரமது மின்று மெனுமொழி யமித்தை யாமே

(ப-னை)—எவ்வணம் - எங்ஙனம், குடங்களாதியிடம் - கட முதலியவற்றின் ஆகாசம், இருவிசும்பினுக்கு - பெருமையுடைய வாகாயத்திற்கு, செவ்வவயவம் - செவ்விய அவயவமாகவும், விகாரம் - விகாரமாகவும், செறிந்திடல் சிறிதுமின்றும் - பொரு ந்துதல் அற்பமுமின்றே, அவ்வணம் - அங்ஙனம், பிரமத்திற்கு, இவ்வாருயிர் - இச்சீவான்மா, அவயவத்தோடு - அவயவமும், எவ் விகாரமும் - எப்படிப்பட்ட விகாரமும், இன்றுமெனு மொழி - இன்றென்று கூறும் வாக்கியம், அமித்தையாம் - சத்தியமேயாம்.

(ப-ம்)—கட முதலியவற்றி னாகாயம் அனவச்சின்ன வாகா யத்தின் அவயவமும் காரியமும் எங்ஙனமாகாதோ அங்ஙனம் இச்சரீரகாரியான ஜீவபதார்த்தமும் பரமாத்மாவின் காரியமும்

அவயவமும் மாகாதென்று கூறிய நிச்சயம் சக்தியம் எனப் பொருள்.

(40)

(அ கை)—எக்கால் ஜீவ பாக்களுக்கு அம்சாம் சித்தன்மை முதலிய லக்ஷணபேத மற்பமும் மங்கீகரிப்பதின்றே அக்கால் ஜீவனென்னும் நாமபேதம் எங்ஙனமுண்டாயிற்றென வாசங்கித் துக் கூறுகின்றார்.

காகாதி நிமித்தமத னலேயே யெவ்வாறு கனத்திற் குக், காகாம்ப ரமதுவெனப் பெயர்குலவு மவ்வாறே காரிய காகிப், பரமான்ம வறிவான சிவத்திணுக்கும் படிமீது படரு காமம், புரவேது வதனலே சீவனெனப் புகல்வதலாற் பொ ருந்து முதே.

(41)

(ப-னை)—கனத்திற்கு - ஆகாயத்திற்கு, எவ்வாறு - எங்ன ணம், காகாதி நிமித்த மதனலேயே - கடமுதலிய நிமித்தத்தி னேயே, காகாம்பர மதுவெனப் பெயர்குலவும் - கடாகாயம் என் பது முதலிய பெயர் விளங்குமோ, அவ்வாறே - அங்ஙனமே, காரியதாகி - சாக்ஷியாகி, பரமான்ம வறிவான சிவத்திணுக்கும்- பரமான்மாவான பிரஹ்மத்திற்கும், புரவேது வதனலே - சரீர வுபாதி யேதுவினனேயே, சீவனெனப் படரும் காமம் - சீவனென் ற்று விளங்குகின்ற பெயரை, புகல்வதலால்-கூறப்படுவதல்லது, பொருந்தாது - சரீர திருஷ்டி யொழிந்தகாலத்து சீவனெனப் பெயர் பொருந்தாது.

(ப-மீ)—ஒரே வாகாயத்திற்குக் கட முதலிய வுபாதி வயத் தால் கடாகாயமென்பன முதலிய காமமுண்டாமாறு காண்போ னென பரமான்மாவிற்கும் சரீர வுபாதி வயத்தால் ஜீவனென்னும் காமமுண்டாயிற்று உண்மையி லுண்டாக வின்றெனப் பொருள்.

(அ-கை)—மற்றுங் காரியமின்றிய பிரஹ்மத்திற்குப் பிரமே சங் கேட்கப்படுகின்றமையினும் ஜீவன் காரியமும் அவயவமு மின்றெனக் கூறுகின்றார்.

அக்காம் பரம வான்மசத் தெனவே யறைதிருநாமமா
ரெதனு, விக்ககனு திசகமியற் றிதெலினையையும் பின்றன்ன
காற்றலினுற், ககிய வுலகிற் புக்கிடு மவனே கடமிவ ணுத
யமா யினபின், பொக்குறு குடத்திற் புக்கபுட் கரம்போற்
புந்தியின் மைந்தனே கொளுநீ, (42)

(ப-னை)—அக்காம் என - அழிவற்றதென்றும், பரமவான்ம
என - பரமான்மாவென்றும், சத்து என - என்று முள்ளதென்
றும், அறை திருநாமம் ஆர் - கூறப்படும் திருநாமம் பொருந்தப்
பெற்ற, எதனுல் - எப்பரமான்மாவால், இக்ககனுதி சகம் இயற்
றிதெல் இயையும் - இவ்வாகாயத்தை முதலிலுடைய வுலகு வுண்
டாக்கப் பெற்றதாய்ப் பொருந்துமோ, தன்னதாற் றலினுல் கக்
கிய வுலகில் - தனது சக்திவசத்தாற் சிருஷ்டிக்கப்பட்ட சகத்தில்,
பின் - சிருஷ்டித்த பின்னர், அவனே - சிருஷ்டி கருத்தாவான
அப்பரமான்மாவே, புக்கிடும் - ஜீவவடிவாய்ப் பிரவேசிப்பன்.
(அ-கை)—நிரம்சமான பரமான்மா வெங்ஙனம் பிரவேசித்தா
ரெனிற் கூறுகின்றூர். கடமிவ ணுதயமாயினபின்-ஈண்டுகடஞ்
சிருஷ்டிக்கப்பட்ட பின்னர், பொக்குறு குடத்தில் - அழியுமியல்
புடைக் குடத்தில், புக்க - நுழைந்த, புட்காரம்போல் - ஆகாயத்
தைப்போல் என்று, மைந்தனே நீ - ஏ குழந்தாய் நீ, புந்தியில்
கொளு - மனதின்கண் கொள்ளுவாயாக.

(ப-ம்)—அக்காம் பரமாத்மா சத்து எனப் பெயருடைய
வெப்பரமான்மாவால் ஆகாயத்தை முதலிலுடைய சகத்துச்
சிருஷ்டிக்கப்பட்டதோ அப்பரமான்மாவே தன் மாயையா லியற்
றப்பட்ட வுலகில் ஜீவவடிவாகப் பிரவேசித்தது. அஃதெங்ஙன
மெனின் கட சிருஷ்டியின் பின் கடத்திலாகாயம் பிரவேசித்த
தைப்போன்று. இதனுல் நிரவயவமாய்ச் சர்வகதமாயுள்ள வான்
மாவிற்குப் புத்தி முதலியவற்றில் விளக்க மாத்திரமே ஆன்மா
வின் பிரவேசம். தேவதத்தன் முதலியோருக்குக் ரிகாதிகளிற்
பிரவேசம் போன்றின்றென்பது பொருள். (42)

(அ-கை)—"அவரே சிருஷ்டித்து அவரே யனுப் பிரவேசித் தார். அவரே யீண்டு நக நுனிகளில் பிரவேசித்தார். உள்ளே பிரவேசித்து ஜனங்களை நியமிப்பவர்" என்பன முதலிய பிர வேச வாக்கியங்களால் நான்குவித தேகங்களில் அந்தக் காண சாகூதியாக நுழைந்த பரமான்மாவிற்கே யெதனல் ஜீவனெ னப் பெயருண்டாயிற்றே அதனல் ஜீவன் பரமாத்மாவின் அம் சம் அல்லது விகாரம் இன்றென விவ்வளவாற் கூறப்பட்டது. இப்போது இவ்வர்த்தத்தில் சிருஷ்டி வாக்கியமும் பிரமாணமெ னக் கூறுகின்றார்.

அம்பர முதல வாயவிச் சகங்க ளரும்பர மான்மனி னிருந்தே, பம்பிடு மெனவெச் சுருதியின் முடிகள் பகர்ந் திடு மவைகளி லுலு, மம்பரு மிகமு மூயிர்களும் பரம் வான்மதத் துவமெனச் சொலலா, லின்புறு மபேத மதி யதே நிதமு மிலங்கிடப் படுமென வுணர்நீ. (43)

(ப-ரை)—அம்பரமுதலவாயவிச்சகங்கள் - ஆகாயத்தை முத லுடைய விவ்வுலகங்கள், அரும்பரமான்மனினிருந்தே - அரிய பரமான்மாவினின்று, பம்பிடும் என - உண்டாகுமென்று, எச் சுருதியின் முடிகள் - எவ்வேதாந்தங்கள், பகர்ந்திடும் - கூறுகின் றனவோ, அவைகளிலுல் - அச்சுருதிகளிலுல், அம்பரும் இக மும் உயிர்களும் - பரலோகம், இகலோகம், சீவர்கள் ஆகிய விவைகள், பரமவான்ம தத்துவமெனச் சொலலால் - பரமான்மா வின் சத்து வடிவமாகவே யிருக்கின்றதென்று சொல்லப்படுதலி லுல், நிதமும் - எப்போதும், இன்புறுமபேதமதியதே - ஆனந்த காரணமாய் அபேத புத்தியே, இலங்கிடப்படுமென - விளங்கிக் கொண்டிருக்கின்றதென, நீ வுணர் - நீ யறிவாயாக.

(ப-மீ)—பரமான்மாவினின்றும் ஆகாயாதி வுலகுண்டாய தென்னும் "இதினின்றும் பிராணன் மன முதலியவெல்லா விந் திரியங்களு முண்டாயிற்று. ஆகாயம், வாயு, அப்பு, அக்கினி, ஜலம் எல்லாவற்றையுந் தாங்குகின்ற பிருதிவியும். அந்த இந்த ஆன்மாவினின்று மாகாய முண்டாயிற்று" என்னுமிவை முத

லிய சுருதிகளானே பரமான்ம காரியமான வுலகிற்கு மதிற் பிர வேசித்த ஜீவனுக்கும் பரமான்ம வடிவசத்தைத் தன்மையைக் கூறு தலினல் அபேத புத்தியே நிச்சயம் பண்ணப்படுகின்றது. "எல் லாம் நிச்சயமாகப் பிரஹ்மமே. காமரூபம் வாக்கை யாரம்பித் தது மண் மாத்திரமே சத்தியம். காண்போன் வேரூயின்று" என்னுபினவை முதலிய சுருதிகளான் என்பது பொருன். (43)

(அ-கை)—ஆகேஷபம், சிருஷ்டி வாக்கியம் சிருஷ்டியைக் கூறுவதே அன்றி அபேதப் பிரதிபாதன பரமானதன்று. எனெ னின், ஓர் வாக்கியம் அனேகார்த்தத்தைப் பிரதி பாதிப்பது நியாயமின்றுதலின் என்று சங்கித்துச் சிருஷ்டி பரமே யென் னும் விபக்ஷத்திற் றூடங் கூறுகின்றூர்.

படைப்பின் வாக்கியம் படைத்தல்செய் பரமது வாயிற்
கிடைப்ப தின்றிமெய் ப்பயனில தாகியே கிடக்கும்
படைப்பு றுஞ்சக மிவ்வணம் பரமனி னெனக் கேட்
டிடப்பி றும்மது புருடனுக் கின்பயன் பயவா. (44)

(ப-னை)—படைப்பின் வாக்கியம் - சிருஷ்டி வாக்கியம், படைத்தல் செய் பரமதுவாயில் - சிருஷ்டியைக் கூறும் பாத்துவ முடையதாகில், மெய்ப்பயன் - உண்மையான பலன், கிடைப் பது இன்றி இலதாகி - அத்தியந்தம் பெறப்படுவதின்றாய், கிட க் கும் - நிற்கும் (எனெனின்), படைப்புறுஞ் சகலிவ்வணம் பர மனின் - பரமான்மாவினின்றும் ஜகம் இவ்வண்ணம் படைக்கப் படும், எனக்கேட்டிடப் பெறும் - என்று கேட்கப்படுதலான, அது, புருடனுக்கு இன்பயன் பயவா - முமுக்ஷுவான அதிகாரி க்கு இஷ்ட பலனைக் கொடுக்காது.

(ப-மீ)—சிருஷ்டி வாக்கியம் சிருஷ்டியைக் கூறும் பரமாகில் அக்காலவ்வாக்கியம் பலமற்றதான அனர்த்த முடையதாகும். அஃதெங்ஙனமெனின், சிருஷ்டி கருத்தாவான பரமேசுவரனி னின்றும் இங்ஙன முலகுண்டாயிற்றென்னும் சிரவண மாத்திரன் கேட்கும் புருடனுக்கு எதனை லத்தியந்த துக்கநிவர்த்தி யுண்டாவ தின்றே அதனல் சிருஷ்டியைக் கூறும் பாத்துவமுடையதாங்

கால் எஞ்சலின்றிய அனர்த்த நிவர்த்தி வடிவ பலபின்மையால் அனர்த்த முடைமையே பொருந்தும். "பலமுடையதின் முன் னிற்பலபின்றாய தனங்கம்" என்ற நியாயத்தர்ன் சிருஷ்டி வாக் கியத்திற்கும் சுதந்திரமாகப் பலமுடைமை கேட்கப்படாமை யான், எகத்துவத்தைக் கூறும் "ஆன்மஞானி சோகத்தைக் கடக் கின்றான். பிரஹ்மத்தை யறிந்தோன் பரத்தை யடைகின்றான். எதனினின்றும் பயப்படுகின்றானில்லை" என்னுமிவை முதலிய சுருதிகளுக்குப் பலமுடைமை கேட்கப்படுதலின் அச்சிருஷ்டி வாக்கியமும் தத்துவமசி வாக்கியத்திற்குச் சேஷமாகிய அங்கமா மேல் பலமுடைமை யாகின்றதென்பது பொருள். (44)

(அ-னை)—இதனாலும் சிருஷ்டி வாக்கியத்திற்குச் சிருஷ்டி பரத்தன்மை பொருத்தமின்றனைக் கூறுகின்றார்.

அளவறு முறைறவி கார மிந்திய மெனவுஞ் சீரா
யுளவிவரு சத்தே மெய்யா மெனவுமொண் மறைக ளாலே
யளவறு விதமா கவறைந்திடு மதனி னனே
விளிவுல கிறுக்குற் பத்தி விதேயமன் றறிய வேண்டும். (45)

(ப-னை)—அளவறுமுறை - பல தடவை, விகாரம் - காரிய வுலகு, அிந்திரியமெனவும் - மித்தையென்றும், சீராய் உள ஒரு சத்தே - சிறப்புடையதா யிருக்கும் ஒப்பற்ற சத்து வஸ்துவே, மெய்யாம் எனவும் - உண்மையென்றும், ஒண்மறைகளால் - விள ங்குகின்ற வேதங்களினால், அளவறு விதமதாக - அநேக பிரகார மாக, அறைந்திடும் - சொல்லப்படுகின்றன, அதனால் - அவ் வேதத்தினால், விளிவுலகிறுக்கு - அழியு முலகத்திற்கு, உற்பத்தி- சிருஷ்டியை, விதேயமன்று - சுருதி விதிப்பதன்று, (என்று) அறியவேண்டும் - இதை யறிவாயாக.

(ப-ம்)—பல தடவை காரியமான வுலகு மித்தை யென்றும் காரணமான பிரஹ்மமே சத்தியமென்றும் நாமரூபம் வாக்கு மாத்திரம் என்று ஆரம்பித்து அது சத்தியம் அது வாத்துமா அது நீயா யிருக்கின்றாய் என்பது முதலிய சுருதிகளால் அநேக விதி சிருஷ்டாந்தங்களோடு நிச்சயஞ் செய்யப்பட்டன, ஆகையாலு

லகிற் குற்பத்தியை விதிக்கத்தக்கதன்றென விது வெங்களா லறியப்பட்டன வென்பது பொருள். (45)

(அ-கை)—இதுகாறும் சிருஷ்டி வாக்கியம் மித்தையா வடி வான சிருஷ்டி பரமானதன்று ஆதல் எகத் தன்மையைப் போதிக்கும் பரமானதென்று கூறப்பட்டது. இனித்தத்துவமசி வாக்கியம் சிருஷ்டி பரமாகவே ஞகாதெனிற் கூறுகின்ரூர்.

அப்பொரு ணீயா கின்றனை யெனவே யளவறு முறை யறை மொழிகள், செப்புல குதய மாத்திர விதியிற் செறிந் திட வில்லையெஞ் ஞான்று, விப்புரு டனுக்குப் பரமரல் லான்ம பதவெழின் ஞானமா மிதனை, யொப்பறு குமர வுதயம துரைற்று மப்பொழு தென்றுமென் றுணர்ந். (46)

(ப-கை)—அப்பொருள் நீயாகின்றனை யெனவே-அது நீயா யிருக்கின்ரூய் என்று, அளவறுமுறை - அடிக்கடி, அறை மொழி கள் - கூறுகின்ற தத்துவ மசி வாக்கியம், செப்புலகுதய மாத் திர விதியில் - சொல்லாநின்ற ஜக சிருஷ்டி பர வாக்கியத்திற்கு (அங்கமாக), செறிந்திடவில்லை - பொருந்துவதாகாது, எஞ்ஞா ன்று - எப்போது, இப்புருடனுக்கு - இவ்வதிகாரிக்கு, ஒப்பறு குமர - சமானமற்ற புத்திரனே! - பரம நல்லான்மபத - நல்ல பரமான்ம பதத்தின், எழின் ஞானமாமிதனை - அழகிய ஞான மெனக் கூறப்படுமிதனை, உதயமது ரைற்றும் - (தத்துவமசிவாக்கி யம்) உற்பத்தியைச் செய்யுமோ, அப்பொழுது - அக்கால், நீ ஒன்று மென்று உணர் - பலனுடையதாகப் பொருந்தும் என்று நீ அறிவாயாக.

(ப-மி)—தத்துவமசி என்ற வாக்கியம் உலகி னுற்பத்தியை மாத்திரங் கூறுமேல் பலனுடைய ஞானத்தை யுண்டாக்காத தாகும். அதனல் அடிக்கடி கூறப்பட்ட தத்துவமசி யென்ற வாக்கியத்தின் அடிக்கடி கூறப்பட்ட அப்பியாசம் பலமுடைய தாகாமையின் பெருந்துகின்றதில்லை "எக வாக்கியத்துவம் பொருந்துகையிற் பேத வாக்கியம் விரும்பப்படா" என்னு நியா யத்தினல் சிருஷ்டி வாக்கியம் மஹா வாக்கியத்தோடு எக வாக்

கிய மாகின்றது. இதை விட்டு விபரீதமாக மஹா வாக்கியம் கிரு
வ்டி வாக்கியத்தின் அங்க மென்பது அனர்த்தப் பிரசங்கமாத
லின் பொருத்தமின்றியதாகும். எங்ஙன மெனின் பிரத்திய கான்
பாவான புருடனுக்குப் பிரஹ்ம ஞானத்தை மஹா வாக்கியம்
எப்போ தண்டாக்குகின்றதோ அப்போது வாக்கியத்தா லுண்
டான ஞானம் மோக்ஷ பல முடையதாதலின் அதன் அங்கமாகச்
சிருஷ்டி வாக்கியம் பொருந்துகின்றது. விபரீதமேற் பொருந்
காது.

(46)

(அ-கை)—"எதனினின்று மிப்பூதங்களுண்டாகின்றனவோ
உண்டாயின வெதனாற் சீவிக்கின்றனவோ எதனிடத்தில்லய
மாகின்றனவோ. அதுவே யுண்டாக்கியதுவே பிரவேசித்தது.
எவன் ஆன்மாவிலிருப்பவனாய் ஆன்மாவை யுள்ளே நியமிக்கின்
றானே" என்பது முதலிய சிருஷ்டிஸ்திதி பிரளயம் பிரவேசம்
நியம மென்னு மைந்துவித அர்த்தவாத வாக்கியங்களுக்கு அபே
க்ஷித்திலேயே தாத்பர்ய மென்று கூறி இப்போது விரோதமின்றி
யதான முடிந்ததை முடிக்கின்றார்.

எவ்வுயிர் ருளத்தி னோ டெழுந்திடும் விருத்தி யாது,
மெவ்வவி கிருத னென புருடனிங் கறிகு வாயே, வவ்விவன்
பிரம ரூப னவனென் றெதுசொற் றேம்பா, மிவ்வண மத
னைத் தாபித் திட்டனமெனவே யோர்வாய்.

(47)

(பா-மை)—எவ்வுயிருளத்தினோடும் - ஸ்தாவராஜங்கம எவ்வா
ஜீவர்களின் அந்தக் காணத்தின் கண்ணும், யாது விருத்தி யெழுந்
திடும் - எப்புத்தி விருத்திகள் உற்பன்னமாகா நிற்குமோ அதன்,
இங்கு - காண்க, எவ்வவி கிருதனை புருடன் - விகாரமின்றிய எப்
புருடன், அறிகுவாயே - அறிந்துகொண்டிருக்கின்றாயே - அவ்
விவன் - அந்த விகாரமின்றியவனை இவ்வபோக்ஷ வான்மாவே,
பிரமரூபனென்று-பிரஹ்ம சொரூபனே யிருக்கின்றானென்று,
யாம் எது சொற்றோம் - நம்மால் யாது கூறப்பட்டதோ, அதனை -
அவ்வருத்தத்தை, இவ்வண்ணம் தாபித்திட்டனம் - (இவ்வான்மாவே

பிரஹ்மம் என்னும்) இப்பிரகாரம் நிலை பெறுத்தினம், எனவே யோர்வாய் - என்று அறிந்து கொள்வாயாக.

(ப-ம்)—ஜீவான்மாக்களின் புத்தி விருத்திகளை எல்லாம் எப்புருடன் விகாரமின்றியவ ளை யறிகின்றாளே அப்புருடன் இயல்பாகவே பரமான்மாவெனப் படுகின்றானென எம்மாற் சூருவம் 34-வது செய்யுளிற் கூறப்பட்ட பொருளை இங்ஙனம் பிரமாண விரோத பரிகார பூர்வகம் நிலை பெறுத்தினேன் என்பது பொருள். (47)

(அ-கை)—எங்ஙனந் தத்துவமசி வாக்கியம் ஜீவப் பிரஹ்மங்களுக்கு அம்சாம்சி வடிவ அற்ப பேதமுஞ் சகிக்காதோ அக்கால் மீன் தண்ணீர்போன்று அத்தியந்த வேற்றுமையையுஞ் சகிக்கவே மாட்டாதெனக் கூறுகின்றார்.

மதிக்கரி சிவத்தி னின்று மகரமா வுததி மாலுங்
கதிக்கறு பேத மேயெக் காலுளகடக்கம் போன்றன்
றுதிக்கில வதுநீ யாவாயிவனின்முன் னுரையி னேறு
விதிக்குறெவ்வணமஞ்ஞான்று விரோதமதடைந்திடாயோ.

(ப-ரை)—எக்கால் - எப்போது, மதிக்கரி - புத்திக்குச் சான்றான வான்மா, சிவத்தினின்று - பிரஹ்மத்தினின்றும், மகரம் - மீன், மாவுததி - பெரிய சமுத்திர நீர், மாலும் - இவற்றைப் போன்று, கதிக்கு அறு - கூறுதற்கரிய, பேதமேயுள - வேற்றுமையையே யுடையதாகின்றதோ (ஆனால்), கடக்கம் போன்று - கடாகாயம் போல, அன்று - அன்றோ, அஞ்ஞான்று - அக்கால், உதிக்கில - உற்பத்தியற்ற, அது - பிரஹ்மம், நீ ஆவாய் - நீயாயிருக்கின்றாய், இவனின் - இவ்வான்மாவே நீ, (என்று) - விதிக்குறு - விதித்த, முன்னுரையினேறு - முற்கூறப்பட்ட தத்துவமசி முதலிய வாக்கியங்களோடு, எவ்வணம் - எப்படி, விரோதமது - விரோதத்தை, அடைந்திடாயோ - அடையமாட்டாயோ.

(ப-ம்)—எஞ்ஞான்று புத்தி சான்றான ஆத்மா மகரோதகம் போன்று பிரஹ்மத்தினும் வேறே ஆனலிங்ஙனம் கடாகாயம் மஹாகாயத்தினின்றும் கடமாகிய வுபாதியாலாக்கப்பட்டதைப்

போன்று இன்ரு அஞ்ஞான்று ஜீவப்பிரஹ்மங்களுக்கு மத்ய வுதகம் போன்று பரமார்த்தபேதம் அங்கீகரிக்கதேரும் அதலல் தத்துவமஸி வாக்கியம் விரோதமுடையதாகும். (48)

(அ-ஸ்ரு)—ஆகேஷபம் தத்துவ மஸியாதி வாக்கியங்கள் வஸ்து பரத்தன்மையையுடைய தாகுங்கால் பேதத்தைத் சகிக்காது. ஆலல் வஸ்து பரத்தன்மையே யதற்கின்று உபாசனைபரத்வ மூடையதாகையால் என்று ஆசங்கிக்கின்ரூன் பூர்வபக்ஷி.

இம்மொழி யஞ்ஞானத்தை பிரித்துமெய்ப் பிரமந் தன்னைச், செம்மையின் விளக்க லாவ தன்றுசெப் பெதனி ரூற்கே, ளம்முபா சனையாங் கன்ம விதிபர மதனி ரூனை, சம்மத வெமக்குச் சாற்றும் விரோதஞ் சற் றணுகு ரூதே.

(ப-ஸ்ரு)—இம்மொழி - இந்தத் தத்துவமஸி வாக்கியம், அஞ்ஞானத்தை இரித்து - அஞ்ஞானத்தைக் கெடுத்து, மெய்ப் பிரமந்தன்னை - சத்தியஸ்வரூப பிரஹ்மத்தை செம்மையின் - தெளிவு விதாக, விளக்கலாவதன்று - தெரிவிப்பதாகிய வஸ்து பரத்துவமூடையதாகாது, செப்பெதனிரூல்கேள் - இங்ஙனங் கூறியது எதரூலெனக் கேட்பாயாயின், அம் உபாசனையாம் கன்ம விதிபரம் - அழகிய பிரஹ்மத்தின் உபாசரூ கர்ம விதிரூடைக் கூறும் பரத்துவ மூடையது, அதனிரூல் - அவ்வேதவாக்கியத்தால், சம்மத எமக்கு - எங்களுக்குப் பொருத்தமானதே, சாற்றும் விரோதஞ் சற்றும் அணுகுரூது - கூறும் விரோதம் அற்பமேனு மெம்மைச்சாராது.

(ப-ம்)—இத்தத்துவ மஸிவாக்கியம் அஞ்ஞானத்தைக் கெடுத்து வஸ்துவின் ஸொரூபத்தைப் போதிக்கும் பரமானதத்து. ஆலல் சத்தின் உபாசரூகர்மத்தைக் கூறும் பரமூடையது. ஆகையால் தத்துவமஸியாதி வாக்கியங்கள் எனக்கு விரோத மூடையனவாகா அதாவது வாக்கியம் உபாசரூவிதிபரமானதால் அவ்வாக்கியவஸ்து பரத்தன்மையின்மையின் என் மதத்தை திரஸ்கரிக்கச் சாமர்த்தியமூடையதாகாது என்பது பொருள். (49)

(அ-கை)—வாக்கியம் உபாசனை விதிபரமென்பதைத் திருவுடாந்தத்தினாற் சாதிக்கின்றான்.

மின்மன முதலிற் காரண திருட்டி விதித்திடும் பிர
திணமு யதனிற், றன்மதி யொழித்துக் கடவுடன் மதியை
யாற்றிடச் சாற்றுமெவ் வணந்தான், றன்மய வுயிரி லவ்
வண மாகத் தத்துவ மசியெனு மூரையாற், சன்மயப் பிரம
மதி செய நிதமுஞ் சாற்றிடப் படுமித துதிடமே. (50)

(ப-ரை)—மின் - விளக்குகின்ற, மனமுதலில் - மனமுதலான வற்றில், காரண திருட்டி விதித்திடும் - காரணத்தைத்காணும் பொருட்டு விதிக்கப்பட்டுளது, (மேலும்) பிரதிணமயதனில் - விக்கிரகத்தில், தன்மதி யொழித்து - தனது சிவ யென்னும் புத்தியை விட்டு, கடவுடன் மதியை யாற்றிட - சுவரபுத்தியைச் செய்யும்படி, சாற்றும் எவ்வணந்தான் - எங்ஙனங்கூறப்படுகின்றதோ, அவ்வணம் - அங்ஙனம், தத்துவ மசியெனு மூரையால் - தத்துவமசிவாக்கியத்தால், தன்மயவுயிரில் - தனது வடிவமாய ஜீவனிடத்தில், சன்மயப் பிரமமதிசெய - சத்துவடிவமாய பிரமத்தின் புத்தியுண்டாக - நிதமுஞ் சாற்றிடப்படும் - எப்போதும் பகரப்படுகின்றது - இது திடமே - இங்ஙனங் கூறியது சத்தியம்.

(ப-ம்)—"மனைதப் பிரமமென்று உபாசிக்குக. ஆதித்தியனைப் பிரமமென்று உபாசிக்குக. ஆகாசத்தைப் பிரமமென்று உபாசிக்குக. அன்னத்தைப் பிரமமென்று உபாசிக்குக" என்பதாதி சுருதிகளான் மனமாதித்தியன் முதலியவற்றில் காரணமான பிரமமுபாசனை விதிக்கப்படுகின்றது. அங்ஙனமே எழுதப்பட்ட சுவர சித்திர முதலியவற்றில் அதிஷ்டான புத்தியைக் கெடுக்காமலே தேவதற்தன்மையின் புத்தியாரோபிக்கப்படுகின்றது. அங்ஙனமே தத்துவ மசிவாக்கியத்தால் தவம்பதார்த்த வடிவ ஜீவனிடத்தில் ஜீவத்தன்மையை நீக்கிமேல சத்சுரூபப் பிரமம திருவுடி விதிக்கப்படுகின்றது. என்னினின், எகத்தன்மை பரத்துவ முடையதாகில் பிரமாணாந்தரவி

விரோதமாதலின் ஆலல், நான் சத்தான பிரஹ்மமாயிருக்கின் றே னென்ற புத்தியின் அழுத்தமே விதிக்கப்படுகின்றது என் பது பொருள். (50)

(அ-கை)—தத்துவ மசிவாக்கியம் உபாசலை விதிபர்முடைய தென வோர்பக்கத்தைக் கூறி இப்போது குணவாதபரம் அல் லது ஸ்துதி பரம் அல்லது விபரீத போதகம் என்ற வேறு பக்கங் களை இரண்டு செய்யுட்களால் உதாகரிக்கின்றார்.

அல்லதிம் மொழிகணீ யென்பதற்கு னதருத்தந் தன்னை நல்லருளம் பிரமமமாக நவின்றது குணவா தத்தாற் கொல்லாமே தவதத்தன் தனிவனெனக் கூவிற்பீதி யில்லெழுதிற் புருடன்றன்னை யியம்புவ ரெவணந்தானே.

(ப-ளை)—அல்லது - மேற்கூறிய வண்ணமின்றேல், இம் மொழிகள் - இந்தத் தத்துவமசி முதலிய வாக்கியங்கள், நீ யென் பதற்கு அருத்தந் தன்னை - துவம்பதப் பொருளானசீவனை, குணவாதத்தால் - குணத்தைக் கூறு மபிப்பிராயத்தால், நல்லரும் பிரமமாக நவின்றது - மிக வரிய பிரஹ்ம வடிவமுகக் கூறிற்று, எவணம் - அஃதெம்மாதினியெனின், கூவில் - சொல்லுமிடத் தில், பீதியில் - நிர்ப்பயமான, எழில் புருடன்றன்னை - அழகிய மனிதனை, தேவதத்தன் இவன் - தேவதத்தனென்னும் இம்மனி தன், கொல் அரி - கொல்லுகின்ற சிம்மம் என்று, இயம்புவர்- பிரதிபாதியா நிற்பர் அன்றே.

(ப-ஸ)—இத்தத்துவமசி வாக்கியம் நீயென்ற சத்த வாச்சிய னென ஜீவனை குணவாதத்தினால் சத்தான பிரஹ்மமாயிருக்கின்று யென்று கூறுகின்றது. அஃதெங்ஙனமெனின் பயமின்றிய புட னைப் பார்த்து இத்தேவத்தன் சிம்மமென்று கூறுவதுபோன்று.

(அ-கை)—துதி பாதன்மையைக் கூறுகின்றார்.

அல்லது குலிச முகுவை யரியே யாகுவை யெனவுரை கரல்போ, னல்லொரு சிவமே யாகுவை யெனவே நவின்றது துதியையே நாடி, யல்லதிவ் வசனஞ்சத்துரு வதற்குத் துவம்பத வரும்பொரு ளான, நல்ல தத்துவத்தின் றன்மை யே நவின்றதென்பதிற் குறையெதோ நவிலீர். (52)

(ப-ஈ)—அல்லது, குலிசனுகுவை - நீ தேவேந்திரனு யிருக்கின்றாய், அரியேயாகுவை - நீ விஷ்ணுவா யிருக்கின்றாய், என வுரைதாால்போல் - என்று கூறுகின்றதைப்போன்று, துதியையே நாடி - துதிக்குங் கருத்தால், வாக்கியம், நல்லொரு சிவமேயாகு வையெனவே நவின்றது - நீ அழகிய ஒப்பற்ற பிரஹ்மமா யிருக்கின்றாய் என்று கூறிற்று, அல்லது, இவ்வசனம் - இத்தத்துவமசி வாக்கியம், சத்துருவதற்கு - சத்தான பிரஹ்மத்திற்கு, துவம் பத வரும் பொருளான - துவம்பத வாச்சிய அரிய ஜீவனையிருக்கின்ற, நல்ல தத்துவத்தின் றன்மையே நவின்றது - நல்ல ஜீவத்துவத் தையே கூறிற்று, என்பதிற் குறையெதோ நவிலீர் - என்று கூறப்பட்ட பொருளின் குறையுண்டோடற் புகல்வீராக.

(ப-ஙி)—எங்ஙனங் கொடையாளியான புருடனை நீ இந்தி ரனு யிருக்கின்றாய் நீ விஷ்ணுவா யிருக்கின்றாய் என்று இரப் போர் துதிக்கின்றார்களோ அங்ஙனமே ஈண்டும் ஜீவனைத் துதிக் கும் பொருட்டுச் சத்தான பிரஹ்மமா யிருக்கின்றாய் என்று தத் துவமசி வாக்கியங் கூறுகின்றது. அல்லது சத்ரூபப் பிரஹ்மத்திற் குத் துவம்பத வாச்சிய ஜீவாத்ம வடிவத்தைக் கூறுகின்றது. அதாவது பிரஹ்மம் ஜீவனு யிருக்கின்றதென்று கூறுகின்றது எனப் பொருள். (52)

(அ-ஙக)—ஆக்ஷேபம். தண்புற வியற்றுமிதனு லெப்பயன், ஜீவனது வியல்பான பிரஹ்மத் தன்மையை வாக்கியம் போதிக்க மாட்டாதெனக் கூறுகின்றார்.

அருமொழி யதனி னீயென் மொழியறை யுயிரொக் காதும் பரமநல் லான்ம ரூபப் பதியென் மெய்ப்பொ ருளே யாயிற் றெரிதர விலது கன்ன துருவமே னிவன்றன் செப்பீர் பிரிவறு மொழியாற் போதிப் பிக்குலே யாமெ தாலே. (53)

(ப-ஙி)—அருமொழி யதனில் - அரிய மகாவாக்கியத்தில், நீ என் மொழி அறையுயிர் - நீ யென்ற துவம் பதத்தாற் கூறப் பட்ட ஜீவன், எக்காலும் - எப்போதும், பரம நல்லான் மரூபப் பதியென் மெய்ப்பொருளே யாயில் - மேலான பரமாத்ம பதத்

தாற் கூறப்படும் சுத்தியப் பிரஹ்மமாயின், தன்னது உருவம் - தனது வடிவமான பிரஹ்மத்தை, இவன்றன் - இச்சீவன், என்- எக்காரணத்தால், தெரிதால் இலது-அறியவில்லை, செப்பீர்-கூறுவீராக (அன்றியும்), பிரிவரு மொழியால் - அத்வைத வாக்கியத்தால், எதால் - எவ்வாறு, போதிப்பித்தலே யாம் - போதித்தல் கூடும்.

(ப-மீ)—தத்துவமசி வாக்கியத்தில் நீ என்ற சப்த வாச்சிய ஜீவன் எப்பொழுதும் பரமான்மாவான சத்சப்த வாச்சியார்த்த ரூலல் அப்பொழுது இச்சீவன் தனது இயல்பான பிரஹ்மத் தன்மையை யேன் அறிகின்றானில்லை ? ஆலல் வாக்கியத்தால் போதிக்கப்படுகின்றது என்பது எதலேலா அக்காரணத்தால் பிரஹ்மத் தன்மை இவனுக்கு இயல்பன்று என்பது பொருள்.

(அ-ஸ)—கூறிப் போந்த பொருளாகிய முடிந்ததை முடிக்கின்றான் பூர்வபக்ஷி.

காரண மிதலை லேயே கருதது நீயென் வாக்கு
மாருயிர் பிரம மென்ற வறைந்திட லிலையதாலே
யாரண மொழிகள் வேறு யாதுதான் காணலாகுந்
சீரணை தமையு மிந்த நெறிகொடே தெரிய வேண்டும். (54)

(ப-ஸ)—காரண மிதலல் - இக்காரணத்தால், கருதது நீ என் வாக்கு - கருதாநின்ற தத்துவமசி வாக்கியமானது, ஆருயிர்-ஜீவன், பிரமம் என்ற-பிரஹ்மமா யிருக்கின்றனென்று, அறைந்திடலிலை - கூறவில்லை, அதால் - அக்காரணத்தால், ஆரண மொழிகள்-வேத வாக்கியங்கள், யாது வேறு காணலாகும்-யாவை அயலாகக் காணப்படுகின்றனவோ, சீர் அணை தமையும் - சிறப்புடைய அவைகளையும், இந்த நெறிகொடே தெரியவேண்டும் - இம்மாதிரியாகவே தெரிந்து கொள்ளவேண்டும்.

(ப-மீ)—வாக்கியம் உபாசனாவிதி பரமாதலின் ஜீவனுக் குப் பிரஹ்மத் தன்மையைப் போதிப்பதன்று. அதலால் மற்றைய வாக்கியங்களையும் இம்மாதிரியாகவே கொள்ளவேண்டும். (54

(அ-கை)—தத்துவமசி வாக்கியம் உபாசனா வாக்கியத்திலும் விலக்ஷணமாதலின் வஸ்து பரத் தன்மையதேயாம் என்று சித்தாந்தி சாதிக்கின்றார்.

நீமொழி மொழியெ தாலே நீயது வாவா யென்னுந்
தூமொழி யதற்கு வேறு மதனினுந் சொல்லுமம்பாலை
சேமநற் பரம தின்ற நிமலசத் துருவந் தானே
சேமசத் துருவ மென்னுச் செறியறி வுறுத்த லாகும். (55)

(ப-கை)—எதால் - எக்காரணத்தால், நீ மொழி - நீ கூறுகின்ற, மொழி - வாக்கியம், நீயதுவாவா யென்னும் - நீ யதுவாயிருக்கின்றாய் என்னும், தூமொழி யதற்கு வேறும் - பரிசுத்தமான வாக்கியத்திலும் விலக்ஷணமோ, அதனினும் - அக்காரணத்தால், சொல்லும் - கூறப்படும், நல்சேம - மிகவழகிய, பாற்பரம தின்றும் - உபாசனா பரமானதன்று (மற்றே), நிமல சத்துருவந் தானே - பரிசுத்த சத்தான ஜீவனே, சேம சத்துருவமென்று - காக்கும் சதது வடிவப் பிரம்மமென்று, செறி அறிவு உறுத்தலாகும் - தன்கறி வுறுத்தலாம்.

(ப-மீ)—தத்துவ மசி வாக்கியம் "மனைதப் பிரம்மமெனவுபாசிக்குக" வென வுன்ன லுதாகரிக்கப்பட்ட வாக்கியத்திலும் விலக்ஷண மாதலின் உபாசனாவிதி பரமானதன்று. மற்றே ஜீவாத்மாவாகப் பிரமேயித்த பிரம்மத்திற்கே பிரம்மத் தன்மையைப் போதிப்பது என்பது பொருள். (55)

(அ-கை)—தத்துவமசி வாக்கியம் உபாசனா வாக்கியத்திலும் விலக்ஷண மானதெனச் சாதிக்கின்றார்.

உளமா திகளி லம்மொழிக ளனற்று வென்றதன் னெ
விதுபவாற், தளராத் தலைமைப் பதத்தகுற் தாற்றுத்
திருட்டி விதித்துளதாற், தெளியின் வசனமதனாற் தெரிக்
குஞ் விதியவ் வணமிலதா; மொளிசெய் பதனையின் வுரையவ்
வுரையி னின்று மன்னியபேமே. (56)

(ப-கை)—அம்மொழிகள் - அவ்வுபாசனா வாக்கியங்கள், என்று என் ஓலியதுவாம் - என்று என்ற சத்த வடிவான, தன

ராத் தலைமைப் பதத்ததால் - நிலையான முதன்மைப் பதத்தினை யுடைத்தா யிருத்தலின், அவற்றுள் - அவ்வாக்கியங்களால், உள மாதிகளில் - மன முதலியவற்றில், சாற்றுந் திருட்டி விதித்த னது-சொல்லாநின்ற உபாசனை பார்வை விதிக்கப்பட்டது, தெளி இவ்வசன மதனாடு தொனிக்கும் - தெளிந்த இத்தத்துவமசி வாக் கியம் போதிப்பது, விதி அவ்வணமிலதாம்-காரணதிருஷ்டி விதி பாம்போலன்றும், ஒளி செய்யதலால் - இங்ஙனம் விளங்குவதால், இவ்வுரை - இத்தத்துவமசி வாக்கியம், அவ்வுரையினின்றும்-அவ் வுபாசனை வாக்கியத்தினின்றும், அன்னியம் - வேறனது.

(ப-ம்)—என்று என்னுஞ் சத்தத்தை முடிவிலுடைய பிர ஹ்ம பதத்தாற் கூறப்பட்ட பிரற்ம புத்தி ; மனம் சூரியன் அன் னம் முதலியவற்றில் "மனைதப் பிரஹ்மமென்று பாசிக்குக" என்பது முதலிய வசனங்களால் விதிக்கப்பட்டது. சண்டு தத் துவமசி வாக்கியத்தி லெனிலோ அங்ஙன மாய என்று என்னுஞ் சத்தத்தைச் சரிவுடைய பதத்தாற் போதிக்கப்பட்ட திருஷ்டி விதியின்று. ஆகையால் மனம் பிரற்மமென்னும் அந்த வாக்கி யத்தினும் இத்தத்துவமசி வாக்கியம் மிக வேறு விலக்கணமுடை யது எனப் பொருள். (56)

(அ-ஸ)—தத்துவமசி வாக்கியம் உபாசனைவாக்கியத்தினும் விலக்கணமானதால் வஸ்துநிஷ்டமாமேல் அக்கால் மனம் பிரஹ் மம் என்பது முதலிய வாக்கியங்களும் வஸ்துநிஷ்டங்களே என்ற வீண்டுக் கூறுகின்றார்.

இரவியு மனமுமம் வானு முதலிய வினைத மக்கு
வரையலை சத்துலுபத் தன்மையை யுரைப்பதின்றே
பிரமத்தின் றிருட்டி. யோது மொரிதுபா சனையே செய்யத்
திரமன முதலைனைக்குந் திகழுனை மொழிதலாலே. (57)

(ப-ஸ)—இரவி + தமக்கு - சூரியன் மனம் ஆகாயம் அன் னம் ஆகிய இவற்றிற்கு, உரை அனை - கூறும் அவ்வுபாசனை வாக் கியங்கள், சத்து ரூபத் தன்மையை யுரைப்பதின்று - சத்துரூபப் பிரஹ்ம வடிவத்தைப் போதிப்பதின்று (எனினின்), பிரமத்தின்

திருட்டியோடு - பிரவ்ம திருஷ்டியோடுங் கூடி, பெரி தூபாச னையே செய்ய - முக்கியமாக உபாசனையைச் செய்ய, திகழுவை - வினங்கு மவ்வுபாசனை வாக்கியங்கள், திரமன முதலவைக்கு - திரமான மனமுதலியவற்றை உபாசியென்று மொழிதலாலே - கூறுகின்றமையின்.

(ப-மீ)—மனம் பிரவ்மம் என்பது முதலிய அவ்வுபாஸனாவாக்கியங்கள் சூரியன் மனமுதலியவற்றைச் சுத்தரூப பிரவ்மமெனக் கூறவில்லை. மற்றை யாதெனின் மனமுதலியவற்றைப் பிரவ்ம திருஷ்டியோடுங்கூடி வேறு பலனைக் கருதி முக்கியமாக வுபாசிக்கவேண்டிய தெனக் கூறுகின்றனவெனப் பொருள்.

(அ-கை)—ஆகூபம் மட்கடங்களுக்குப்போல பிரவ்ம மனங்களுக்குப் பிரகிருதி விகிருதி வடிவ மிருத்தலின் தாதாத்மிய வுபதேசம் வஸ்து பரமாகவே லகாதென்று ஆசங்கித்துக் கூறுகின்றார்.

கரக மண்ணினிற் பிறிதிலை கருத்துமுன் னதுபோற்
பரம சத்தினிற் பிறிதிலை யெனவத்துப் பரத்வ
மூரைபு ரற்றுவை யெப்பொழு தப்பொழு துனக்கு
வொருபய னுமில் விதியொலி யென்றெனு மொலியே. (58)

(ப-ஈ)—எப்பொழுது - எக்கால், காகம் - கடம், மண்ணினில் - காரணமான மண்ணினின்றும், பிறிதிலை - வேறுகவின்று, கருத்து முன்னதுபோல் - அங்ஙனம், மனமுதலியவை, பரம சத்தினில் - பிரவ்மத்தினும், பிறிதிலை - வேறுக வின்று, என-என்று, வத்து பரத்துவம் - வஸ்து பரமுடையதாக, உரை- உபாசனை வாக்கியங்களை, உருத்துவை - கூறுவையாயின், அப்பொழுது- உனக்கு, விதியொலிய என்று எனுமொலி - விதிசத்தமும் என்று என்ற சத்தமும், ஒருபயனு - மில் யாதொரு பயனுமின்றுயனவாம்.

(ப-மீ)—எங்ஙனங் கடமுதலிய காரியங்கள் தங்காரணமாய மண்ணினுஞ் வேறன்றே அங்ஙனம் மனம் சூரியன் முதலியவையும் காரணப் பிரவ்மத்தினும் வேறுக வின்றென வஸ்து பரத்

தன்மை எக்காலுண்ணு லங்கீகரிக்கப்படுகின்றதோ அக்கால் மனதைப் பிரஹ்மமென வுபாசிக்குக வென்னு மிவ்வாக்கியத்தில் உபாசிக்குக வென்னும் விதிசத்தமும் என்று என்னுஞ் சத்தமும் வீணாகின்றன. ஆகையால் மனம் பிரஹ்மம் என்பன முதலிய வாக்கியங்கள் உபாசனு பரத்துவமுடையவையாதலின் வஸ்து பரத்துவ முடையனை யன்று எனப்பொருள். (58)

(அ-கை)—ஆகூபம் உபாசிக்குக, என்று, என்ற சத்தங்களை நீக்கி மனம் பிரஹ்மம் என்பன முதலிய இரண்டு பதங்கள் சமான வேற்றுமையிலை சமாநாதி கரண்யத்தை யடைகின்றன. அதனாலும் வஸ்துபரமே என்ற வாண்டுக் கூறுகின்றார்:

மனமு தலன வேற்றுமைச் சமமரு விடலாற்
பனும்வி தியொலி யென்றனைப் பகரொலி பாறி
சனக மென்றுறுஞ் சத்தொடுந் சம்பந்த முறுமேன்
மனமு தலன பொய்யெனப் புடம் வழங் கியதே. (59)

(ப-ரை)—மனமுதலன -மனமுதலியவை, பனும்கூறப்படும், விதியொலி - உபாசிக்குக வென்னும் விதிசத்தத்தையும், என்றனைப்பகரொலி - என்று என்ற சத்தத்தையும், பாறி - நீக்கி, சமம் வேற்றுமை மருவிடலால் - சமான வேற்றுமையையுடையனவாதலின், சனக மென்றுறும் - காரணமான, சத்தொடும் - பிரஹ்மத்தோடும், சம்பந்த முறுமேல் - சம்பந்தத்தையடையுமாஞல், மனமுதலன - மனமுதலியவை, புடம் - நன்ருக, பொய் யென - மித்தை யென்று, வழங்கியது - கூறப்பட்டன வாகின்றன.

(ப-ம்)—ஒரே வேற்றுமையுடைமையாம் மனம் ஆதித்தன் முதலியன; விதிசத்தத்தையும் என்றனுஞ் சத்தத்தையும் விட்டு காரணப் பிரஹ்மத்தோடும் சமாநாதி கரண்ய மடையுமேல் அக்காலம் மனமுதலியன அசத்திய மென்று வெளிப்படையாக வுண்ணுல் கூறப்பட்டதாயிற்று. இப்போது மனமுதலியவுலகு அசத்தியமெனவுன் சித்தாந்தமாகின்றது. அது வுனக் கபசித்தாந்த

மாதலின் பொருத்தமின்று. ஜடாஜடங்களுக்கு வாஸ்தவதா
தாத்மியமின்மையா லென்பது பொருள். (59)

(அ-கை)—ஆகேடபம் மனமுதலியவை பிரஹ்மமத்தின் சமா
னாதி கரண்யமுடைமையால் மித்தையாத் தன்மையனவேல் ஜீவ
னும் தத்வது மசிவாக்கியத்தில் சமானாதிகரண்ய முடையதாகை
யால் நிவணைத்தால் எங்ஙனம் மித்தையாகாது என்று பூர்வபக்ஷி
கேட்கின்றான்.

ஆகுமேற் சிவசீ வர்க்கு மதிபுட மதுவே யாகு
மேகவேற் றுமையி னுலே யியம்பது நீயென் னீது
மேகவேற் றுமையை யேயுமிவ்வுட லிறைக்கு மெவ்வா
றாகுமா றில்லை சொல்லீ ரசத்தியத் தன்மைதானே. (60)

(ப-மை)—ஆகுமேல் - அங்ஙனமா மேல், சிவ சீவர்க்கும் -
ஜீவேசுரர்களுக்கும், அதிபுடமதுவே யாகும் - மிகவெளிப்படை
யாக அச்சமான வேற்றுமை விளங்குகின்றது, ஏகவேற்றுமை
னலே - சமான வேற்றுமையினால், இயம்பு - கூறுகின்ற, அது
நீ யென் னது - அது நீயா யிருக்கின்றாய் என்ற இதனால், ஏக
வேற்றுமையை யெயும் - சமான வேற்றுமையைப் பொருந்திய,
இவ்வுடலிறைக்கும் - இச்சரீராதாரியான ஜீவனுக்கும், எவ்வா று -
எவ்வேதுவால், அசத்தியத்தன்மை - மித்தையாத்தன்மை, ஆகு
மாறில்லை - உண்டாகுமாட்டாது, சொல்லீர் - இதனைச் சொல்லு
வீராக?

(ப-மீ)—அது நீ என்று ஜீவப் பிரஹ்மங்களுக்குச் சமான
விபக்தியுடைய பெயர் தன்றாக விளங்குகின்றது. அதனால்
சமான விபக்தியுற்ற சரீராதாரியான ஜீவனுக்கு மனமுதலியவற்
றிற்குப் போன்று அசத்தியத்தன்மை எங்ஙனமுண்டாகாது?
ஆனால் உண்டாகின்றதே. அதனால் அச்சீவனுக்குச் சுருதி
சித்தவிகாரமின்றிய பிரஹ்ம வடிவத்தன்மை சித்தியாதெனப்
பொருள். (60)

(அ-கை)—சித்தாந்தி பிரஹ்ம சமானாதிகரண்யம் மித்தை
யாத்தன்மையை யுண்டு பண்ணுவதன் றெனக் கூறுகின்றார்.

(ப-ரை)—மறைகளில் - வேதங்களில், மனமதாதிய அவற்றினுக்கு - மனமுதலானவற்றிற்கு, அளவறுமுறையின் - அதேகந்தாம், தெளிசிவமதனினிருந்து - சுத்தபர சிவத்தினின்றும், உதித்திடுதல் - உண்டாதல், உளதாம் - உண்டென, தெரித்திடப்படும்-கூறப்படுகின்றது, அதலால்-அங்ஙனமுற்பத்திகேட்கப்படுதலினும், களிசமமான வேற்றுமையால் - விரும்பிய சமான வேற்றுமையினும், உட்கருத்து - மனம், அனம் - அன்னம், ககனம் - ஆகாயம், ஆதிகட்கு - முதலான வற்றிற்கு, வினிவறும் பான்மை - அநித்தியத்தன்மை, பொருந்து மென்பது - உண்டாகு மென்பது, சேர்வெளியதுவாய் - நன்றாக வெளிப்படையாய், விளங்கிடும் - விளங்குகின்றது.

(ப-ம்)—"மனமும் எல்லா விந்திரியங்களு மிதனினின்று முண்டாகின்றன. உண்ட அன்னம் மூன்றாகப் பகரப்படுகின்றது. அதன் ஸ்தூல பாகம் (அப்)புரீஷம் அதன் மத்திய பாகம் மாமிசம் அதின் யாதுமிகசூக்ம மநோமனமாகின்றது" என்பது முதலிய சுருதிகளில் மனமுதலியவற்றிற்குப் பிரத்தமமான காரணத்தினின்றும் காரியத்தன்மை கூறப்பட்டமையினும் சமான விபக்தியினும் மனமுதலியன அசத்தியமென நன்றாக அறியத் தக்கது என்பது பொருள். (62)

(அ-கை)—"எங்ஙன மக்கினியினின்றும் தாழ்ந்த விஸ்புலிங்கங் (பொறி)களுண்டாகின்றனவோ அங்ஙனமே யிவ்வான்மாவினின்றுஞ் சர்வப் பிராணன் சர்வலோகம் சர்வ தேவதை சர்வபூதம் ஆகிய இச்சர்வமும் வெளிப்படுகின்றன", என்னுஞ் சுருதியால் ஜீவனுக்கு மன முதலியன போன்று பிரத்மத்தின் காரியத் தன்மை கேட்கப்படுகின்றமையின் மித்தையாதன்மை எனுண்டாகாதென வாசங்கித்து அது ஜீவனின் தொடர்வற்பத்தியன்று ஆனல் விசிஷ்டத்தி னுற்பத்தி யென்னு மபிப்பிராயத்திலல் சித்தாந்தி கூறுகின்றார்.

உலக காரண மாகிய சிவத்தினின் றுடனுறை யுயிர்தற்
கிலகு மாமறை யவைகளி னற்பிறப் பியம்பிட விலையேயா
மலமு ணுதிவி காரங்க ளாருயி ரதுதனக் குகளிலை
யலவி லாகமல் லறிஞர்கள ணுதின மயலென வறிவாரே.

(ப-ை) — உலக காரணமாகிய, சிவத்தினின்றும் - பிரஹ்மத்தினின்றும், உடல் உறை உயிர் ஈதிற்கு - உடம்பிலுள்ள இந்தச் சீவனுக்கு, இலகுமாமறை யவைகளினால் - விளங்கும் மகத்தான அவ்வேதங்களால், பிறப்பு இயம்பிடல் இல - உற்பத்தியாதலைக் கூறவில்லை, அதனால் - அவ்வேதத்தால், அலமறுதி விகாரங்கள் - அலையாகின்ற மன முதலிய விகாரங்களை, ஆருயிரது தனைக்கு - பொருந்திய ஜீவனினின்றும், அலவிலாத கல்லறிஞர்கள் - சம்சார சஞ்சலமின்றிய ஞானிகள், அணுதினம் - எப்போதும், அயலெனவறிவார் - அன்னியமென அறிவார்கள்.

(ப-ீ) — சரீர உபகிதனென விச்சீவாத்மா சர்வலோககாரணப் பிரஹ்மத்தால் சிருஷ்டிக்கப்பட்டதை சுருதிகளில் கூறப்படாமையின் ஜீவன் மன முதலிய காரியங்களினும் விலக்ஷணனென வித்துவான்கள் அறிகின்றார்கள். ஆகவின் ஜீவன் மன முதலியன போன்று பிரஹ்ம சமாஸ்திகாண்ய னெனும் அசத்தியனன்றென்பது பொருள். (63)

(அ-ை) — ஜீவன் பிரஹ்மத்தின் விகாரமென்பது சுருதிகளிற் பிரசித்த மென்பதின்றேறல் அக்காலச்சொரூபத் தன்மைய னெனப் பிரசித்த னென்னும் வேட்கைக்கு விகாரமற்ற பிரஹ்ம சொரூபத் தன்மையனே யெனச் சித்தாந்தி கூறுகின்றார்.

சோக்குடம்விக் கிரகமாகி நவவுலமெவ் வக்காரந்தா
னைக்குமிவ் வம்பாரா தியகிலத்தை யதுவேதன்னை
லாக்கிய சகத்திறாகு முட்செலு மதுதனக்கே
சூக்குமச் சிவணமஞ் சுருதிக ளோதுமாதோ. (64)

(ப-ை) — எவ்வக்காரந்தான் - எந்த அழிவற்ற பிரஹ்மம், சோக்குடம் விக்கிரகமாகநவவுலும்-சிருஷ்டியின் ஆரம்பத்தில் சிருஷ்டிப்போமெனப் பார்க்கும் வடிவுடையதாகக் கூறப்படுகின்றதோ, அதுவே - அப்பிரஹ்மமே, இவ்வம்பாராதியகிலத்தை - இந்த ஆகாயத்தை ஆதியிலுடைய வுலகத்தை யுண்டாக்கும், தன்னிலாக்கிய - தன்னை யுண்டாக்கிய, சகத்திறாகும் - உலகத்திலும்,

உட்செலும் - ஜீவவடிவாகப் பிரவேசிக்கும், அது தனக்கே - அங்ஙனம் பிரவேசனுக்கே, சூக்குமச் சீவநாமம் - சூக்ஷ்மத்தன்மைய னென ஜீவனென்னும் பெயருடையதாக, சுருதிகள் - வேதங்கள், ஓதும் - பிரதிபாதியா நிற்கும்.

(ப-ம்)—"அது பார்த்தது. அதுவே தேஜஸை யுண்டாக்கி னது. பிரஞ்ஞானம் பிரஹ்மம்" என்னுஞ் சுருதிகளால் காண்போ னது யாதொரு அழிவற்ற பிரஹ்மம் ஆகாய முதலிய இவ்வுலகை யுண்டாக்கிற்றே அவ்வகாராத்மகப் பிரஹ்மமே தன்னை லாக்கிய வுலகிற் பிரவேசித்தது. அதனால் அப்பரமான்மாவே ஜீவனென் னும் பெயரை யடைந்தது என்று "அதுவேயாக்கியனுப் பிரவே சித்தது" என்பது முதலிய சுருதிகள் கூறுகின்ற தென்பது (64) பொருள்.

(அ-கை)—இங்ஙனஞ் சுருதிப் பிரமாணத்தால் ஜீவன் அவி கிருத பிரஹ்ம வடிவனேல் பிரகிருதத் (ஆரம்பித்த)தில் யாதுண் டாய தென்னும் வேட்கைக்கு ஜீவனே பரமாத்துமா வென்னும் இவ்வேதுவால் வேற்றுமை ஞான முண்டாகின்றதில்லை என்பது வந்தென்று கூறுகின்றார்.

உரைதரு மதனி னேனை யுடலுறையுயிர் தனக்குப்
பிரமகா ரியம தென்னைப் பிறிவுறு மதியதின்றும்

(ப-னை)—உரைதருமதனி னேனை-பரமான்மாவே ஜீவவடி வாகப் பிரவேசித்தனென்னு மவ்வேதுவானே, உடலுறை யுயிர் தனக்கு - சரீரத்துற்ற ஜீவனுக்கு, பிரம காரியமதென்ன - பிரஹ் மத்தின் காரியமா யிருத்தலினல், பிறிவுறுமதியதின்றும் - பிரஹ் மத்தினும் வேறு என்ற புத்தியுண்டாகின்ற தின்று.

(ப-ம்)—பரமான்மாவான பிரஹ்மத்தின் காரியம் ஜீவனென் னும் புத்தியால் ஜீவன் பிரஹ்மத்தினும் அன்னியன் என்னும் ஞான முண்டாகிறதில்லை. ஜீவன் பிரஹ்மத்தின் காரியமின்றுதலி னல் என்பது பொருள். (64½)

(அ-கை)—அதனை னெனக்கு வாய்த்த பொருள் யாதெனின் னென்றனைச் செய்யுளாற் கூறுகின்றார்.

புணரயறு மெதனி னுனே காரியம் பொருந்தாதாய்
விரிவுறும்வி பின்ன புந்தி விகற்பமா யடைந்திடாதோ.

கப்பிலத னுலீண்டிவ் வுயிர்தனக்குத் தத்வமசி முதலி னோடு, மப்பரம வான்மபத மதனேடும் வேற்றுமைய தபின மாகச், செப்பவுறும் பொய்ம்மையெனும் புந்தியது சிறிதே னுந் சென்றுறாதா, மூப்புதக மெனவுலகி னுணரதருமவ். வுணரகளினி னுணரலாமே. (66)

(ப-னா)—புரையறும் - குற்றமின்றிய, எதனினுன் - எவ் வேதுவால், காரியம் பொருந்தாதாய் - காரியத்தன்மையை யடையாததாய், விரிவுறும்'- அநேகமாய் விரிந்த, விகற்பமாய் - வேற்றுமையோடுங் கூடியதாய், விபின்னபுந்தி யடைந்திடா தோ - ஜீவன் பிரஹ்மத்தினும் வேறு என்ற புத்தியை யடை யாதோ, தப்பிலதனுல் - குற்றமின்றிய அவ்வேதுவான், தண்டு தத்துவமசி முதலினோடும் - இங்கே தத்துவமசி முதலிய மகா வாக்கியங்களில், இவ்வுயிர் தனக்கு - இச்சீவனுக்கு, அப்பரமவா ன்ம பத மதனேடும் - அப்பரமான்ம பதத்தினோடு, வேற்றுமை யது-வேற்றுமையை, அடினமாக - சமானமாக, செப்ப-கூறுதலி னால், உறும் - உண்டாகாகின்ற, பொய்ம்மை யெனும் புந்தியது- மித்தை என்னும் புத்தியானது, சிறிதேனுஞ் சென்றுறாதாம் - அற்பமேனும் பொருந்தாதாம், உலகினில் - உலகத்தில், உப்பு உதகம் என - லவணம் ஜலம் என்று, உரைதரு மவ்வுரைகளில் - கூறுகின்ற அவ்வாக்கியங்களில், உணரலாம் - சமான வேற்றுமை யோடுங் கூடின காரியத்திற்குள்ள மித்தையாத்தன்மையை.

(ப-ம்)—எதனற் காரியத்தான் வேறு என்னு ஞான மின் மையின் அதனற் றத்துவமசியாதி வாக்கியங்களாற் சமான வேற் றுமையாற் செய்ய்ப்பட்ட மித்தையா புத்தி ஜீவனிடத்தின்று. அதாவது பிரஹ்ம சமானதி காண்யனேனும் ஜீவன் மித்தை யன்று, எங்ஙனம் லவண ஜலங்கட்குக் காரிய காரண பாவத்தால் நீரின் காரிய வுப்பிற்கு மித்தையா ஞான மூண்டாமோ அங்ஙனம்

ஜீவப் பிரஹ்மங்கட்குச் காரிய காரண பாவ மின்மையின் ஜீவ னுக்கு மித்தையாத்தன்மை இன்றென்பது பொருள். (66)

(அ-கை)—ஜீவன் பிரஹ்ம சமானநி காண்யனெனும் மித் தை யன்றெனச் சாதிக்க அவனுக்குக் காரியமாகிய விகாரத் தன்மை நிராகரிக்கப்பட்டது. அதனைனேயே சர்வப் பிரகாரத் தானும் நிராகரிக்கப்பட்டதெனச் சித்தாந்தி கூறுகின்றார்.

பரசிவ காரி யத்வம் பாரிலிவ் வுயிர்த்த னக்குத்
திரமுறத் தவிரு மாறு செய்திடப் பட்ட தெந்தா
னுரைதரு மத்தா லிந்த வுடனுறை யுயிர்க்கென் றோன்றும்
பரசிவ வுருவ பேதங் கிஞ்சிலும் பற்றி டாதே. (67)

(ப-கை)—எத்தால் - எவ்வேதுவான், பாரில் - உலகின்கண், உயிர் தனக்கு - ஜீவனுக்கு, பரசிவகாரியத்வம் - பரமான்மாவின் காரியத்தன்மை, திரமுற - திடமாக, தவிருமாறு - நீங்கும்படி, செய்திடப்பட்டது - செய்யப்பட்டதோ, உரை தருமதத்தால் - கூறப்படு மவ்வேதுவான், எஞ்ஞான்றும் - எப்போதும், இந்த உடனுறை உயிர்க்கு - இச்சரீரத்திற்ற ஜீவனுக்கு, பரசிவ வுருவ பேதம் - பரமேசுவர சொரூபத்தின் பேதம், கிஞ்சிலும் - அற்ப மேனும், பற்றிடாது - பொருந்தாது.

(ப.மீ)—எதனை விச்ஜீவனுக்குப் பிரஹ்ம விகாரத்தன்மை நிராகரிக்கப்பட்டதோ அதனைவிச்சரீரதாரியான ஜீவ பதார்த்தத் திற்குப் பரமேசுவர சொரூபத்தினும் வேறு விலக்கணமுடைமை யற்படுமின்று. ஜீவன் அவிகிருத பிரஹ்ம சொரூபனெனக் கேட் கப்படுதலின் என்பது பொருள். (67)

(அ-கை)—"எப்பொழுதிவன் இதிற் சிறிது பேதத்தைச் செய்கின்றானே அவனுக்குப் பயமுண்டாகின்றது. என்ன காரண வற்படுமின்று" எனப் பேதத் சிதமுடிக்கப்பட்டமையின் ஜீவ பரங்களுக் கற்பபேதமு மின்றென்பதைக் கேட்டு பூர்வ பகுதி கேட்கின்றான்.

சிவன் றனக்குஞ் சிவற் கனைக்கு மணுமாத் திரமுந்
திகழ் தம்பான், மேவுஞ் சிறப்ப திலதாகி மினிரு மாயினஞ்
ஞான்றிங், காணை யதுநீ யெனல்போல விவனின்னெனவே
யறைதலுறும், தேவமறையின் றிருமொழிகளென்னே
திரட்டப் புகன்றனவே. (68)

(ப-ரை)—சிவன்றனக்கும், சிவற் கனைக்கும், தம்பால் திகழ்-
தம்மிடத்து விளங்கும், மேவும் - பொருந்திய, சிறப்பு - விசே-
ஷணம், அணுமாத்திரமும் - அணுவளவேனும், இலது - இன்று,
ஆகிலினிருமாயின் - இங்ஙனஞ் சிவசீவர்கள் வேற்றுமையின்றி
ஒளிர்வராயின், அஞ்ஞான்று - அக்கால், இங்கு ஆவையது நீ
யெனல் போல - இங்கு நீ யதுவா யிருக்கின்றாய் என்று கூறுவது
போன்று, இவனின் னெனவே அறைதலுறும் - இவ்வான்மாவே
நீ யென்று கூறுவதாயுள்ள, தேவமறையின்றிரு மொழிகள் -
தெய்வத்தன்மையுடைய வேதாந்த மகா வாக்கியங்கள், என்னே
திரட்டப் புகன்றன - எதனை யியற்றக் கூறுகின்றன?.

(ப-மீ)—ஜீவ பரங்களுக்கு அணு மாத்திரமும் பேத காரண
மான சுவகத பிரிவினம் எக்காலின்றே அக்கால் "தத்துவமசி"
என்ற வசனமும் "இது வுனக்கு ஆன்மா அந்தர்யாமி அமிர்தம்"
என்ற வசனமும் உனக்கு யாது கூறுகின்றன கூறுவவாயாக. ஜீவ
பரங்களுக்கற்ப பேதமு மிலதாங்கால் முன்பே வபேதமுடையன
வாகும் அதனை உபதேச மனர்த்த முடையதாகும் என்பது பூர்வ
பக்ஷியின் கருத்து. (69)

(அ-மை)—சித்தாந்தி இக்கேள்வியைப் பரிகரிக்கின்றார்.

உயிரொடு பரற்குத் தம்மி லுள்ளதாம் பேதமான
தியாதனை வளவு மீதனை மிட்டம தாகுமாயி
னுயிரொடு பரற்குப் பேத மொழிக்குமுட் கருத்து மேய
வயிர்மொழி யனைகளாலே யொழித்திடற் கொண்ணுதன்றே.

(ப-ரை)—உயிரொடு பரற்கு - ஜீவசுவரர்களுக்கு, தம்மி
லுள்ளதாம் - தம்மிடத்துள்ளதான, பேதமானது, அயர்-சிறிய,

அணுவளவேதனும் - அணுவளவாயினும், இட்டமதாகுமாயின் - விரும்பப்படுமாயின், உயிரொடு பாற்கு - ஜீவசுவர்களுக்கு பேத மொழிக்கும் - உள்ள பேதத்தை அழிக்கும், உட்குருத்து மேய - ஆத்மாதாற்பரியமுடைய, உயர்மொழி யணவகளாலே - உன்னதமான அவ்வேதாந்த வாக்கியங்களால், ஒழித்திடற் கொ ன்னுதன்றே - அப்பேதம் நீக்க முடியதாகும்.

(ப-ம்)—ஜீவேசுவர்களுக்குப் பேத காரணம் பரமார்த்த மாக வணுவளவேனு மிஷ்டமாயின் அதனைப் பரமான்மாவோடு ஜீவனுக்கு வேற்றுமையை அழிக்கும் கருத்துடைய தத்துவமசி மூதலிய வாக்கியங்களினால் நிராகரிக்க வொண்ணுதென்பது பொருள். (69)

(அ-ஈ)—ஜீவ பரங்களுக்குப் பேத முண்மையாமெல் அது வாக்கியத்தாற் றன்னொவ்வு தெனப்பட்டது. இனிப் பரமார்த்த பேத நிராகரணு சம்பவஞ் சாதிக்கின்றார்.

எதனை தெக்குணைந் தன்னிடத் திவண்டான் றுலுறுமற்
றதனி றுலுள தன்றெரு பொழுதுமங் கதன்றன்
னுதிநிராகர ணைஞ்செய னுரையிறு விலதா
மெதனினுலங்தக் குணைஞ்சக சமமாடிருந் திடுமோ. (70)

(ப-னை)—எதனது - எக்குணியின், எக்குணம் - யாதொரு குணமானது, இவண் - ஈண்டு, தன்னிடத்து - குணியில், தன்று லுறும் - தானே சுதந்திரமா யுண்டாயிற்றே, ஒருபொழுதும் - ஒருக்காலும், மற்றதனிறு லுளதன்று - வேறொன்று லுண்டான தன்றே, அங்கு - ஆண்டு, அதன் றன்னுதி நிராகரணைஞ் செயல் - நிகழும் அக்குணத்தின் றன்மையைக் கெடுத்தல், உரையிறு விலகாம் - வாக்கியத்தால் இன்றும், எதனினுல் - எவ்வளவின், அக் குணம், சகசமமா டிருந்திடும் - உடன்பிறந்தகா யிருக்கின்றது.

(ப-ம்)—வியவகார காலத்தில் எப்பொருட்கு எக்குண மிபல்பாகத் தன்னிடமுளதோ ஒருபோதும் அன்னியத்தா லுண்

டானதன்றே அச்சுவாபாவிக குணம் வசனத்திலுல் நீக்கமுடி யாது. எனெனின் அப்பேத குணம் உபாதியானுண்டாகாமல் உடன் பிறந்தாகின்றதோ அதலுல் வாக்கியத்தால் நிராகரிக்க ஒண்ணுதென்பது பொருள். (70)

(அ-கை)—ஆகேஷபம், வாக்கியங் காரணமாதலிலுல் குணம் உடன் பிறந்தேதனும் அவ்வாக்கியங்களால் என் நீக்கப்படமாட் டாதெனில் ஈண்டுக் கூறுகின்றார்.

எதலுல் வசன மானவது மவதோ காகமாதோயகு
மதலு மேயே வத்துவிசே யயலா யாற்ற லணுகாதாங் [தால்
திநிகா சமதாந் தோடபய மதலுற் நிகழ்வத் தொவிவசத்
விதமார் சகச குணமதசே வீடலிலதென் பதுதிடமே. (71)

(ப-ரை)—எதலுல்-எக்காரணத்தால், வசனமானவது-வாக் கியமானது, அவதோதக மாயையாகும் - உள்ள பொருளையே நன்றாக வறிவிக்கக் காரணமாமோ, அதலுலேயே - அவ்வேதுவா னேயே, வத்துவிசே - ஓர் பொருளை, அயலாய் ஆற்றல் - மற் றோர் பொருளாகச் செய்ய, அணுகாதாம் - வாக்கியம் சக்தி யுடையதன்று, (அ-கை)—[சத்த சாமர்த்தியத்தால் வஸ்துவே இயல்பான குணத்தை நீக்கி விடுகவெனிற் கூடாதெனக் கூறு கின்றார்.] நிகழ்வத்து - விளங்கும் பொருள், ஓலி வசத்தால் - சத்த சாமர்த்தியத்தால், திநிகாச மதாந்தோட பயமதலுல்-தனது இருப்பு நாசமாகுமென்னுந் தோஷத்தா லுண்டாம் பயத்தால், விதமார் சகசகுணமதசே - உடன்பிறந்த பேதகுணத்தை, வீடல் இலது என்பது நிடம் - விடமாட்டாதென்பது சத்தியம்.

(ப-ம்)—அக்ஞாதார்த்தத்தை அறிவிப்பதாற் பிரமாண வடிவ தத்துவமாகிய வாக்கியம்; பிரமாணங்கள் விளக்குஞ் சுபாவமாதலின் அறிவிப்பதேயாம் ஆகலின் ஜீவேசுவரர்களின் வத்தன்மையைப் போதிப்பதன்றி யியற்றுங் காரணமாயின்று. எனெனின் வஸ்து சுருதி சாமர்த்தியத்தால் இயல்பாகப் பெறப் பட்ட குணபேதத்தை அனவஸ்தா தோஷ பயத்தால் விடுகிற தில்லை. உடன் றோன்றியது கெடுமேற் றனக்குங் கேடுண்டாம்.

"இரவியின் சூடுபோன்று பொருள்களி னியல்பு போக்கொணா தாம். ஆகாயப் பூப்போன்றுகு மியல்பி னீங்கிய பொருள்" என்று சுரேசுராசூரியர்களாலு மங்ஙனங் கூறப்பட்டது. பேதஞ் சகசமாயின் நீங்காதெனப் பொருள். (71)

(அ-கை)—பேத மூபாதியா லாக்கப்படுன் அதன் நீக்கம் வாக்கியத்தாலா மெனக் காட்டுகின்றார்.

எதனை விவண மதனுலே யெழிலார் விடைய குணம்விடைய
மதனே டான்மா வதுதனிலே யறிவி லாதானவகுலை
யதிரோ பிதமா மப்புவின்கட் பூவின் குணமா மதுபோன்றே
யதுநீ யாவா யெனுமொழிதானதனை யழிக்கு மெனவறிநீ.

(ப-ரை)—எதனை விவண மதனுலே - எதனால் பேதஞ் சகசமாயின் வாக்கியத்தாற் றள்ளமுடியாதோ வதனால், அறிவிலாதானவகுலை - விவேக ஞானமின்றியவகுலை, ஆன்மாவதுதனில்-தன்னிடத்தில், எழிலார் - அழகிய, விடையமதனே டு - விஷத்தோடு, விடைய குணம் - விஷயத்தின் குணமானது, அதிரோபிதமாம் - ஆரோபிக்கப்பட் டுள்ளது, அதனை - அவ்வாரோபித குணத்தை, அது நீயாவாய் எனுமொழிதான் - நீ யதுவா யிருக்கின்றாய் என் னுந் தத்துவமசி வாக்கியம், அழிக்குமென வறிந - நாசமாக்கு மென நீ அறிவாயாக, (எங்ஙனமெனின்) அப்புவின்கட் பூவின் குணமாமதுபோன்று - மூடபுத்தியனால் தண்ணீரி லாரோபிக்கப் பட்ட பூமியின் குணத்தை இது தண்ணீரின் குணமன்றென்னும் வாக்கியம் நீக்குவதைப் போன்று.

(ப-மை)—சக பேதம் வாக்கியத்தால் நீக்கப்படாதென்பது எதனாலா அதனால் அவிவேகியால் தன்னிடத்தில்விஷயகுணம் விஷயத்தோடுங்கூட ஆரோபிக்கப்பட்ட பேத குணத்தைத் தத் துவமசி யென்னும் வாக்கியந் திரஸ்கரிக்கின்றது. அபேதவா றெனின் பிருதிவியே கந்தமூலையதாதுவின் தண்ணீரி லாரோ பிக்கப்பட்ட கந்த குணத்தை வாக்கியம் நீக்குவதைப் போன்று. "அகம் பிரமாஸ்மி. ஸ்தூலமற்றது. அணுவற்றது. குறிலற் றது. சத்தமற்றது. பரிசமற்றது" என்னுமிவை முதலிய வாக்கி

யங்களும் அவிவேகத்தா லாரோபிக்கப்பட்டவலென்ம தர்மத் தைச் சிதறடிப்பனவாய் அகண்டை கரசவஸ்து பரத்துவ மூடை யனவேயாம் எனப் பொருள். (72)

(அ-னை)—இங்ஙனம் வாக்கியத்திற்கு வஸ்து பரத்தன்மை சித்திக்கவின் உபாசனை பரத்தன்மை யின்மையைச் சித்திக்கு தெனக் கூறுகின்றார்.

அதலை லேயே யல்வசனந் திருட்டி விதியின் பரமன்றுந் துனைதமா குணைத்தின் வாதபர மன்று துதிவாத முமலவா மிதுதா னீன்று சீதகழுறை யியமான னுக்கு பாசியெ வெதலைல் விதிய நியம்பவிலை யதலை லெனவே யறிவாயால்.

(ப-னை)—அதலைலேயே - அகண்டவஸ்து பரத்தன்மையி னேனை, அவ்வசனம் - அத்தத்துவமசி வாக்கியம், திருட்டி விதி யின் பரமன்றும் - உபாசனவிதி பரமானதன்று, எதலைல், இது தான் - இத்தத்துவமசி வாக்கியம், உபாசியெ - நீ உபாசிப்பா யாகவென்று, சீன்று - இங்கே, சீதகழுறை யியமானனுக்கு - சீதசதானியான ஜீவனுக்கு, விதியநியம்பவிலை - விதி பதத்தைக் கூறவில்லை, அதலைல், துனைதமா குனைத்தின் வாதபரமன்ற-நெரு ங்கிய குணவாத பரமன்று, துதிவாதமு மலவாம் - துதிவாத பரமன்றும், எனவே யறிவாயால் - என்று அறிகுதி.

(ப-ம்)—வாக்கியம் அகண்ட வஸ்து பரத்தன்மையதாதவின் உபாசனவிதி பரமன்று. எனனின் இத்தத்துவமசி வாக்கியத் தில் ஜீவன் பிரம்மமென வுபாசிக்க வேண்டியதாகக் ககர மூத லிய விதி படுகின்று. அதலைனையே உபாசனை பரமும் குண வாத பரமும் நீ இந்நிரனை யிருக்கின்றாய் விஷ்ணுவா யிருக்கின் றாய் என்று துதிவாத பரமுமன்று. முக்கியார்த்தஞ் சித்திக்க வின் கெனவர்த்த கற்பனை பொருத்தமன்றென்ப தபிப்பி ராயம். (73)

(அ-னை)—இங்ஙன மாகுங்கால் விபரீத போதகத் தன்மையு மின்றெனைக் கூறுகின்றார்.

உலகின் காரண மாகிய வுண்மையே வுபாதியின் வசத் தாலே, யிலகுஞ் சிவனென் றொருபெய ரினைசந்திட லாயிடு மிகலுஸீண், டுலகின் காரண மெனவுரை சத்திநுக் குயிரின துருப்பான்மை, திலக மாமறை யியம்பிட விலையெனத் தெரிந்துளந் தெளிவாயே. (74)

(ப-ரை)—உலக காரணமாகிய உண்மையே - ஜகத்காரணப் பிரஹ்மமே, உபாதியின் வசத்தால் - சரீரோபாதி வசத்தால், இலகுஞ் சிவனென்றொரு பெயரினைசந்திட லாயிடும் - விளங்கு கின்ற சிவனென்னு மோர் பெயரைப் பொருந்தும், எண்டு இத னால் - இவ்விடத் திங்ஙன மிருத்தலின், உலகின் காரண மெனவுரை சத்திநுக்கு - உலக காரணப் பிரஹ்மத்திற்கு, உயிரின துருப்பான்மை - ஜீவவடிவமாதலை, திலகமாமறை - உத்திருஷ்ட வேதமானது, இயம்பிட விலையென - பிரதி பாதிக்கவின்மை, தெரிந்துளந் தெளிவாய் - அறிந்து தெளிந்தவுளமுடையவருக்கு.

(ப-ம்)—உலக காரண பரமான்மா விரண்டு சரீரோபாதி வயத்தாற் சிவனென்னும் பெயர் பெறும் என்பதைத்தரு வதனாலே "காண்டற் கினியனே! இதனு முன் சத்தாகவே யிருந் தது" என வுலக காரணமா யாரம்பித்த பிரஹ்மம் ஜீவசொரூப மடைந்திலது. மற்று யாதனு கூறுகின்றதெனின் ஜீவனென்னும் பெயரை யடைந்த பிரஹ்மத்தின் இயல்பான பிரஹ்மத் தன்மை யைப் போதிக்கின்றதென்பது பொருள். (74)

(அ-கை)—இனிக் கூறப்படு மேதுவாலும் வாக்கியத்திற்கு விபரீத போதகத் தன்மை யின்மெனக் கூறுகின்றார்.

அணிமாதி குணமுடைய வகிலகா ரணமான வதற்குச் சிவ, னணிலுபத் தன்மையினை யருவமாதியி னறிவித்தே யணுகு மாயி, னணிமாதி குணமறுவ தகுமெனிற் கிவற்கு மிக்கை யதுவே யாகு, முணர்வாயல் லது சிவனுருப் பான்மை யிவற்குமிக்க யுளதா மென்றே. (75)

(ப-ரை)—அணிமாதிகுணமுடைய - சூக்குமத்தனவாதிகுண முடையதான, அகில காரணமானவதற்கு - உலக காரணமான

பிரஹ்மத்திற்கு, அணி - அழகிய, சிவரூபத்தன்மையினை - சிவ வடிவத்தன்மையினை, அருமொழியும் - அரிய தத்துவமசிவாக்கி யமும், அறிவித்தே யணுகுமாயின் - தெரிவித்தே பொருத்தி இருக்குமாயின், அதலால் - அவ்வேதவான், இங்கு - எண்டு (தத் துவமசியாதி வாக்கியங்களால்,) அணிமாதி குணமறைவது - ஐக் குமத்துவாதி குணமுடையதாகக் கூறுவது, மித்தையதுவேயா கும் - பொய்யாகும், உணர்வாய் - எனத்தெரிந்து கொள்ளுவா யாக, அல்லது - சூக்குமத்துவாதி குணமுடைமை சத்திய மெனின், இவற்கு - இப்பரமான்மாவிற்கு, சீவனுருப்பான்மை சிவசொரூபமாயிருக்குந்தன்மை, மித்தையுளதா மென்று - பொய் யாயிருக்கின்றதினை, உணர்வாய் - தெரிந்து கொள்ளுதி.

(ப-ம்)—சூக்குமத்துவாதிகுண முடைய பிரஹ்மம் அவயவ வாயதென வாக்கியம் போதிக்கும் மேல் "அது இது சூக்கும மானது இவையெல்லாமிதன் வடிவம் அது சத்தியம் அது ஆன் மா" எனப் பின்னுள்ள வினை முதலிய வாக்கியங்கள் பிரஹ்மம் அணிமாதிகுண முடையதாகக் கூறுதல் பொய்யாகும். அல்ல தணிமாதிகுண முடைமை புகலப்பட்டதனின் அக்காலிப் பிர ஹ்மம் ஜீவ வடிவுடையதா யிற்றென்பது பொய்யாகும். ஆ கின் பிரகிருதப் பிரஹ்மம் ஜீவத்துவமுடையதாயிற்றெனப் பிரதி பாதிப்பதன்று. (75)

(அ-எ)—இதனையும் விபரீத போதக மின்றெனக் கூறு கின்றார்.

தேசத்தினைச் சீவனெ தென்றறையு
நீசத்தது வென்னுமிந் நேர்மொழியா
லாசிற்றுயிர்க் கிட்டமு தாங்குடும்ப
பாசத்தை யுறுத்திடல் பண்ணிலதே. (76)

(ப-ஏ)—தேசு அத்தனை - சுயம்பிரகாச பரமான்மாவை, சீவனது என்றறையும் - சீவ வடிவத்தை யடைந்தெனக் கூறும், நீ அது சத்து என்னும் - நீ அதுவாயிருக்கின்ற யென்னும், இந்நேர்மொழியால் - இந்த நேர்மையான மகா வாக்கியத்தால்,

ஆ - ஆச்சரியம், சிற்றுயிர்க்கு - சீவனுக்கு, இட்டமதாம் - பிரிய மானை, குடும்ப பாசத்தை யறுத்திடல்-சம்சாரக் கட்டைச்சேதித் தல், பண்ணிலது - செய்யவில்லை.

(ப-ம்)—பரமசுவாதீனச் சீவலுகச் சொல்லு மித்தத்துவ மகிவாக்கியம் இச்சீவன் விரும்புவதான சம்சாரகாரணவஞ்ஞான காசத்தைச் செய்ததாகாது. அதனல் வாக்கியம் விபரீதத் தைப் போதிக்காதெனப் பொருள். (76)

(அ-கை)—அல்லது வாக்கியத்திலுள்ள பத சம்பந்த பரிபா லோசனை யாலும் விபரீத போதக மின்றெனக் கூறுகின்றார்.

நீயாயுள்ளா யெனும்பதங்களிரண்டு சேர்ந்தபினமது வென், மாயா மொழியி னைதமருவி யதுநீயெனவே மலர்ந்திடுமாம், தூயோய் பெயர்ச்சொ லொழிவிலிணைந் தொடர்ச்சி யதனைத் தொடர்ந்திலகுஞ், சாயா விதனைச் சார்ந்தியுறும்பொழுது யோகஞ் சார்ந்திடுமே. (77)

(ப-னை)—நீயாயுள்ளாயெனும் பதங்களிரண்டு சேர்ந்தபினம் நீ இருக்கின்ற யென்னு மிரண்டு பதங்களுக்குச் சேர்ந்த பின்னர், அது என் மாயா மொழியினைத மருவி - அது என்ற தத்பதத் தோடு சம்பந்த முற்று, அது நீ யெனவே மலர்ந்திடுமாம் - அது யென விளங்கும், தூயேய் - நீ பரிசுத்தனே! (இது என்னியம மெனின்,) பெயர்ச்சொல் - ஓர் பெயர்ச் சொல்லானது, தொழி விலிணைந் தொடர்ச்சியதனைத் தொடர்ந்து - ஓர் வினைச்சொல் லோடு முதலில் சம்பந்தமடைந்து, இலகும் - விளங்கும், சாயா விதனல்-கெடாத வினையோடு கூடுதலான விக் நியமத்தால், சார்ந் தியுறும் பொழுது-அபேதையின்றி பதாருத்தால், யோகம் சார்ந் திடும் - அது நீயாயிருக்கின்ற யெனப்பொருந்தும்.

(ப-ம்)—முன்னர் நீ இருக்கின்ற யென விரண்டு பதங்களும் பரஸ்பரந் சேர்க்கையை யடைகின்றன. பின்னரை தத்பத லக்ஷியவஸ்து நீயாயிருக்கின்ற யென அது யென்னுஞ் சத்தத் தோடு சேருகின்றன. எனினின் பெயர்ச் சொல்வினைச் சொல்லோடேயே சேருகின்றது. இஃது மென்மியித்து மெனி

ன் இருக்கின்ரு யென்பது மூதலிய கிளையெல் நிரபேக்ஷயா கின்றமையின். "ஆகாங்க்ஷா வாக்கிய மனர்த்தகமாகும்" என்னு நியாயத்தால் கிரியாபத யிருக்கின் வாக்கியம் நிரபேக்ஷ யாகின்ற தென்பது பொருள். (77)

(அ-கை)—கிரியா பதத்தோடுங் கூடிய வாக்கியம் பெயர்ப் பதங்களை அவாவாதனைச் சாதிக்கின்ரூர்.

இயங்கா நின்ற பெயர்தசுநூ றெனினுங் தொழில் திலதாகி, னையங்கான் றிருஞ்சிற் சிறிதேதனு நவிலு மாற்ற லிலதாகும், வியங்கோ ளாதி யிவைகளினில் விளம்ப வுரித்தாம் விதியாதி, மயங்கா ஞான சனகமிது வெதனு லெனவே மதித்திடுநீ. (78)

(ப-னா)—இயங்கா நின்ற பெயர் - விளங்குகின்ற பெயர்ச் சொல், தசநூறெனினும் - ஆயிரமேனும், தொழில் அது இல தாகில் - வினைச்சொல்லோடுங் கூடாததாலல், நயங் கான்றிருஞ் சிற்சிறிதேதனும் - நன்மை பயப்பதாயவற்பப் பொருளையேனும், நவிலு மாற்றலிலதாகும் - கூறுஞ் சாமர்த்திய மூடையதாகாது, எதனல், விதியாதி - விதி ஆசீர்வாத மூதலியன, மயங்கா ஞான சனகம் - உண்மை ஞானகாரணம், இது, (அதனல்), வியங்கோ ளாதி யிவைகளில் - வியங்கோள் விகுதி மூதலியவைகளிலல், விளம்ப வுரித்தாம் - பொருளைக் கூறச்சமர்த்தமாம், எனவே, நீ மதித்திடு-நிச்சயஞ் செய்வாய்.

(ப-ம்)—வாக்கியம் வினைச்சொல்லோடு கூடாதாயின் அக் கால் பெயர்ப்பத மனேகமேனும் சிறிது பொருளையேனு நவச் சமர்த்துடைத்தன்று. மற்று நவலுஞ் சமர்த்துடைத்து யாதெ னின் வாக்கியத்துள்ள பதங்களினிடையில் ஆசீர்வாதம் எவல் என்பனவற்றை யுணர்த்தும் விகுதி அல்லது இருக்கின்ரூய் இருக்கின்றேன் என்பது மூதலிய வினைப்பதம் யாதானுமோர் பொருளைக் கூறுவதாம். எனினின் அவ்விகுதியாதியே விதி நிஷேதப் பொருளின் ஞானத்தை யுண்டுபண்ணுவதாம். ஆகை யால் வாக்கியத்துள்ள பதங்களின் சம்பந்தக் கிரமவாராய்ச்சியால் விபரீத போதகமின்றெனப் பொருள். (78)

(அ-கை)—முன்னர் நீ இருக்கின்றாய் என்றிரண்டு பதங்களும் பரஸ்பரஞ் சேர்க்கையை யடைகின்றனவென்ற விவ்வர்த்தத்தை பாணினீய சூத்திர வுபமானத்தாற் றிடப்படுத்துகின்றார்.

நீயெனு மதனி லேயே முன்னிலை நியம மாகத்
தாயவின் முனியுஞ் சாரச் சூத்திரத் தருளி னானிற்
காயநல் லதனி னுணீ யகிலெனும் பதங்கண் முன்னை
மேயபின் னகிபி னேறு மதுவென னன்மி சிர மாமே. (79)

(ப-னை)—தாயவின் முனியும் — சால்வக்ராஷபாணினி மகரிஷியும், நீ யெனு மதனிலேயே - நீ என்னுஞ் சப்தத்தோடே யே, முன்னிலை - இருக்கின்றாயென்பது முதலிய முன்னிலை விஷயச்சொல்லானது, நியமமாக - எப்போதும், சார - சேர வேண்டுமென, சூத்திரத்தருளினன் - வியாகரண சூத்திரத்திற் கூறியிருக்கின்றார், இங்கு ஆய நல்லதனினுல் - என்று அங்ஙன மகரிஷியாற் கூறப்பட்டிருத்தலின், நீ அகி என்னும் பதங்கள் முன்னம் எய - நீ இருக்கின்றாய் என்னுமிரண்டு பதங்களும் பரஸ்பரஞ் சேர்க்கையை முன்னடைந்து, பின்-பின்னர், அகியிறு-இருக்கின்றாயென்னும் பதத்தோடு - அது வென்ன மிசிரமாம், அது என்னும் பதம் சேர்க்கையுறும்.

(ப-ம்)—பாணினி பகவானும் முதலில் இருக்கின்றாய் ஆகின்றாய் என்பன முதலிய விரண்டுபதங்களை "உன்னரில் உப பதஞ் சமானாதி காணத்தில் ஸ்தானியிலும் மத்தியமம்" என்னுஞ் சூத்திரத்தால் நியமமாக நீ யென்னும் பெயர்ப்பதத்திலேயே சேர்ப்பிக்கின்றார். ஆகவின் முன்னர் நீ இருக்கின்றாயென விரண்டு பதங்களுஞ் சேர்க்கையுற்றுப் பின்னர் இருக்கின்றாயெனும் பதத்தோடு அது வெனும்பதஞ் சேருகின்றதுவரை யெடுப்பாருள்.

(அ-கை)—நீ இருக்கின்றாயென்றிரண்டு பதங்களின் சம்பந்தத்தின் பின்னரே அதுவாயிருக்கின்றாயென விரண்டு பதங்களின் சம்பந்தம் என்ற விதற்கு யுக்தியைக் கூறுகின்றார்.

தனயன் குருவா லெஞ்ஞான்று சாற்றப் படுவனீயாவா,
யெனவிங் கென்ற வேனருளா வியம்பா யென்ன வஞ்
ஞான்றே, வினவ வேட்கை தணியுறுவன் விளம்பு மணிமா
தியகுணமார், கனவுண் மையதே யாவாயென் றருளுங்
கருணைக் கடலுனே. (80)

(ப-ரை)---எஞ்ஞான்று - எக்காலத்து, குருவால், தனயன் - சீடன், நீ ஆவாய்-நீ இருக்கின்றாய், எனச் சாற்றப்படுவன்-என்று கூறப்படுகிறாயே, அஞ்ஞான்று - அக்காலத்து, இங்கு - இச்சம் சாரத்தில், என்னவேன் - எதாகவிருக்கின்றேன், அருளால் - கிருபையால், இயம்பாயென்ன - தேவரீர் திருவாய் மலர்ந்தருள் வீராகவென, வினவவேட்கைதணியுறுவன்-கேட்கும் பிரியமுடை யவனுவன், (அவனுக்கு) கருணைக்கடல் - கிருபைக்கடலான குரு மூர்த்தியானவர், விளம்பும் - சுருதியிற் பிரதிபாதியாகின்ற, அணிமாதிய குணமார்-சூக்கூமத்துவ முதலிய குணங்களுடைய தன உண்மையுடைய ஆவாய் - எகமாய் சத்தியமாயிருக்கும் பிரம்மமாகிய வஸ்துவேயாயிருக்கின்றாய், என்று அருளும் - என்று உபதேசித்தருளுவர்.

(ப-ம்)---குருவாம் நீடன் நீ இருக்கின்று யெனப் போதிக் கப்படுன் அக்கால் யான்யாதாயிருக்கின்றேறன் அதனை யருளல் வேண்டுமென எதிர்முகமாகின்றான். பின்னர் குருமூர்த்தி "இது முன் சத்தாகவே இருந்தது" எனத்துடங்கப்பட்ட அணிமாதி குணங்களையுடைய அந்தப் பிரம்மமாயிருக்கின்றாய் என்று உப தேசித்தருள்கின்றானென்பது பொருள் (80)

(அ-கை)---வாக்கியம் விபரித போதகஞ் செய்வதன்றென்ப தையு பசம்மாக்கின்றார்.

நீயெனுந் தானியி னுலே நிகழ்த்திடு மதற்கு மெத்தா
லேயது வென்னும் வேதவிருமம் பொருட் டன்மை தன்னை
யாயகன் மொழியும் போதிப்பித்திடு மதனி னுனை
நேயசத் தகற்குச் சிவத் தன்மையை நிகழ்த்தி டாதே. (81)

(ப-ரை)—ஆய நன்மொழி - நன்மை பயப்பதாய தத்துவ மசி வாக்கியம், எத்தால் - எவ்வேதுவால், நீ யெனுந் தெளனியி னுலே நிகழ்த்திடுமதற்கு - நீ யென்னுஞ் சத்த வாச்சியனென ஓவ னுக்கு, அதுவென்னும் - அதுவெனப் படுவதான, வேதவிரும் பொருள் தன்மை தன்னை - வேதப் பிரதிபாத்திய பெருமை வாய்ந்த பரமாத்மாவின் தன்மையை, போதிப்பித்திடும் - அறி வித்திடுமோ, அதனினுன் - அவ்வேதுவால், நேயசத்தகற்கு-விரு ம்பத்தக்க சத்தான பிரஹ்மத்திற்கு, சிவத்தன்மையை - சிவவடி வத்தை, நிகழ்த்திடாது - கூறமாட்டாது.

(ப-ம்)—எதனுல் தத்துவமசி வாக்கியம் நீ யென்னுஞ் சத் தப்பிரதி பாத்தியமான துவம்பத லக்கிய பிரத்தியகான் மானவப் பிரஹ்ம வடிவாகக் கூறுகின்றதோ அதனுல் சத்துரூபப்பிரஹ்மம் துவம்பத வாச்சிய வடிவமெனக் கூறவில்லை. ஆகையாற்றத் துவ மசிவாக்கியம் விபரீத போதகமும் மன்றென்பது பொருள் (81)

(அ-கை)—சிவனெப்போதும் விகார மற்ற பிரஹ்ம வடி வனை லுபதேசிக்காமலே தனது விகாரமற்ற பிரஹ்மவடிவத்தை என் அறிகின்றனின்றெனயாது பூர்வ பக்ஷியினுற் பூர்வங் கூறப் பட்டதோ அதைப் பரிகரிக்கின்றார்.

சிவன்றனது விந்தியங்க ளொந்த நான்றுஞ் சிறுவிடய
மேவியலையு மியல்டாயே யதனு லிவன்றன் மினிருருவ
மாவவறிவ தினைதனு லதுதீ யசியென் மொழியாலே
மேவவறிவித் திடப்படுமென் றுளத்தின் மினைசிய னொள்

[ந்தியால்.

(ப-னை)—எந்தநான்றும் - எப்போதும், இயல்பாய் - சுபா வமாக, சிவன்றனது விந்தியங்கள் - சிவனது போகசாதனமான கரணங்கள், சிறுவிடயம் மேவி - அற்ப விடயங்களைச் சுகசாதன மெனக்கருதிப்பற்றிக் கொண்டு, அலையும் - நாய் எலும்பு கொண் டலையுமாறு வழலும், அதனுல், இவன்றன் மினிருருவம் - இச் சிவனது சுயம் பிரகாச பிரஹ்ம வடிவத்தை, ஆவ - ஆச்சரியம், அறிவதிலன் - அறிகின்றிலன், அதனுல் - அறியாமையால், அது

நீ அசி என் மொழியாலே - அது நீ யாயிருக்கின்றாய் என்னுந் தத்துவமசி வாக்கியத்தால். மேவ - மனஞ் சம்மதிப்ப, அறிவித்திடப்படும் - அவனுக்குப் பிரஹ்மம் அறிவிக்கப்படுகின்றது, என்று, உனத்தின் மிசையே கொள்ளுதியால் - மனதில் நிச்சயிப்பாயாக-

(ப-ம்)—ஜீவனது விந்திரியங்களியல் பாகவே யெப்பொழுதும் விடயத்தை நோக்கிச் செல்கின்றன. அதனுலிச் சீவன்றனது வியல்பான பிரஹ்ம வடிவத்தை யறிகின்றிலன். ஆகையாற்றத் துவமசியாதி வாக்கியத்தாலு பசாந்த சித்த முடையானுக்குப் பிரஹ்மம் போதிக்கப்படுகின்ற தென்பது பொருள். (82)

(அ-கை)—மூக்குணுத் மகவிந்திரியங்கள் அனன் மாவை விஷயமாக்குகின்றமையின் ஜீவன் தனது பிரஹ்மத் தன்மையை யுபதேச மின்றி யறியமாட்டாவென யுக்திகூறி இனி விந்திரியங்கள் வெளிமுகமுடையன என்பன முதலிய சுருதி வாக்கியங்களும் ஈண்டுப் பிரமாண மெனக் கூறுகின்றார்.

வெளிமுக முதலவாக வெகுமறை வசனத்தோடு
மூளம்விட யமநி லுவாய்ப் நதியினி லுடற்றல் போல
வுளமது தன்று லுலந்து பொறியொளி யொடுக்கல் போன்ற
வுளவறு மிருதி யீநின் மானமென் றறி திகீயும். (82)

(ப-ஸ)—வெளிமுக முதலவாக-வெளிப் பார்வையையுடையனவாக வென்பது முதல், வெகு மறை வசனத்தோடும்-அதேக வேதவசனப் பிரமாணத்தோடும், நாவாய்-படகை, நதியினில்-ஆற்றில், உடற்றல் போல-காற்று நிழுத்துச் செல்லுவது போன்று, விடயமதில் உளம்-விடயத்தைக் கருதுகின்ற மனம், (என்றும்) உளமது தன்றல்-மனதால், ஐந்து பொறியொளி யொடுக்கல்-ஐந்திந்திரியங்களின் ஞானத்தை யடக்குதல், (என்றும்), போன்ற-(இவை) போன்ற, உளவறுமிருதி-அதேக ஸ்மிருதியும், ஈதின்-ஈதற்கு, மான மென்றறி திகீயும்-பிரமாண மென நீ அறிவாயாக:

(ப-ம்)—இப்பொருளில் "சுயம்பு இந்திரியங்களை வெளி முகமாகப் பீடித்தார் ஆகையால் வெளி நாட்டமுடையன ஆன் மாவை யன்று, என்பன முதலியவைதிக வாக்கியங்களும், "எங்ங னந் தண்ணீரிலுள்ள ஓடத்தைக் காற்று இங்கு மங்கு மலைக்கின் றதோ அங்ஙனம் விஷயங்களிற் செல்லுகின்ற விந்திரியங்களின் பின் வெளி விஷயங் குறித்தும் மனஞ் செல்லுகின்றதோ அது விந்த நிர்ப்பாக்கிய புருஷனது பிரக்ஞையை யழிக்கின்றது. ஆகையா லெவனது விந்திரியங்கள் வெளிவிஷயங்களினின்று மடக்கப்பட்டனவோ அந்தப் பரம விரக்தசன்னியாசிக்குக் குருவா லுபதேசிக்கப்பட்ட வித்தை நன்றாய் நிலைத்துப் பல முடையதா கின்றது." என்று பரம குரு பகவான் வாக்கியமான ஸ்மிருதியும் பிரமாணமாம் "மனதோடும் இந்திரிய சமூகத்தை சர்வோத்சாகத்தி னின்றுந் திருப்பித்தைரியமுடைய புத்தியினால் மெள்ள மெள்ள அடக்கவேண்டும்" என்னும் வாக்கியம் உளமுது தன்னாலந்து பொறியொளி யொடுக்கல் எனச் சுருதிப்பிக்கப்பட்டது, இந்திரி யங்கள் வெளி விஷய முடைமையானும் அறிதி அருஞானத் தால் மறைக்கப்பட்டமையானும் ஜீவனது பிரஹ்ம வடிவத்தன் மையின் உபதேச மின்றி அறியப் படுவதின் றென்பது பொ (83)
ருள்.

(அ-கை)—ஆகையம் ஜீவன் மூன்று காலமும் பிரஹ்ம வடிவ னேல் இக்கற்பனை யுண்டாகாது. ஆதலின் அஃதன்றெனவாசங் கித்து ஜீவனுக்குப் பிரஹ்மத் தன்மை எப்போது முண்டென் பதிற் சுருதியைப் பிரமாணிக்கின்றார்.

இம்மாத் திரத்திற் பேதமுளதினிய வுயிர்க்குப் பர மான்ம, சின்மாத் திரத்தி லெதுமெனவே செப்பாதிதனி யொழிந்திடுநீ, நன்மாத் திரத்தை யுபதேச நனிலாமுனம் பின்னனந்தலையுள், சன்மாத் திரத்தி னிவனையன் றெனவே சாற்றக் கேட்பதலால் (84)

(ப-னை)—இம்மாத்திரத்தில் - இவ்வளவு பிரமாண மாத் திரத்தால் - இனிய வுயிர்க்கு - இனிய ஜீவனுக்கு, பரமான்ம

சின்மாத்திரத்திறைடும் - சைதன்னியவடிவ பரமான்மாவோடு, பேதமுளது, எனவே - என்று, நீ இதனைச் செப்பாது ஒழிந்திடு - நீ இப்பேதத்தைக் கூறுது ஒழிவாயாக, சன்மாத்திரத்தை - பெருமையுடைய ஜீவபரங்களின் ஐக்கியத்தை - உபதேசம் கவிலு முனம் - உபதேசிப்பதற்கு முன்னும், பின் - பின்னரும், நனந்தலையும் - மத்தியிலும், இவன் - இச்சீவன், சன்மாத்திரத்தின் - சுத்தா மாத்திர பிரஹ்மத்திணும், அயலன்றனவே - அன்னிய னன்றனவே, சாற்றக் கேட்பதலால் - சுருதி கூறக் கேட்கப்படுவதலால்.

(ப-ம்)—இப்பிரமாண மாத்திரத்தான் ஜீவன் பிரஹ்மத்தினன்னிய னன்றனக் கூறத்தக்கதன்று. உபதேசத்தின் முன்னும் பின்னும் மத்தியுமாகிய மூன்று காலத்திலும் ஜீவன் பரமான்மாவினு மனன்யமுக "பிரஹ்மமாகவே யிருந்துகொண்டு பிரஹ்மத்தை யடைகின்றான். விமுக்தனும் விடுபடுகின்றான்" என்னுஞ் சுருதியாற் கேட்கப்படுகின்றான், ஆகையாற் சீவன் பரமான்மாவினு மற்படும் மன்னியனன்றனப் பொருள். (84)

(அ-கை)—அங்ஙனமா மேல் எப்போதும் பிரஹ்மமாயிருத்தலும் உபதேசத்தை விரும்புதலும் ஜீவனுக்கு விருத்தமெனவாசங்கித்து அவ்விரண்டு மவிரோத மெனத்திருவுள்ளடாக்கத்தோடுங் கூறுகின்றார்.

விரும்பிக் குருபோதனை யான்ம விமல ஞானம் பரம் பொற் சிவத் தன்மையு மென்றும் பகையதின்றாய்க், குரம் பைக் குளனுக்கிவ் விரண்டையுங் கூறலாகுந், தரம்பெற் றவரிரகு நந்தனன் றன்னின் மாதோ. (85)

(ப-மை)—குரு போதனை விரும்பி - ஆசாரியனுப தேசத் தின் அபேக்ஷையால், விமல ஆன்மஞானம் - பரிசுத்த ஆன்மாவின் யதார்த்த ஞானமும், பரம்-மேலான, பொன்-அழகிய, சிவத் தன்மையும் - எப்போதுஞ் சிவமாயிருத்தலும், என்றும் - எக் காலத்தும், பகையதின்றாய் - விரோத மின்றி, குரம்பைக் குளனுக்கு - சரீர தாரியான ஜீவனுக்கு, இவ்விரண்டையுங் கூறலா

கும் - உபதேசவுபேக்ஷையும் எப்போதுஞ் சிவமாயிருத்தலுமாகிய இவ்விரண்டையும் கூறலாகும், [எங்ஙனமெனின்] ரகுநந்தனன் ராமபிரான், தாம் பெற்ற அரிதன்னில் - மேலாகிய விஷ்ணுத் தன்மையை அடைந்தாற்போல.

(ப-ம்)—சுருதி யுபதேசம் ஆசாரிய வுபதேசம் ஆகிய இவை களினுல் தனக்குப் பிரஹ்மஞானமும் மூன்று காலத்திலும் பிரஹ்மமாயிருத்தலும் ஆகிய இவ்விரண்டும் ஜீவனுக்கு அவிரோதமெனக்கூறத்தக்கது. எங்ஙன மெனின் ஸ்ரீராமருக் கெப்போதும் விஷ்ணுத் தன்மையிருப்பினும் ராவண சம்மாரப் பொருட்டு மித்தையான மனிதவுபாதி வசத்தால் நான் தசரதருடைய புத்திரனாமனுயிருக்கின்றேன் எனச் சரீர வபிமானியாய்த் தனது விஷ்ணுத் தன்மையை யறிகின்றிலர், இராவண சம்மாரானந்தரம் ஆகாயத்தில் பிரஹ்மாதி தேவதைகள் கூடித் துதித்தலான காரணத்தினுல் இராமருடைய விஷ்ணுத் தன்மையை யறிவித்தார்கள். அக்கால் ராமர் தனது விஷ்ணுத்தன்மையை கண்டு யறிந்தவராஞர். அங்ஙனமே ஈண்டு மூபதேச வேட்கை யாற் பிரஹ்மத் தன்மை யறியப்படுகின்றதெனப்பொருள். (85)

(அ-கை)—இங்ஙனம் வாக்கியம் அகண்டை காசவஸ்து பா மாயதெனப்புகன்று இனிச்சிம்மாவ லோகன நியாயத்தால் உபா சனைவிதிபா மென்பதையனுவதித்துத் தூவதிக்கின்றார்.

சத்துபா சனையு யிர்க்கு விதித்திடுந் தகைமைத்தாமே
மெத்துரைக் கருத்த மெற்கு மிளிர்ந்திடு மதனினுனை
சித்துயிர் பிரமரூபத் தன்மையைச் செறியவேபோ
தித்திட விலையென் முன்னஞ் தெரித்தது தெளிவின் முடிவால்.

(ப-ரை)—உயிர்க்கு - ஜீவனுக்கு, சத்து பாச . - பிரஹ்மோ பாசனையை, விதித்திடுந் தகைமைத்தாய்ப் - விதிக்குந் தன்மைய தாய், மெத்து உரைக்கு-உயர்ந்த மகாவாக்கியத்திற்கு, அருத்தம் எற்கு மிளிர்ந்திடும் - பொருள் எனக்கு விளங்குகின்றது, அதனி னுன் - அவ்வேதவான், சித்துயிர் - சித்துவடிவ ஜீவன், பிரம ரூபத் தன்மையைச் செறிய - பிரஹ்ம வடிவத் தன்மையைப்

பொருத்தும் பொருட்டு, போதித்திடலில்லை - மகாவாக்கியம் கூறவில்லை, என் - என்று, முன்னர் தெரித்தது - முன் கூறப்பட்ட ஜீவோபமானது, தெளிவின்றுமால் - சுருதி சுவானுபவங்களை நிச்சயித்துக் கூறுங் கூற்றன்றும்.

(ப-ம்)—இத்தத்துவம சிவாக்கியம் உபாசனையை விதிப்பதாக எனக்கு விளங்குகின்றமையின் ஜீவனுக்குப் பிரஹ்ம வடிவத்தைப் போதிப்பதின்றனப் பூர்வவாதியாது பூர்வங் கூறினதே அது பொருத்தமின்றிய தென்பது பொருள்.

(அ-கை)—எதனலுபாசனை விதிபரத்துவமின்றனின் விதிபதங் கூறப்படாமையாலெனச் சித்தாந்தி கூறுகின்றார். (86)

சத்து யாசியென் றிவண்மறை சாற்றுத லினக்கின்
றத்து நீயென விம்மறை யறைந்திடு மதனற்
சத்து பாசனைக் கருமத்தின் விதிநசைத் தகைமை
மெத்த வேயிலை யென்பது மித்தையன் றுணர்நீ (87)

(ப-னை)—இவண் - எண்டு, மறை - இத்தத்துவமசிவாக்கியத்தில், சத்துபாசியென்று-பிரஹ்மத்தை உபாசிப்பாயாகவென, உனக்கு, சாற்றுதல் - கூறுதல், இன்று - இன்றும். (எனனின்) அத்துநீயென - அது நீயாயிருக்கின்றாயென்று, இம்மறையறைந்திடுமதனல் - இத்தத்துவமசிவாக்கியங்கூறுவதனல், (ஆகையால்) சத்துபாசனைக் கருமத்தின் - பிரஹ்மோபாசனைகருமத்தினது, விதிநசைத்தகைமை - விதியை விதிக்கும் விருப்பம், மெத்தவேயிலையென்பது - அக்கியங்கம் இம் மகாவாக்கியத்திற்கின்றென்றுயாது எம்மான் முற்கூறப்பட்டதோ அது, மித்தையன்று - சத்தியமெனை, உணர் நீ - நீ உணர்வாயாக.

(ப-ம்)—இத் தத்துவமசிவாக்கியத்தில் சத்தையுபாசிப்பாயாக வென விதிபதங் கேட்கப்படவில்லை; மற்றியாதெனின் அதுவாக நீ இருக்கின்றாய் என உள்ளதை யுபதேசிப்பதான சுருதியே யுண்டு. ஆகவின் பிரஹ்மத்தை உபாசித்தலான பிரஹ்மோபாசனைகர்மத்தை விதிப்பதன்றென்பது பொருள். (87)

(அ-கை)—விதிபதங் கேட்கப்படாமையான் உபாசனைபரத் துவ முடையதன்றெனின் அக்கால் விதிபதஞ் சேத்துக்கொள் வேமெனின் ஆண்டுக் கூறுகின்றார்.

அதனினல் வரவை யெவணிருந் தேனு மாற்றிடப் படு மென வாயி, னதுபயன் சிறிதுந் தருவதிங் கிலை புன் னெலை மனப் புருடனை லுளுற்று, மதுதனக் கெதனுன் மறையினற் றகைமை யணுகிட வில்லையா மெனவே, முதுமறை யறியு முதுவர்தம் மொழியு முளதெனமனங்கனி னுனரே. (88)

(ப-னை)—அதனின் - அவ்விதிபதத்தினது, நல்வரவை - நன்முகக் கொண்டுவருதலை, எவணிருந்தேனும் - எவ்விடத்தினி ன்றேனும், ஆற்றிடப்படுமெனவாயின் - செய்யப்படுகின்றதெ னின், எதனுன் - எக்காரணத்தால், புன்னெலப் புருடனை லுந் றும்-அற்பத்தன்மையனை புருடனற் செய்யப்படும், அதுதன க்கு - விதிபதத்தேதாதிற்ற அவ்வாக்கியத்திற்கு, மறையினற்றகை மை - நல்ல வேதத் தன்மையானது, அணுகிடவில்லையாம்-பொ துதலின்றும், (அதனல்) அது பயன்சிறிதுந்தருவதிங்கிலை-ஈண்டு அதுபயனை அற்பமேனுந் தருவதின்றும், எனவே-என்று, முது மறை யறியும் - அனுதிவேதத்தை யுணர்ந்த, முதுவர்தம் மொ ழியுமுளதென - புருடனற் செய்யப்பட்ட வாக்கியம் பல ன்றாதென்று முனிவாது வாக்கியமுமுண்டென, மனங்கனி னு னரே - மனதிற் கருதுவாயாக.

(ப-ம்)—அவ் விதிபதத்தை யாண்டிருந்தேனுங் கொணர் ந்து இத்தத்துவமசிவாக்கியத்திற் சேர்த்துக்கொன்வேமெனின் அக்கால் அவ்விதிவதம் அனர்த்தமுடையதேயாகும். எனெனின் வேதம் அபௌர்வேஷயமாதலின் புருடனற் செய்யப்பட்டதற் குச் சுருதித்தன்மையின்று என வேதத்தை யுணர்ந்தவாது அபிப் பிராயமாம். ஆகவின் விதிபதத்தைக்கொண்டுகூட்டலான அத் தியாகாரஞ் செய்தல் பொருத்தமின்றென்பது பொருள். (88)

(அ-கை)—ஆகேஷபம் அங்ஙனமேனும் வாக்கியத்தின் பரி பூர்த்திக்குக் காரணமாதலின் கொண்டு கூட்டல் எங்ஙனம் அனர்த்த முடையதாகுமெனிற் கூறுகின்றார்.

இந்தநன் மொழியுந் தன்னரும் பொருளை யின்புறப் புருடனின் பொருட்டாய்ச், சந்தத மறிவித்திடுவதற் கரிய சமர்த்தமென் னின்றடா லவதனை, மந்திர மறைய தறைந் திடா திருந்து மற்றிடத் திருந்தொரு விதியின், றந்திர வரணவ யுன்றனை மிகவுந்தகுந்திடப் புரிந்திடப் படுமே.

(ப-ரை)—அடா - அடே ! இந்த நன்மொழியும் - இம்மகா வாக்கியமும், தன்னரும்பொருளை - தனதருமைவாய்ந்த வர்த் தத்தை இன்புற - வருத்தமின்றி, புருடனின் பொருட்டாய் - முழுமுதற்வான புருடனின் பொருட்டு, சந்ததம் - என்றும், அறி வித்திடுவதற்கு - போதிப்பிக்க, சமர்த்தம் என் இன்று - சாமர்த் திய முடையதன்றுவென்ன ? மந்திரமறையது அறைந்திடாதிரு ந்தும் - இரகசியமான வேதங் கூறாதிருந்தும், ஒரு விதியின் - ஒப்பற்ற அக்கியாகார விதியால், மற்றிடத்திருந்து - வேறு ரிடத்தினின்றும், தந்திரவரணை - வேதவாக்கியத்தின் கொண்டு கூட்டலை, உன்றனல் - உன்னல், மிகவும், தகுந்திடப் புரிந்தி டப்படும், தகுதியாகச் செய்யப்படுகின்றது, எதனல், (அதனை லென்றவண்ணம்.)

(ப-ம்)—அடே என்றது தாழ்ந்த விளி, இத்தத்துவமகிவாக் கியந் தனது அருத்தமான பிரத்தியக் பிரஹ்மங்களின் ஏகத்தன் மையை அதிகாரிக்குப் போதிக்கச் சாமர்த்தியமற்றதா ? எச்சா மர்த்தியமின்மையாற் கேட்கப்படாவிடினும் விதிபதத்தின் அக் கியாகாரஞ் செய்யப்படுகின்றதே தா அச்சாமர்த்தியமற்றதாவென ஆக்ஷேபகம். ஆகவின் விதிபதமின்றேனும் அருத்த பரிபூர்த்தி யாகின்றமையின் விதிபதத்தின் அக்கியாகார வபேக்ஷையின் றென்பது பொருள்.

(89)

(அ-னை)—விதிபதாத்தியாகார வபேக்ஷையின்றென வே றதுவைக் கூறுகின்றார்.

சுருதனன் மொழியை யொழித்திவண் மீண்டுச் சுருதமி லாதகற் பனையுந், சுருதியின் பொருளைக் கற்றநற் றவர்கள் சொற்றசம் மதமதன் றதனுற், சுருதியிற் பிரிய முறுமரி யவனுற் சுருதியின் வதனின் றழலை, யரிதுற வளத்திற் கொள்ளறிவ் வினமையா மகத்தெழல் கொளறெளி வலவே.

(ப-ஈ)—இவண் - சண்டு, சுருதநன்மொழியை யொழித்து - கேட்கப்பட்ட நல்ல வசனத்தை நீக்கிவிடுதலும், மீண்டுபின்னரும், சுருதமிலாத கற்பனையும் - கேட்கப்படாததைக் கற்பித்தலும், சுருதியின் பொருளைக்கற்ற - வேதார்த்தத்தை யுணர்ந்த, நற்றவர்கன் சொற்ற - நல்ல தவ சிரேஷ்டர்கள் கூறுகின்ற, சம்மதமதன்று - சம்மதமும் அதுவன்று, அதனல், சுருதியிற் பிரியமுறும் அரியவனல்-வேதத்திற் சிரத்தையுடைய முமுக்ஷுவால், சுருதியின் வதனநின்றெழுலை-சுருதியின் முகத்தினின்று முண்டானதையே, அரிதுறவுளத்திற்கொள்ளல் - அன்போடு மனதிற்கொள்ளுதல், தெள்ளிமையாம் - தெளிவுடைமையாம், அகத்து எழுல் கொளல் - மனதிற்றோன்றியவண்ணங் கொள்ளுதல், தெளிவல - ஒழுங்கன்று.

(ப-ஊ)—விதிபதாத்தியாகார பகுதத்தில் இதுவும் பெரிய தோஷமாம் கேட்கப்பட்ட பொருளின் நீக்கமும் கேட்கப்படாத வருத்த கற்பனையும் வேத வித்துக்களின் சம்மதமன்று. ஆகவின் சுருதியிற் சிரத்தையுடையோனல் சுருதி கூறியவண்ணங் கொள்ளவேண்டுமன்றித் தனது புத்தி நிச்சவண்ணங் கூடாதென்பது பொருள். (90)

(அ-கை)—தத்துவமசிவாக்கியத்தில் விதிபதங்கேட்கப்படாமையானும் விதிபதத்தைச் சேர்த்தல நியாயமின்மையானும் அவ்வாக்கியம் உபாசனவிதிபாமன்று. ஆயின் அகண்டை காச வஸ்து பரமானது என விவ்வளவாற் சாதிக்கப்பட்டது. ஆண்டிதா சங்கையாம் தத்துவமசிவாக்கியம் வஸ்து பரமாயின் வஸ்து கொள்ளவும் தள்ளவும் விஷயமாகாமையின் வாக்கியம் புருஷார்த்தமின்றுயதாகும் விதிபரமாயிலை புருஷரின் பிரவிருத்தி பிரயோஜனமாம்.எனினின் பிரயோஜனம் பிரவிருத்தி நிவிருத்திகளாற் சாதிக்கப்படுதலினலாம்.என்பது பொருத்தமின்றியதனச் சித்தார்த்தவாதிகள் நினைக்கின்றவர்களாய் வாக்கியம் வஸ்துபரத்தன்மையதேனும் சர்வ அனர்த்தகாரண அஞ்ஞான நிவர்த்தியான பரம புருஷார்த்தகாரணமாக நினைக்கின்றூர்களென்னச் சித்தாந்தி கூறுகிறூர்.

மருமறை புருடன் றனக்குவெஞ் சனன மரணகா
ரணமதா யனர்த்தம், புரிதரு மூடவி னைகமெனு மதினைப்
போக்கிச் சன்மயமதாஞ் சிவத்தின், பெருமதி யதனை
த்தெரிதரத் தருகும் பிரிதரும் புருடனுக் குரிய, பெருமித
மதன்றன் பொருட்டே யாகிப் பிறங்கிடு மெனமனத்
துணரே. (91)

(ப-ரை)—மருமறை - இராகசியார்த்தங்களையுடைய வேத
வாக்கியமானது, புருடன் றனக்கு-முழுமுதற் புருஷனுக்கு, வெம்-
கொடிய, சனனமரணகாரணமதாய்-பிறப்பிறப்பிற்குக் காரணமா
னதாய், அனர்த்தம் புரிதரும்-அனிஷ்டத்தைச் செய்வதான, உட
வினைகமெனுமதினை - சரீரத்துள்ள ஆன்ம புத்தியை, போக்கி -
கெடுத்து, சன்மயமதாம் சிவத்தின்பெருமதியதனை - சத்தா
மாத்திரமான சிவத்தின் ஒப்பற்றஞானத்தினை, தெரிதரத் தரு
கும் - நன்முக உண்டுபண்ணும். (ஆதலின் வாக்கியம்) பிரிதரும்
புருடனுக்குரிய - உவமையற்ற புருடனுக்குரித்தான, பெருமித
மதன் றன்பொருட்டேதியாகி-பெரிய புருடார்த்தத்தின் காரண
மாய், பிறங்கிடுமென மனத்துணர் - விளங்குமென இதயத்தின்
கண்ணுணர்வாய்நீ.

(ப-ம்)—புருடனுக்கனர்த்தவினர்த்தம் புரிவதாயும் பிறப்பிறப்
பிற்குக் காரணமாயும் இராநின்ற உடம்பிலுள்ள ஆன்ம புத்
தியைக் கெடுத்துச் சன்மாத்திர வான்மஞானத்தைக் கொடுக்
குஞ் சுருதியானது பெரிய நன்மைக்கேதுவாகின்றது. எனை
னின் வாக்கியத்தாலுண்டாயஞானம் மோக்ஷகாரணமாதலினை
லாம் எனப் பொருள். (91)

(அ-கை)—ஆக்ஷேபம் இங்ஙனமெனும் தத்துவமசிவாக்கியம்
புருடார்த்த காரணமாகாது. மிக முயன்று தத்துவம சிவாக்கி
யத்தை யடிக்கடி சிரவணித்தயாங்கள் அனர்த்தகாரண வஞ்ஞா
னம் நீங்கப்பெற்றிலேமாதலின் என்றுசங்கித்துப் பாபத்தால்
மூடுண்ட புத்தியுடையோர்க்கே அங்ஙனமாம், ஈசுவர பத்தர்க
ளான பரமாம்சர்கள் பாபமின்றிய வாதலின் ஒருதாஞ் சிரவ

ணைந் செம்தலிணுணும் அணுடாவமுடிவானஞாலேற்பத்தி உண்டா கின்றமையின் அங்ஙனம் அன்றென்னு மபிப்பிராயத்தாற் கூறு கின்ருர்.

அதுநீ யாவா யிவனின தென்றறையப் படுமா வாக்கியத்தாற், றிகமா யெஞ்ஞான் றறியுமணைந் தெனிக்கப் மடிவ னஞ்ஞான்றே, யதுமாங் காய மதிலார்ந்த புருடன் றனது வறிவிலதா, மதியா தகுமன் மடிந்திடு மெனவே மதியிற் கருதுதியால். (92)

(ப-ரை)—இவனினது என்று அறையப்படும்-இப்பரமான் மா உன் வடிவமெனக் கூறுகின்ற, அது நீ யாவாய் - அது நீயா யிருக்கின்ருய் என்ற, மாவாக்கியத்தால் - மகா வாக்கியத்தால், வஞ்ஞான்று - எக்காலத்து, நிதமாய் - பிரதிபக்ஷமின்றி, அறியும் வணம் - தெரிந்துகொள்ளும்படி, தெரிக்கப்படுவன் - புருடன் போதிக்கப்படுவாரே, அஞ்ஞான்றே - அக்காலத்திலேயே, அது மாங்காயமதிலார்ந்த - இழிந்த சரீரத்துற்ற, புருடன்றனது வறி விலதாமதியாதது - புருடனின் அவிவேக புத்தியாதொன்று, மண்மடிந்திடுமென - அத்தியக்தம் நாசமாகுமென்று, மதியிற் கருதுதி - புத்தியில் நிச்சயம் பண்ணுவாயாக.

(ப-ம்)—வேதம் அதிகாரிக்கு உண்மை ஞானத்தை யுண் டாக்குவதாதலின் "நீ யதுவாயிருக்கின்ருய். இவ்வான்மா பிரம் மம். இஃதனைக்கான்மா. பிரக்ஞானம் பிரம்மம்" என்றுபதினை மூதலிய மகா வாக்கியங்களினால் சீடன் எப்போது நீ தேகேந் திரிய பிராணைகளுக்காய் சங்காதனென்று அவை கடம்போன்று நிரு சியமாதலின். உன்னிற்றேறன்றுஞ் சுக துக்க முதலியவை அத்தக் காண வுபாதியாலாக்கப்பட்டமையின் நீ சம்சாரியுமன்றனைப் போதிக்கப்படுகின்ருயே அக்காலத்திலேயே உத்தமாதிகாரி சீடன் சரீரத்துற்ற ஆன்ம புத்தியான அவிவேக புத்தியை நீக்குகின் றது. ஆகவின் வாக்கியத்தாலுண்டான ஞானத்தாலஞ்ஞானமழி யுங்கால் நிரதிசயானந்தா விர்ப்பாவ வடிவப் பிரயோஜனமுண்டா

கின்றமையின் வாக்கியம் வஸ்து பரமேனும் புருடார்த்தத்தில் மூடிவுடையது என்பது பொருள். (92)

(அ-கை)—மீண்டுந் தத்துவமசி வாக்கியம் அஞ்ஞானத்தை க்காதேல் சனன மரண சம்சாரமு நீக்க முடியாதாம் என்று வாக்கிய மஞ்ஞானத்தைக் கெடுக்காதென்னும்) விபக்ஷத்தில் தோடங்கு கூறுகின்றார்.

புருடனுக் குடற்கட் பொருந்துகா னெனுமிப் பொய்ம்மதி யதனை மெய்ம்மறை தான், றிருடம துடனிங் கொழித்திலதாகிற் றிகழ்சுக துக்கமாம் பயனே, டருடரு மகமென்றிடுமதி யேது வுடையபுற் கருமமார்கதியை, மருடரு பரத்தின் வசமது வாக மன்னியிங் கனுபவித் திடுமே, (93)

(ப-னா)—புருடனுக்கு, உடற்கட்பொருந்தும் - சரீரத்தற்ற, நானெனும் - நான் என்றுள்ள, இப்பொய்ம்மதியதனை - இந்தப் பிராந்தி ஞானத்தை, மெய்ம்மறைதான் - சத்திய வேதமானது, திருடமதுடன் இங்கு ஒழித்திலதாகில் - அத்தியந்தமிச்சம் சாதித்தில் நீக்காதாயின், திகழ்சுக துக்கமாம் பயனே டு - திருட்டமாய் விளங்குகின்ற சுகதுக்க பலனைடுற்ற, உருள் தரும் அகமென்றிடு மதியேயது வுடைய - பிறழ்கின்ற அகங்காரத்தைக் காரணமாக வுடைய, புற்கருமமார்கதியை - இழிந்த கருமம் பொருந்திய மார்க்கத்தை, மருடரு பாத்தின் வசமதுவாக - சுதந்திரமின்றி மயக்கந் தரும் பரவசமாக, மன்னியிங்கனுபவித்திடும் - புருடன் பொருந்தி இச்சம்சாரத்தில் அனுபவிப்பான்.

(ப-ம்)—சுருதி வாக்கியம் புருடனுக்கு அனன்மாவிலுள்ள ஆன்ம புத்தியை யழிக்காதாயின் சுகதுக்க காரண சரகரதிரியக் காரியவுடைவு வடிவ அகங்காரத்தைக் காரணமாகவுடைய கர்ம மார்க்கத்தைப் பரவசனையனுபவிப்பான். ஆகவின் வாக்கியத்தா லுண்டாய ஞானத்தால் அஞ்ஞான நீங்குங்கால் அதன் காரிய மான சம்சாரமு நீங்குகின்றது. இதனன் வாக்கியம் அகண்டை காரவஸ்து பரமாதலின் தோடமற்ற புருடனுக்குப் புருடார்த்த சாதன மென்பதபிப்பிராயம். (93

(அ-கை)—இங்ஙனம் வாக்கியம் வஸ்து பரமாயின் தோட மின்றிய பலமா மெனக் கூறி விதிபரமாயின் பலமின்மையைக் காட்டுகின்றார்.

தத்துவ மசியென் றிருமொழி பிரமந் தனது பாசனை புரி கரும, மெத்தவும் புகலுந் தத்துவ மெனதன் மெய்ய யிக் கியமிழற் றிலதேற்' பத்தியொ டரியசத்தபா சனையப் பயின்றிடு பவர்க்குமேற் பவிக்குஞ், சத்தியப் பலனெதத்தகை யெனவே சற்றுவி சாரமே புரிவாம். (94)

(ப-ரை)—தத்துவமசி யென்றிருமொழி - அது நீயா யிருக்கின்ரு யென்னும் அழகிய மகா வாக்கியம், பிரமந்தனது பாசனை புரிகரும மெத்தவும் புகலும் - பிரமத்தை உபாசிப்பதான கருமத்தையே மிகவுங் கூறுகின்றது, (அதுவல்லாது) தத்துவமென - அது நீயா யிருக்கின்ரு யென, தன்மெய் அயிக்கிய மிழற்றில தேல் - தன்மையான சத்திய ஏகவடிவத்தைக் கூறுதாயின், பத்தியொடு - பிரியத்தோடு, அரிய சத்து பாசனையைப் பயின்றிடுபவர்க்கு - செய்தற்கரிய பிரமோபாசனையைச் செய்கின்ற தூர்வமீமாஞ்சகர்களுக்கு, மேற்பவிக்கும் - பின் உண்டாகும், சத்தியப் பலனெதத்தகை யெனவே - உபாசனையாலுண்டாய வன்மையான பலன் எத்தன்மையதென, சற்று விசாரமே புரிவாம் - அற்ப விசாரத்தாற் காண்பாம்.

(ப-மீ)—தத்துவமசி வாக்கியத்து சத்தையு பாதிப்பாயாகவென உபாசனைகர்மத்தைப் போதிக்கின்றது ஜீவப் பிரமங்களின் ஏகத்தைப் போதிப்பதென்று எனின் பிரமோபாசகனை பூர்வமீமாம்சகனுக்கு எவ்வாறுய பலமுண்டாமென்பதை விசாரிப்போம். இதனை உபாசன பரமாயினற்ப பலமின்னெறனைப் பொருள். (94)

(அ-கை)—என்று செய்யப்படு மிவ்வாராய்ச்சியான் யாது? பிரமத்தின் அத்தியந்தம் வேறான பிரமோபாசகனை புருடனுக்கும் பிரமத்தோடு ஒன்றுகும் பலம் உண்டாகுமென்று சங்கித்துக் கூறுகின்றார்.

மத்திய குண மூடைய மனுடனுக் காிய தான
சத்துபா சனையி னலே சத்துருத் தனைமை மேவா
தெத்தகை யவனு மீண்டு வெவ்விதத் தினுங்கா லைச்
சித்தமா கியசு பாவஞ் சிதைத்தில னெதனி னனே. (95)

(ப-னை)—மத்திய குணமுடைய - தாழ்ந்த தருமமுடைய, மனுடனுக்கு - உபாசனை புரியும் புருடனுக்கு, அரியதான சத்து பாசனையினலே - அருமையாகிய பிரஹ்மோ பாசனையினல், சத்துருத் தனைமை மேவாது - சத்து வடிவப் பிரஹ்ம ரூபத்தன்மை பொருந்தாது, எதனினல் - எனெனின், ஈண்டு - சம்சாரத்தில், எத்தகையவனும் - எந்தத் தன்மை வாய்ந்தவனாலும், எவ்விதத்தினும் - எவ்வுபாயத்தாலும், தானைச் சித்தமாகிய சுபாவம் - இயல்பாகச் சித்தித்த தர்மத்தை, சிதைத்திலன் - அழிக்க வன்மையனன்றாதலினலாம்.

(ப-ம்)—பரமார்த்தமாகத் தாழ்ந்த தர்மமுடைய புருடன் பிரஹ்மோ பாசனையால் பிரஹ்ம வடிவ மாகான். எனெனின் ஈண்டு யாதொரு பொருளும் இயல்பாகப் பொருந்திய சுபாவத்தை எதனாலும் விடுகிறதில்லை; ஆகலின் சத்து பாசனையால் சத்துவடிவ மடையப்படா தென்பது பொருள். (95)

(அ-னை)—உபாசன பரம்பொருளாதி மதத்தில் பந்தஞ் சத்திய மா யறியப்படுதலின் தனது மாண சுபாவத்தின் தெருப்பின் தூதோன்று நீங்காங் கூடாமையின் அமிர்தவடிவப் பிரஹ்மப் பிராப்தியுபாசனையின் பலமாக வண்டாகாதெனக் கூறப்பட்டது. இனி மீண்டும் அபிநிவேசத்தால் (மாண பயத்தினின்றும் விடும்பொருட்டு) பிரஹ்மப் பிராப்தியே வுபாசனையின் பலமாகக் கற்பிக்கப்படுமாயின் அதனால் ஜீவனது சொரூபம் நாசமாகும் எனெனின் அத்தியந்த விருத்த சுபாவமுடையவைகளுக்கு ஐக்கியம் விரோதமாதலினலாம். என்று சித்தாந்தி கூறுகின்றார்.

சத்துபா சனையி னலே சத்துருத் தனைமை யிந்தச்
சித்தயி ரையடையு மாயிற் செறிதன துருவிச் சிவன்
மெத்தவுடம் விடுவ தின்றே மெய்யயிக் கியனூ னைத்தா
னைத்தினை விருவ ருக்கு மியைந்திட லிலது காணே. (96)

(ப-ரை)—சத்து பாசனையிரல் - பிரஹ்மோ பாசனையால், சத்துருத்தகைமை - பிரஹ்மவடிதன்மையை, இத்தச் சித்து யிரடையுமாயில் - இச்சீவனடைவனேல், இச்சீவன் செறிதன துருவு - பொருந்திய தனது மாண வடிவை, விதிவிண்டோ - விடமாட்டானை, எத்திரல் - எதரல், இருவருக்கும் - விருத்த வியல்புடைய விருவருக்கும், மெய்யயிக்கிய ஞானத்தான் - உண்மையான அபேத ஞானமானது, இயைந்திடவிலது - பொருந்துவதின்றே அதரல்,

(ப-ம்)—இச்சீவன் பிரஹ்மோ பாசனையாற் பிரஹ்மத்தை யடைவானெனின் தனது மாணவியல்பை விடுவான். எனெரின் மிகவிலகூணமான விரண்டு வஸ்துக்களுக்கு விருத்த தருமமிருத் தவிரல் ஐயிக்கியமுறான மூண்டாகாதாதலிரலாம், எகவடிவ பலத்தை அங்கீகரிக்கில் மாணவடிவ வியல்பு நீங்கும் அதரல் சொரூபத்திற்கும் நாசம் வருகின்றமையாலும் மாணவியல்பு நீங் லும் ஒன்று ஒன்றன் வடிவை யடைதல் கூடாமையாலும் ஜீவ னுக்குப் பிரஹ்மப் பிராப்தி யுபாசனைபலமன்று. ஆகவின் இரண்டு பிரகாரத்தாலும் பிரஹ்மத்தினடைவுபாசனை பலமன்று. "ஒன்று ஒன்றாகாதாகையால் ஒன்றை ஒன்றுச் சிந்திக்கலாகாது. ஒன்று மற்றொன்றன் வடிவமேல் நாசமதற் கூண்மையாகும்" என வாசார்யாவர்களாலும் புகலப்பட்ட தென்பதூ பொருள். (96)

(அ-கை)—ஆகேகூபம் உலகில் ரசத்தோதற்ற விரும்பு சொரூப நாசமன்றி பொன்றன்மையை யடைவது போன்று ஜீவனும் சுபாவமான மாண வியல்பை விட்டுத் தனது சொரூப நாசமின்றிப் பிரஹ்மப் பிராப்தி வடிவ பலமூடையவனென்று எனைக் கேட்கின்றன் பூர்வ பகுதி.

இயல்ப தாகிய பிரகிரு நிலையிலித்த நிரதிமாடியை டான, வயமதாயது கனகத்தின் றகைமையை யடைந்திரு மதுபோல, நியம மாகிய சத்துபா சனையிரை னிமலன தரு வாக, நயம தார்புரு டனுமன வரதரு நன்னைதின்ன மை மதாமே. (97)

(பா-ரை)—இரகமொழியை பான அயமதாயது - வேதனை யான் ரசத்தோதுங் கூடிய விரும்பு, இயல்பதாகிய பிரகிருதியை விதித்து - உடன்பிறந்த இரும்பின் கன்மையைவிட்டு, கனகத் தின் றனைமையை யடைந்திடுமதுபோல - பொன் றன்மையை யடைவதுபோன்று, நயமதார் புருடனும் - கன்மையை விரும்பும் புருடனும், நியமமாகிய சத்து பாசனையினல் - நியதியாக இடை விடாது செய்யும் பிரற்றமோ பாசனையால், நிமலனது உருவாக-பாமான்மாவின் வடிவாக, அனவாதமும் - என்றும், நண்ணல்தின் ணமதாம் - பொருந்துவது சத்தியமாகும்.

(பா-மீ)—இரதத்தோடுங் கூடின இரும்பு இயல்பான இரும் புத் தன்மையைவிட்டுத் தனது நாசமின்றி பொன்னின் றன்மை யை யடைவதுபோன்று புருடனும் நான் பிரற்றமமா யிருக்கின் றேனெனச் சந்தகந் செய்யும் பிரற்றமோ பாசனையால் தனது வியல்பான மாணகருமத்தைவிட்டு நாசமின்றியவலைப் பிரற்றம வடிவத்தை யடைகின்றனன். ஆகலின் வாக்கியத்தா லுண்டாம் நன் ஞானமின்றியும் பிரற்றமோ பாசனையாகிய கர்மத்தானேயே ஜீவன் பிரற்றமத்தை யடைகின்றனனென்பது பூர்வ பக்ஷிகளின் அபிப்பிராயம்.

(97)

(அ-ரை)—இரும்பு பொன் றன்மையை யடைந்தென்பது பிராந்தியாகலின் இத்திருட்டாந்தம் வித்துவான்களின் சம்மத மன்றென அதனைப் பரிகரிக்கின்றார் சித்தாந்தி

இரத மும்மிக விரும்பின தவயவ மிகைதமறைத் திருந் தேதபின், னெரிக ழுலினல் லணுக்கிர கமதடைந் திரும்பினிற் பொனின் பான்மை, யொருதின் ஞானத்தை யுதிகரப் புரிந்திடு மூயர்கன கமதாகக், கருதிற் புல்லிய வயம்பொருந் துறலெந்தக் காலத்து மிலையாமே.

(98)

(பா-ரை)—இரகழும் - இரசம், மிகவிரும்பின தவயவமிகை-மிகவும் இரும்பினது அவயவத்தை, மறைத்திருந்து - அடக்கி வைத்துக்கொண் டிருந்து, எரிகழலின்நல் அணுக்கிரகமது அடை

ந்து - ஜொலிக்கின்ற நெருப்பின் உதவியை யடைந்து, பின் - அன்பின்னர், இரும்பினில் - அயத்தில், பொன்னின்பான்மை - பொன் நன்மைபோன்ற, ஒரு திண் ஞானத்தை - ஓர் திடமான ஞானத்தைமட்டில், உதிதாப் புரிந்திடும் - உண்டாகும்படி செய் திடும், கருதில் - சோதிக்குமிடத்தில், புல்லியவயம் - இழிந்த இரும்பு, உயர் கனகமதாக - உயர்ந்த பொன்னாக. பொருந்துறல் எந்தக் காலத்துமிலையாம் - பொருந்துவது ஓர் போதுமின்று.

(ப-ம்)—இரும்பின் அவயவங்களை மறைத்திருக்கின்ற ரசம் அக்கினியிலிட்டபின் அதன் அனுக்கிரக பலத்தாற் பிராந்தர்களு க்குக் கேவலம் கனகத்தன்மை ஞானத்தைமட்டில் இரும்பினை டாக்குகின்றது. அவ்விரும்பு பொன் றன்மையை யடைந்தில (98) தென்பது பொருள்.

(அ-கை)—இப்பொருளையே திருட்டாந்தத்தால் விளக்கு கின்றார்.

சுதையுஞ் செம்பொனு முதகத்தி னவயவஞ் சுத்த வெள் ளியதாதா, மதனு றுப்பையு மறைத்திய லறிவினை யரியவெண் பொனினாடு, முதகந் தன்னினு முதிதரப் புரியு மிங் குண்மையிவ் வணம்போல; முதுவி ரும்பினின் மாழை (99) யென் றிடுமயன் முழுமதி யுளதாமே.

(ப-னை)—சுதையும் - அமிர்தமான பாலும், செம்பொ னும் - செம்மையான பொன்னும், உதகத்தின் அவயவம் - தண் ணீரின் அவயவத்தையும், சுத்த வெள்ளிய தாதாம் அதனுறுப் பை யும் - பரிசுத்த வெண்ணிறத் தாதுவான வெள்ளியினது அவ யவத்தையும், மறைத்து - காணுது செய்து, அரியவெண் பொனி னாடும் - அருமையான வெண்ணிறம் வாய்ந்த வெள்ளியினிடத் திலும், உதகந் தன்னினும் - தண்ணீரினிடத்திலும், அயலறி வினை-பால் பொன் என்னும் வேறு ஞானத்தை, இங்கு - எண்டி உதிதாப் புரியும் - உண்டாகும்படி செய்யும், உண்மை இவ்வினைப் போல - இவ்வுண்மையைப் போன்று, முதுவிரும்பினில் - பழ மையான இரும்பில், மாழையென்றிடு முழுமதி - பொன்னென்

ஐம் ஞானமெல்லாம், மயல் உளதாம் - மயக்கத்தால் உண்டாகின்றன.

(ப-மீ)—பால் உதகாவயவங்களை ஆச்சாதித்துபயோமதியை யுண்டாக்குவது போன்றும் ஹேமம் ரஜதா வயவங்களை யாச்சாதித்துக் கனக புத்தியை யுண்டாக்குவது போன்றும் இரசம் இரும்பி னவயவங்களை யடக்கி யேம புத்தியை யுண்டாக்குகின்றது. பொன்னுக * செய்கின்றதன்று. ஆகலின் பொன் மயக்கான் இரும்பறியப் மட்டதென்பது பொருள். (99)

(அ-கை)—ரச வீரியத்தாலாய பாகம் நாசமடைந்தபின் விளங்காமையாகிய விதனுனும் இரும்பில் பொன்தன்மை பிராந்தியாலாயது. போக்குவரவுடைய அப்பொன் பாவம் அணுமானத்தால் வஸ்திராதி பொன்று அவசியம் போன்றுவதாமெனக் கூறுகின்றார்.

இழியயந்தனக்குப் பொன்மை யிரதவீ ரியவிபாக
மழியவு மழியுங் கூடு மதுமிகத் திண்ண மாக
முழுவதும் பிரியு மெத்தான் முதுதொழி லினிலுண் டாகு
மழிபொரு ளநித்த மாமென் பதுபிர சித்த மாமே. (100)

(ப-னை)—இழியயந் தனக்கு - இழிந்த இரும்பிற்கு, பொன் மை - பொன் றன்மை, இரத வீரியவிபாக மழியவுமழியும்-இரச வீரியத்தா லுண்டான பாகம் அழியவும் அதுவும் அழியும், எத் தால் - எவனெனின், கூடும் அது - சேர்க்கையை யடைந்தது, மிகத் திண்ணமாக - அவசியமாகவே, முழுவதும் பிரியும் - எல் லாம் பிரிவை யடையும் என்பதாலாம், முது தொழிலினி லுண் டாகும் - பழமையான கருமத்தா லுண்டாகின்ற, அழிபொருள்- அழியும் பொருளானது, அநித்தமாமென்பது பிரசித்தமாம்-அழி யுமென்பது பலருமறியக் கிடக்கும் வெளியாம்.

(ப-ம்)—ரச வீரியத்தின் விபாகம் நாசமாங்கால் காஞ்சனத் தன்மையின் ரூற்றமும் நாசமுறும். பிறக்கும் வத்தென்று மூள ஹாகாதனை வத்திராதியிற் காண்டலின் பிறந்தநி னழிவு பிரசித்

தமேயாம். ஆகலின் இரும்பிற்குப் பொன் றன்மை பிராத்தியா (100)
லாயதெனப் பொருள்.

(அ-கை)—இங்ஙனம் ஒன்றொன்றுதல் மயக்கமானதால் உண்மையில் ஒன்று ஒன்றன் வடிவாகாது. ஆகலின் மாணவியல்புடைச் சீவன் பிரஹ்மோ பாசனை கருமத்தால் அமிர்தவடிவப் பிரஹ்மத்தை யடையானெனக் கூறப்பட்டது. ஆண்டிஃதாசங்கையாம் அமிர்தத் தன்மையென்பது முன்னின்றியதாய் உபாசனை கர்ம சாமர்த்தியத்தா லாகின்றது. யாகாதியாற் சாதிக்கப்பட்ட சுவர்க்காதிபலம் போன்று என்றவிடத்துச் சித்தாந்திகூறின்றார்.

முன்னில தழுதத் தன்மை யிவனது முடிவின் மூலந்
தன்னுபா சனையி னலே சாதிப்பன் வேள்வி போல
வென்னிலத் துறக்கம் போதலு மிதுமழிந்திடுமெ தாலே
மன்னிடு மநித்த தன்மை செயற்கைக்கு மயக்க மின்றும்.

(ப-ரை)—இவனது - இவ்வுபாசகனது; அழுதத தனமை - அமிர்த வடிவத்தை, முன்னிலது - முன்னில்லாததாய், முடிவு இல் மூலந்தன் னுபாசனையினல் - அழிவற்ற காரணப் பிரஹ்மோபாசனையினல், சாதிப்பன் - சம்பாதிப்பான், வேள்விபோல வென்னில் - முன்னடையப்படாத சுவர்க்கம் யாகத்தால் சம்பாதிப்பதுபோல என்றல், அத்துறக்கம்போல இது அழிந்திடும்-அச்சுவர்க்கம் போன்று இவ்வுபாசனை பலமும் அழிந்திடும், எதால் - எனெனின், செயற்கைக்கு - இடையி னுண்டாயதற்கு, அநித்தியத் தன்மை மன்னிடும் - அநித்தியத் தன்மை பொருந்திடு மாதலினலாம் மயக்கமின்றும் உண்மையே.

(ப-ம்)—புருடன் முன்பின்றிய சுவர்க்காதிலை யாகத்தாலடைவதுபோன்று முன்பின்றிய அமிர்தத் தன்மையையும் உபாசனையா லடைகின்றனெனின் அக்காலக்காரிய சுவர்க்கம் அழிவதுபோன்று அவ்வமிர்தத் தன்மையும் முடிவுடையதாகும். "என்னானமே என்று கன்மத்தாற் சாதிக்கப்பட்ட வுலகம் நாசமாமோ னனமே என்று புண்ணியத்தாற் சாதிக்கப்பட்ட அப்பாலோகம் நாசமோ இங்ஙனமே புண்ணியத்தாற் சாதிக்கப்பட்ட அப்பாலோகம் நாச

மாகின்றது" என்னுஞ் சுருதியானும் ; யாது பாவ வடிவ காரிய மோ அது அநித்தியம் கடம்போன்று என்னு மனுமானத்தாலும் காரியமான சுவர்க்காதி பலனில னத்தித்தன்மை யறியப்படுகின் றது. ஆகையா லமிர்த்தத் தன்மை நிரியையாற் சாதிக்கப்படின் அது அவசிய மழியுமெனப் பொருள். (101)

(அ-னை க)—ஆகேகூபம் யாகசாத்திய சுவர்க்காதி போன்ற வ்வுபாசனையின் பலமுண்டாவதின்று ஆதல் ஜீவப் பிரஹ்மங் களின் சம்போகமென்னும் பலமுண்டாகின்றது என்று சங்கித் துக் கூறுகின்றார்.

ஒத்திலத் தரும மேய வுயிருக்குஞ் சிவன்ற னக்குஞ்
சத்துபா சனையிலை லே சம்பந்தம் பவித்தி டாதாஞ்
சித்திரு வருக்கும் யோகஞ் செப்புத றகுமே யென்னி
னித்தனை யியாகத் தோடு நீள்பக னின்றிடாதே. (102)

(ப-னை)—ஒத்திலத் தருமமேய - விருத்த தருமமுடைய, உயிருக்குஞ் சிவன் றனக்கும் - ஜீவனுக்கும் பிரஹமத்திற்கும், சத்து பாசனையிலேல சம்பந்தம் பவித்திடாதாம் - பிரஹ்மோ பாசனையாற் சம்பந்த முண்டாகாது, சித்திருவருக்கும் - சைதன் யமான ஜீவேசுவரர்களுக்கு, யோகஞ் செப்புல் தகுமே வன்னில்- உபாசனையா லுண்டாஞ் சம்பந்தஞ் சொல்லத்தக்கதெனின், இத தனை யோகதோடு - இங்ஙன மாயசம்பந்தத்தோடு கூடியதாகச் சிவன், நீள் பகல் நின்றிடாது - நெடுங்காலம் நில்லான்.

(ப-ம்)—சம்சாரித் தன்மை அசம்சாரித் தன்மை என்னும் விருத்த தருமமுடைய ஜீவப் பிரஹ்மங்களுக்கு பிரஹ்மோபாசனை கன்மத்தால் சம்பந்தமேலாது. அல்லதுண்டாயின் அநித்தி வின்றி சிரகால நில்லா. "சம்யோகம் பிரிவை முடிவாக வுடை யது" என்னு நியாயத்தால் உபாசனை பரத்துவ பகுதத்தில் சாத பின்றிய பலனின்றென்பது பொருள். (102)

(அ-னை க)—மோகூபம் நான்குவித கர்ம பலத்திலும் விலக்ஷணமாதலின் உபாசனைகர்மம் மோகூ சாதனமாகாதெனக் கூறு கின்றார்.

பலம தித்தகை சத்துபா சனையிறற் பவிக்கு
நலபு ருடனுக் கிதையொழித் தன்னிய நறைகா
தலைகு றைவற வதுவம லருக்கயி மதாந்த
னிலையெ லையிலாத் றுகளுக ளிலங்கக்கண் டிடலால். (103)

(ப-ரை)—சத்து பாசனையிறல் - பிரற்றோபாசனையிறல், இத்தகை பலமது - இங்ஙனமனத்திய டலமே, பவிக்கும் - உண் டாகும், நலபுருடனுக்கு - உபாசகனுக்கு, இதை யொழித்து - இவ்வனித்ய பலனை மின்றி, அன்னியம் - நறைகாதை, நித்திய மானவேறு பலமின்று - எலையிலாத்துகளை களிலங்கக் கண்டிட டலால் - அப்பலத்தி லளவற்ற தோடங்காணப்படுகின்றமையின் அலை குறைவு அற அது - அது போக்குவரவாகிய குறைவு நீங் கியதாக, அமலருக்கு அபிமதந்தானிலை - புண்ணியவான்களா கிய பெரியோர்களுக்கு அபிமானிக்கப்பட்டதன்று.

(ப-ம்)—பிரற்றோபாசனைகர்மத்தால் உபாசகனை புருட னுக்கு இம்மதிவ்வாறுயதாகவே யுண்டாகின்றது. இதனி னும் வேறு நித்தியமாயுண்டாகாது. எவ்வெப்பலங் கற்பிக்கப்படுகின் றதோ அவ்வப்பலந்தோட மற்றதாக வித்துவான்களின் அபிமத விடய மன்று. ஏனெனின் சாதான சாத்திய சகலமும் அநித் தியத்தன்மை ஜடத்தன்மை, துக்கத்தன்மை முதலிய தோடக் குழியோடமைந்து கிடக்கக்காண்டலி னென்பது பொருள்.

(அ-கை)—இங்ஙனந்தத்துவ மசிவாக்கியம் உபாசனாவிதி பா மாயின் கற்பல மின்மையின் அவ்வுபாசன விதிபாமன்றென மிவ் வனவாற் கூறப்பட்டது. இனி, பொருத்தமானது யாது என்னு மபேக்ஷையில் அவ்வாக்கியம் வஸ்துவின் யதார்த்த வடிவத்தைக் கூறி அதனஞ்ஞானத்தை நீக்கி மோக்ஷசாதனமே யெனச் சித் தாந்தி கூறுகின்றார்.

அவ்வுரை யதனி னுனை சத்துபா சனைய தான
செவ்விய தொழிலெச் செப்பும் விதிபாந் தெரிந்திடாதா
மிவ்வுட னுரு மென்று மெமதிதன் றுரை மென்னினின்ற
வெவ்வமி வேக மான மதியினை விலக்குந் தானே. (104)

(ப-ரை)—அதனினுன் - ஆகையினுல், அவ்வுரை - அத்தத் துவ விவேசுவாக்கியம், சத்துபாசனையதான - பிரஹ்மோபாசனை யாகிய, செவ்விய தொழிலைச் செப்பும் விதிபாஞ் செறிந்திடா தாம் - செம்மையான கருமத்தைக்கூறும் விதியுடையதாகப் பொருந்தாதாம், (மற்றே இவ்வுடல் நாணும் என்றும் - இவ் வுடம்பு நாளை விருக்கின்றே னென்றும், எமதென்றும் - தாரு புத்திராதிகளை என்னுடைய தென்றும், வண்ண நின்ற - கருது கின்ற, வெவ்வவிவேகமான மதியினை - கொடிய அவிவேக புத் தியை, விலக்கும் - ஒழிப்பதாம்.

(ப-மீ)—தத்துவ மசிவாக்கியம் உபாசனைபரத்துவ முடைய தாயின் அதற்குத்தோட மற்ற பலமின்று. ஆகவின் பிரஹ்மத் தின் உபாதனை கர்மவிதிபரமானதன்று. மற்றெப் பரத்துவ முடையதெனின் இவ்வுடனுன் மனிதன் நான் பிராஹ்மணன் நான் க்ஷத்திரியன் நான் விரதி நான் சண்ணியாசி நான் என்று சரீராதிகளில் இருக்கின்ற அகம்புத்தியையும் என்னுடைய தென் னும்புத்தியையும் நீக்குகின்றது. அனென்மாவை விவேகித்து ஆன்ம ஞானத்தை யுண்டாக்குகின்ற தென்பது பொருள்: (104)

(அ-கை)—இங்ஙன மிதுவாறுந தத்துவ மசிவாக்கியத்திற்கு அகண்டை காரசுஸ்து பாத்தன்மை புகலப்பட்டது. இனிச் சர்வ சாஸ்திரங்கள் சர்வ வுபநிஷதங்கள் ஆகிய இனவகளிலுள்ள சர்வ மகா வாக்கியங்களையும் இங்ஙனமே பொருத்தவேண்டு மெனக் கூறுகின்றர்.

சிவனைச் சிவனைச் செப்பிடும் பதங்கள் செறிந்திடு மேகவேற் றுமையான், மேவிய சகல வுபநிடங் களினுமினி ருப தேசமா மொழிக, ளாவதிற் புகன்ற நெறிகொடே யறிஞ ணளவினல் லுத்திகளோடும, மோவஸில்லிய மான மதேதாடு முற்றுணர்ந் தடைந்திடலுரித்தே. (105)

(ப-ரை)—சிவனைச் சிவனைச் செப்பிடும் பதங்கள் - சிவை வார்கனைப் பிரதிபாதிக்கு பதங்கள், செறிந்திடும் ஏகவேற்றுமை

யால் - சமான வேற்றுமையை யுடையனவாக, மேவிய சகல வுப
நிடதங்களினும் - பொருந்திய எவ்லாவுப நிஷதங்களில், மினிரூப
தேசமா மொழிகளாவதில் - வினங்கா நின்ற உபதேச மொழி
களே, புகன்ற நெறிகொடே - தத்துவ மசிவாக்கியத்திற்குப்
பொருள் கூறிய வண்ணமே, அறிஞன் - நல்ல விவேகியானவன்,
அனவில் நல் உத்திகளோடும் - அநேக யுக்தியோடும், ஓவலில்
தியமான மதோடு - ஒழிதலின்றிய வரிய பிரமாணத்தோடும்,
மூற்றுணர்ந்து அடைந்திடலுரித்து - முழுவதும் நன்குணர்ந்து
பொருள் கொளலுதல் உரிமையாகும்.

(ப-மீ)—சிவவாசக பதத்திற்குப் பிரஹ்மவாசக பதத்தோடு
சமான வேற்றுமையையுடையனவாக எல்லா வுபநிடதங்களிலு
முள்ள உபதேச வாக்கியங்களாகிய எம்மகா வாக்கியங்கள் ஏகத்
துவப் பிரதி பாதகங்களாகவுள்ளனவோ அவைகளையும் உபநிட
தங்களின் சக்திதாத் பரியமுணர்ந்தோன் எங்ஙனந் தத்துவமசி
வாகியம் குணவாதம் துதிவாதம் விபரீதபோகத்தன்மை உபா
சனாபாத்துவத்தன்மை என்பன முதலியவற்றைப் போதிப்பதன்
றென்றும் சிவபரங்களின் ஏகத்தன்மையைப் போதிப்பதென்
றுந் சாதிக்க பட்டதோ அங்ஙனமே சாதிக்கவேண்டும் எனப்
பொருள். (105)

(அ-கை)—சம்ப்ரதாய மறிந்த ஸ்ரீசங்கர பகவத் பூஜ்ய
பாதர சார்யரவர்களாலுங் கூறப்பட்ட வசன மீண்டுப் பிரமாண
மெனக் கூறுகின்றார்.

வெருவில் வேடனு லளித்திடு மிறைசிரு விலுக்குத்தன்
னுதயாதி, தெரிவ தானவன் றிகழ்மொழி யெனுமித்திட்
டோந்தமா மதனுலே, திரவி டாரியப் பெருமனுந் தத்துவ
மசியெனுந் திருவேத, மிருமஞ் ஞானத்தை யொழித்திட
லொருதலை யெனமலர்ந் தளனுமால். (106)

(ப-னை)—வெருவில் வேடனுலளித்திடும் - பிதியற்ற வேட
னுகிய வசனஞ்சாரனுல் வளர்க்கப்பட்ட, இறை சிருவிலுக்கு -

இராஜபுத்திரனுக்கு, தன்னுதயாதி தெரிவதானவன் - தனது உற்பத்தியாகிய இராஜத் தன்மையைத் தெரிந்தனனது, திகழ் மொழி எனுந்திட்டாந்தமதனால் விளங்குகின்ற வாக்கியத்தின் திட்டாந்தத்தினால், திரவிடாரியப் பெருமனும் - திரசுவிட சார் யாளான ஸ்ரீசங்கர பூஜ்ஜிய பகவற் பாதாசார்யாளும், தத்துவ மசியெனுந் திருவேதம்- தத்துவ மசி என்னும் அழகிய மகாவாக் கியமான வேதமும், இரும் - பெரிய, அஞ்ஞானதனை யொழித் திடல் - தனது வடிவத்தை மறைக்கு மஞ்ஞானத்தை அழித்தல், ஒரு தலை எனை மலர்ந்துளனும் - நிச்சயமெனக் கூறியிருக்கின் ரூர்கள்.

(ப-ம்)—ஸ்ரீசங்கர பூஜ்ஜிய பகற்பாதாசார்யாளும் உப தேச சஹஸ்ரியில் ''சுருதி வத்துவ மசியெனக் கூறினதை கேட் போன் மோக நீக்கப்பொருட்டு'' என்னுமித முதலிய வற்றால் தத்துவ மசி என்ற வாக்குயம் அஞ்ஞான நாசகாரணமாகக் கூறி ரூர்கள். ஆண்டெடுத்திருட்டாந்தத்தானெனின் யாதோவோர் காரணத்தால் வனமடைந்து வேடரால் வளர்க்கப்பட்ட இராஜ புத்திரனது ஜன்மத்திரண்மை யுணர்ந்தோனது வாக்கியத்தைத் திருஷ்டாந்தமாக்குதலிரல் இதனன் தத்துவமசிவாக்கியம் அஞ் ஞான நாசத்திற்கேதுவெனக் கூறப்பட்டதெனப்பொருள். 106

(அ-கை)—இங்ஙனந்தத்துவ மசி வாக்கிய மஞ்ஞான வழி விற் கேதுவாகலின் நீதேக முதலியவற்றில் நானென தென்னு மபிமானத்தை விட்டு அகண்ட வாக்கியார்த்த ஞானத்திற் கனு கூலமாக விருப்பாயாக வெனச் சீடனைக் குரு சிக்ஷிக்கின்ரூர்.

யாதிரு விவண மதனிரு லுனது யாக்கையில் யானென வுள்தா, மேதமே மிகுந்த விருளவி வேக மென்னுமித் துன் மத்தி விடுத்தீத, யாதுதான் பரம வக்கர மாகி யாண்மமத் துவிதமா யிலகுந், தீதி லாக்குமர வதைதின துருவாய்த் திகழுளத் தினிற்றெளிந் திடுநீ. (107)

(ப-ரை)—யாதிரு விவணம் - எதனிலிங்வன் தத்துவ மசி வாக்கியம் அஞ்ஞான வழிவிற்குக் காரணமோ, அதனிரல் - அவ் வேதுவால், உனது ஆக்கையில்- உன் சரீரத்தில், யான் என வுன

தாம் - தானென்றிருக்கின்ற, எதமே மிகுந்த - குற்றமலிந்த, இருள விவேக மென்னும் - அஞ்ஞான சொரூப அவிவேகமாகிய, இத்துன்மதி விடுத்து - இக்கெட்ட புத்தியைவுட்டு, யாது எவ் வத்துவானது, பரம வக்காமாகி - மேலானதாயும் அழிவற்ற தாயும், யாண்டும் அத்துவிதமாகி - எவ்விடத்து மென்றான தாயும், இலகும்-விளங்குகின்றதோ, நீதிலாக்குமார - ராதிதோட மற்றமைந்தனே! நீ, அதை - அப்பாவஸ்துவை, நினதுருவாய்- சச்சிதானந்தமாய் அவஸ்தாத்திராய சாக்ஷியாய் தூரியமாய்இருக்கு மூனது|அன்மவடிவாக, திகழுளத்தினிதில் - விளங்குமந்தக்கரணத் தில், தெளிந்திடு - நிச்சயித்தறிவாயாக.

(ப-ம்)—வாக்கியம் அஞ்ஞானத்தைக் கெடுக்கவே தவாத வின் தனது சரீரத்துள்ளதாய் மிகத்நிடமானதாய் இருக்கும் அநாதிசித்தமாய் யாவனென்ன தென்னும் அவிவே புத்தியை நீக்கி லுஜாதி விஜாதி சுவகத பேதமற்றதாய் அழிவற்றதாய் யாதொரு பிரஹ்மமிருக்கின்றதோ அதனை உன் சொரூபமாக வறிவாயாக வென்பது பொருள். (170)

(அ-கை)—அவ்வாக்கூரத்தை நீ ஆன்மாவாக வறியெனப் பிரத் தியக் பிரஹ்மங்களுக்கு யோகத்தன்மை சொல்லப்பட்டது. அது சிதநியாகும் பொருட்டுத் தத்துவம் பதார்த்தங்களை முதலில் ஆறு செய்யுட்களாற் பரிசோதனஞ் செய்கின்றார். ஆண்டு முத லிரண்டு செய்யுட்களால் தத்பதார்த்த பரிசோதனை செய்கின் றார். ஆண்டுமுதற் செய்யுளால் தத் பத லக்ஷிய பிரஹ்மம் மன மூலியவற்றின் விலக்ஷணத்தன்மையுடையதனைக் கூறுகின்றார் இரண்டாவது செய்யுளால் மனமுதலியவற்றோடு சம்பந்தமின் மையதனைக் காட்டுகின்று ரென்பது விபாகமாம்.

மனம தியொடு காரணங்கண் மருட்டம லலவா
மனிய சத்துவ மன்றிரா சதமன்று மகியும்
புனலும் வன்னியு மன்றலி புன்சடீ ரணையுங்
கனமு மன்றுமெய்ப் பரமந்ற் பதங்களு நிடினை. (108)

(ப-ரை)——மனம் அன்று, மதியொடு காரணங்கள் அன்று - புத்தியோடுங் கூடின ஞானேந்திரிய கருமேந்திரியங்களான காரணங்களுமன்று, மருட்டமமலவாம் - மயக்கமான தமோ குணமும் மன்றும், அனேியசத்துவமன்று - அன்னியமான குணமுமன்றும், இராசதமன்று - இராஜோ குணமுமன்று, மகியும் - பூமியுமன்று, புனலுமன்று, வன்னியுமன்று, அலைபுன் சமீரணனும் - சஞ்சல முடைய விழிந்த காற்றும் அன்று கனமுமன்று - ஆகாயமுமன்று, கருதிடின், மெய்ப்பரமற்பதம் - சற்றியமான பரமபதம். பரம பத மன்றனைச் சம்பந்தம்.

மனப்ப கையொடு மதிபொறி மற்றிரா சதத்தின்
றனிப்பெ ருந்தமந் சத்துவ மகிசலந் தழலின்
பனிப்பு றும்டவ மானனம் பரத்தின்பற் றிலதாங்
கனப்ப ரமவக் காமுன துருவெனக் கருதே, (109)

(ப-ரை)——கனப்பரமவக்காம் - ஏகமாய் மேலாம் யிருக்கும் நாசமற்ற பரமான்மாவானது, மனப்பகையொடு - விரோதமான மனதோடு, மதி - புத்தி, பொறி - பத்து இந்திரியங்கள், மற்று- மேலும், இராசதத்தின் - இராஜோகுணம், தனிப்பெருந்தமம்-ஒப் பற்ற பெரியதமோகுணம், சத்துவம்-சத்துவகுணம், மகி-பிருதிவி சலம்-தண்ணீர், தழலின்-அக்கினி, பனிப்புறுபவமானன் நடுக்க முடைக்காற்று, அம்பரத்தின் - ஆகாயம் ஆகிய இவைகளின், பற்றிலதாம் — சம்பந்த மற்றதாம், உனதுருவெனக்கருதே - இங் ஙன மாயபரமான்மாவை அவஸ்தாத்திரய சான்றாய வுனது ஆன் மவடிவாயறிவாயாக.

(ப-ம்)——பிரதிபாதித்தவிரண்டு செய்யுட்களின பிப்பிராயம் மனமுதலியவை ஆன்மாவன்று. எனனின் திருசிய மாதலின் காரணமாதலின் காரியமாதலின் வேறு பிரிக்கப்பட்டனவாதலின் பரிச்சின்னமாதலின் ஆதியந்தமுடைமையின் என்னு மிவ்வேதுக் களாலாம். இங்ஙன மனமுதலியனவுனன் மாவாகுங்கால் அதன் சான்றான ஆன்மா நிரவயமாயும் அசங்கவியல்பான் அகங்காரம மகாரமற்றதாயும் நித்தியமாயும் சுத்தமாயும் புத்தமாயும் முக்த

அரியவேதப் பிரதிபாத்திய பரமான்மாவை, அறிஅறிஞர் - ஆன்மாவாக வறிந்த தூயஞானிகள், மலருவர் - கூரறிற்பர்.

(ப-ம்)—அந்தக்காணமாய புத்தி விகதயாகாரமாக வினங்கா மலிருக்குந் திதியினை ஆரோபிதமனத்து மழியுந்தன்மையாத லின் பார்க்கப்பட்ட கேட்கப்பட்ட விடயங்களினின்றும் ஆசை யற்றவர்களும் "சத்தியக்ஞானனந்தம் பிரஹ்மம்" என்பது முத லிய சுருதிப் பிரதிபாத்திய சதசிய வடிவப் பிரஹ்மத்தை ஆன்ம சொரூபமாக வுணர்ந்தவர்களும் ஆன ஞானிகள் சுழுத்தியெனச் சொல்லப்படுகின்றார்கள். புத்தி தனது காரணவஞ்ஞானத்தில் உபாதி யையடைவதே சுழுத்தி யென்பது பொருள். (112)

(அ-கை)—இங்ஙன மவத்தாத்திரயங்களைக் காண்பித்து இனியவற்றின் சான்றான சிதான்மாவை அனையற்றதாகக் காண் பிக்கின்றார்.

இவண நன்முறை முறையின்றி யியைந்திடு நனவு
மவமு றுங்கன வுறக்கமு மலமதி யதற்கா
மிவணெ ருபொழு திணுமும்மை யவத்தைக ளெமக்கின்
றுவமை யின்றிய தூரியரு யுளனென வுணரே. (113)

(ப-ரை)—இவணம் - இம்மாதிரி, நன்முறை - நல்ல கிரத்மாகவும், முறையின்றி - அக்கிரமமாகவும், இயைந்திடும் - வந்து பொருந்து வனவான, நனவும் - சாக்கிரமும், அவமுறும் கனவு உறக்கமும் - வீணையுண்டாங்கனவும் சுழுத்தியும் ஆகிய இவ்வவ் வத்தைகளும், அலமதியதற்காம்-சஞ்சலமான புத்திக்காம், (ஆகவின்) - இவண் ஈண்டு, ஒரு பொழுதிணும் - ஓர் காலத்திலும், மும்மை அவத்தைகள் - மூன்றவத்தைகளும், எமக்கு இன்று - எனக்கு இன்றும், (நான்) உவமையின்றிய தூரியருயுளன் - சமானமற்ற தூரியரூகவிருக்கின்றேனன், எனவுணர் - என்று அறிவாயாக.

(ப-ம்)—இங்ஙனங் கிரமமாகவும் அக்கிரமாகவும் சென்றதும் வருவதும் இருப்பதுமான அவஸ்தாத்திரயம் புத்தியின் தருமமேயாம். அதன் சான்றாய்ச் சிதான்மவஷ்டிவான எனக்கு அவ்வவத்

காத்திரயம் ஒரு போது மின்றென வறிவாயாக. மற்றும் என் றுந் தேகேந்திரியமனதிகளின் வியாபாரங்களினும் உபரமங்களி னும் சுயம்பிரகாசமாய்ப் பரமானந்தமாய், சித்தனமாய், அவத் காத்திரய வதீதமாயிருக்கும் பதத்தை நாலுகவிருக்கின்றேனென வறிவாயாக. "ஜாக்கிரத்ஸ்வப்பன சுழுத்திகளும் அவற்றின் றரி சனமும் எனக்கதிபமுமின்று. தனது போலீண்டுமோகம். அவை கள் சுதந்திரமாகவும் பரதந்திரமாகவும் அசத்தியங்களாதலின். என்றுந்திருக்காகவும், தூரியமாகவும், அத்வைதமாகவும் இருக் கின்றேன்" எனவது ஆசார்யர்களாலும் கூறப்பட்டதெனப் பொருள்.

(அ-கை)—இங்ஙனமான்மாவிற்குத் தூரிய மென்னுஞ் சதுர் மதமாகிய பெயர் உண்மையாக வங்கீகரிக்கப்படுமேல் அதை லும் ஆன்மா நிர் விசேஷ மென்பதெங்ஙனமென வாசங்கித்து அது மித்தை யென்பதற்கு அவஸ்தாத்திரயத்தை யபேக்ஷித்து ஆன்மாவிற்குத் தூரியத்தன்மை எனக் கூறுகின்றார்.

மூட புந்திய றற்றனி னனவதே மூதலாக்
கூடு மும்மையுங் கற்பிக்கு மதுதனைக் குறித்தே
பாடு நற்பர மான்மமெய்ப் பதமது தனக்கும்
பீடு றுந்தூரி யம்மெனப் பெயரிதென் றுணரே. (114)

(ப-னை)—மூடபுந்தியறல்- அவிவேகியால், தனில் - ஆன் மாவில், நனவதே மூதலாகக்கூடும் - சாக்கிர மூதலாகப் பொருந் திய, மும்மையுங் கற்பிக்கும் - மூன்றவத்தைகளுங் கற்பிக்கப்படு வன, அது தனைக்குறித்தே - அவ்வவஸ்தாத்திரயத்தைக் குறித்து, பாடு நற்பரமான்ம மெய்ப்பதமது தனக்கும் - புகலப்படுவதான சத்தியபரமான்மாவிற்கும், பீடுறும் : பெருமை பொருந்திய, தூரி யம் எனப்பெயர் - தூரிய மென்னு நாமம், இது என்று உணரே- இங்ஙனமாயென வுணர்வாயாக.

(ப-ம்)—விசேஷமின்மையலல் பிரத்திய கான்மாவில் ஜாக் கிராதியவத்தை கற்பிக்கப்பட்டது. அதை யபேக்ஷித்துப் பர மான்மாத் தூரியமெனப் படுகின்றது. அதனற்றாரிய சத்தவாச்

அரியவேதப் பிரதிபாதித்திய பரமான்மாவை, அறிஅறிஞர் - ஆன்மாவாக வறிந்த தூயஞானிகள், மலருவர் - கூருகிற்பர்.

(ப-ம்)—அந்தக்காணமாய புத்தி விஷயாகாரமாக விளங்காமலிருக்குந் திதியினை ஆரோபிதமனத்து மழியுந்தன்மையாதலின் பார்க்கப்பட்ட கேட்கப்பட்ட விடயங்களினின்றும் ஆசையற்றவர்களும் "சத்தியக்ஞானானந்தம் பிரஹ்மம்" என்பது முதலிய சுருதிப் பிரதிபாதித்திய சதசிய வடிவப் பிரஹ்மத்தை ஆன்மசொரூபமாக வுணர்ந்தவர்களும் ஆன ஞானிகள் சூழ்த்தியெனக் கூறுகின்றார்கள். புத்தி தனது காரணவஞ்ஞானத்தில் உபாதியையடைவதே சூழ்த்தியென்பது பொருள். (112)

(அ-கை)—இங்ஙன மவத்தாத்திரயங்களைக் காண்பித்து இனியவற்றின் சான்றான சிதான்மாவை அனுபவற்றகாகக் காண்பிக்கின்றார்.

இவண நன்முறை முறையின்றி யியைந்திடு நனவு
மவமு றுங்கன வுறக்கமு மலமதி யதற்கா
மிவனெ ருபொழு திணுமும்மை யவத்தைக ளெமக்கின்
றுவமை யின்றிய தூரியரு யுளனென வுணரே. (113)

(ப-மை)—இவணம் - இம்மாதிரி, நன்முறை - நல்ல கிரத்மாகவும், முறையின்றி - அக்கிரமமாகவும், இயைந்திடும் - வந்து பொருந்து வனவான, நனவும் - சாக்கிரமும், அவமுறும் கனவு உறக்கமும் - வீணுயுண்டாங்கனவும் சூழ்த்தியும் ஆகிய இவ்வவ்த்தைகளும், அலமதியதற்காம்-சஞ்சலமான புத்திக்காம், (ஆகவின்) - இவண் எண்டு, ஒரு பொழுதினும் - ஓர் காலத்திலும், மும்மை அவத்தைகள் - மூன்றவத்தைகளும், எமக்கு இன்று - எனக்கு இன்றும், (நான்) உவமையின்றிய தூரியருயுளன் - சமானமற்ற தூரியருகவிருக்கின்றேறன், எனவுணர் - என்று அறிவாயாக.

(ப-ம்)—இங்ஙனங் கிரமமாகவும் அக்கிரமாகவும் சென்றதும் வருவதும் இருப்பதுமான அவஸ்தாத்திரயம் புத்தியின் தருமமேயாம். அதன் சான்றுய்ச் சிதான்மவஸ்துவான எனக்கு அவ்வவத்

காத்திரயம் ஒரு போது மின்றென வறிவாயாக. மற்றும் என்னுக் தேகேந்திரியமனதிகளின் வியாபாரங்களினும் உபரமங்களினும் சுயம்பிரகாசமாய்ப் பரமானந்தமாய், நித்தனமாய், அவத்காத்திரய வதீதமாயிருக்கும் பதத்தை நாலுகவிருக்கின்றேனென வறிவாயாக. "ஜாக்கிரத்ஸ்வப்பன சுழுத்திகளும் அவற்றின் றனை கனமும் எனக்கத்பமுமின்று. கனது போலீண்டுமோகம். அவைகள் சுதந்திரமாகவும் பரதந்திரமாகவும் அசத்தியங்களாதலின். என்றுந்திருக்காகவும், துரியமாகவும், அத்வைதமாகவும் இருக்கின்றேன்" எனவது ஆசார்யர்களாலுங் கூறப்பட்டதெனப் பொருள்.

(அ-ஈக)—இங்ஙனமான்மாவிற்குத் துரிய மென்னுஞ் சதுர்மதமாகிய பெயர் உண்மையாக வங்கீகரிக்கப்படுமேல் அதனலும் ஆன்மா நிர் விசேஷ மென்பதெங்ஙனமென வாசங்கித்து அது மித்தை யென்பதற்கு அவஸ்தாத்திரயத்தை யபேக்ஷித்து ஆன்மாவிற்குத் துரியத்தன்மை எனக்கூறுகின்றார்.

மூட புந்திய றற்றனி னனவதே தூதலாக்
கூடி மும்மையுங் கற்பிக்கு மதுதனைக் குறித்தே
பாடு நற்பர மான்மமெய்ப் பதமது தனக்கும்
பீடு றுந்துரி யம்மெனப் பெயரிதன் றுணரே. (14)

(ப-ஈ)—மூடபுந்தியறல்- அவிவேகியால், தனில் - ஆன்மாவில், நனவதே தூதலாகக்கூடும் - சாக்கிர தூதலாகப் பொருந்திய, மும்மையுங் கற்பிக்கும் - மூன்றவத்தைகளுங் கற்பிக்கப்படுவன, அது தனைக்குறித்தே - அவ்வவஸ்தாத்திரயத்தைக் குறித்து, பாடு நற்பரமான்ம மெய்ப்பதமது தனக்கும் - புகலப்படுவதான சத்தியபரமான்மாவிற்கும், பீடுறும் : பெருமை பொருந்திய, துரியம் எனப்பெயர் - துரிய மென்னு நாமம், இது என்று உணரே- இங்ஙனமாயென வுணர்வாயாக.

(ப-ம்)—விசேஷமின்மையறல் பிரத்திய கான்மாவில் ஜாக்கிராதியவத்தை கற்பிக்கப்பட்டது. அதை யபேக்ஷித்துப் பரமான்மாத் துரியமெனப் படுகின்றது. அதனுக்குரிய சத்தவாச்

சியமானது உண்மையான அவஸ்தாந்தரமன்று. கொள்ளுதல் தள்ளுதல்களுக்கு அவிஷயமும் சுயம்பிரகாச பரமானந்த சிக்கனமும் ஆனபரமாத் மதத்துவம் தூய சதத்தாற் கூறப்படுகின்றது. வேதாரவஸ்தை யன்றுதலினும் ஆன்மா நிர்விசேஷமாகச் சித்திக்கின்ற தென்பது பொருள்.

(அ-கை)—ஆகோபம் அவஸ்தாத்திரயத்தை யபேகூதித்துத் தூரியமூளதேதனும் அதுசத்தியமாகுகவெனவா கோடித்து அவஸ்தாத்திரயம் மாயாமயமாதலின் அதை யபேகூதித்துண்டானது ரிய மூமத்தண்மையதாகு மென்னு மபிப்பிராயத்தாற் கூறுகின்றார்.

துதிபி ரமத்தின் பதத்திற்குத் தூரியம தெனவே
யெதுகு றித்தபி தானம திதுபவித் திடுகு
மதுவ சத்திய மசத்திய வதன்குண மதனன்
மதினி ருமித மதகரி மயற்செயன் மானும். (115)

(ப-வர)—துதிபிரமத்தின் பதத்திற்கு - துதிக்கத்தக்க பிரம்ம பதத்திற்கு, தூரியம தெனவே - தூரிய மென்று, எது குறித்து அபிதானமது இதுபவித்திடுகும்-எந்த அவஸ்தாத்திரயத்தை யபேகூதித்து இப்பெயரானது வண்டாகுமோ, அது அசத்தியம்-அப்பெயர் மித்தை, அசத்திய வதன் குணமதனல்-மித்தையாகிய மனதின் குணமாதலின், (எங்ஙனமெனின்) மதினிருமித - புத்தியாற் கற்பிக்கப்பட்ட, மதகரி - மதத்த யானையினிடத்தில் கானப்படும், மயல் செயல்மானும் - மயக்கத்தாலுண்டான சேஷ்டைக்கு வொப்பாகும்.

(ப-மீ)—எவ்வவத் தாத்திரயத்தை யபேகூதித்துப் பரமான்மாவிற்குத் தூரியம் என்னும் பெயருண்டாயிற்றோ அவ்வவத் தாத்திரயம் மித்தை. எனெனின் அசத்திய மனதின் குணமாதலினாலும். அஃதெங்ஙனங் கூணப்பட்டதெனின் மதத்த யானைகன் நிறைந்த வனப் பிரதேசத்திற் சஞ்சரிக்கும் யானைக்குப் பயமுடைய ஒருவனால் யானையின் வடிவொத்த வோர் கல்லில் ஆரோபிக்கப்பட்ட யானையும் அதனது கபோலமதநீரும்

அதன் கிரியையும் எங்ஙன மசத்தியமோ அங்ஙனம் மாயா மய மான மனதின் குணமானதால் அவஸ்தாத்திரயம் மித்தை. அங் ஙனமே அனைத யுபகூதிக்கப்பட்ட தூரியத் தன்மையும் பரமான் மாவிற் கன்னியமாக வுண்மையி லின்றென்பது பொருள். (115)

(அ-ஸ)—அசத்தியமான மனதின் தருமமாதலின் சாக்கி ராதி மூன்றும் மித்தையெனக் கூறப்பட்டது. இனி அதைச் சாதிக்க மன முதலிய வுலகை மித்தையெனப் புகல்கின்றார்.

விடய மிந்தியம் புந்தியும் விரைமன மதனே
டடை கனைம தாதிமண் ணந்தம தாய்த்தோன்
றிடஇ டைடுச்ச மிதுவசத் தியமென மறைக
டடைய றவுப மானநற் சதங்களாற் சாற்றும். (116)

(ப-ஈ)—விடயம் - விடயமும், இந்தியம் - இந்திரியங்க ளும், புந்தியும் - புத்தியும், விரை மனமதனே - சர்வத்திற்கும் பீஜமான மனதோடு, அடைக கனமதாதி - எங்கு நிறைந்த ஆகாய முதல், மண்ணைந் தமதாய் - பிருதிவி முடிவானதாயும், தோன்றிட இடைச்சகமிது-உற்பத்தியுடைய இவ்வுலகை, அசத் தியமென மறைகள் - மித்தையென வேதங்கள், தடையற - யா தொரு பிரதிபந்தமுமின்றி, உபமான நற்சதங்களால் - நல்ல தூறு உபமானங்களால், சாற்றும் - பிரதி பாதியா நிற்கும்.

(ப-ம்)—ஆகாய முதல் பிருதிவி யந்தமான விஷயேந்திரிய புத்தி மன முதலிய சர்வ வுலகஜாலமும் அசத்தியமெனச் சுருதி கள் அநேக வுபமானங்களாற் கூறுகின்றன. மன முதலிய வுல குற்பத்தி யுடைமையின் மித்தை யெனக் கூறுகின்றன வெனப் பொருள். (116)

(அ-ஸ)—ஆண்டு திருஷ்டாந்தங் காண்பிக்க வுபோற்கா தஞ் செய்கின்றார் அதாவது பிரதி பாதிக்கும் பொருளை மனதில் வைத்துக்கொண்டு முன்னமே அதன்பொருட்டு வேறு பொரு ளைக் கூறுவது உபோற்காதமாம். அதனை ஆசிரயித்து மன முத லிய வுலகிற் கனித்தியத்தன்மை கூறப்படுகின்றது.

தீத திவ்வுட றனெயெந்த வணைந்தினைந் தினைமும்
வாத பித்தசி லேடுமை தாதுவே வகிக்கு
மோது மூற்பன மூதலொழி பவதியவ் வணைந்தா
னீது லகினை யெரியிர வியுமிந்தும் வகிக்கும். (117)

(ப-ரை)—தீதது இவ்வுடல்தனை - குற்றமுடை இச்சரீரத்
தினை, எந்தவணம் - எங்ஙனம், தினைந் தினைமும் - எப்போதும்,
வாதபித்த சிலேட்டுமை தாதுவே வகிக்கும்-வாதபித்த சிலேட்டுமை
மென்னும் மூன்று தாதுக்களே நிலைபெறச் செய்கின்றதோ,
ஓதும் உற்பனமூதல் - சொல்லாநின்ற சிருஷ்டி முதல், ஒழிபு
அவதி - பிரளயத்தை முடிவாகவுடைய, ஈதுலகினை - இவ்வுலகை,
எரியிரவியுமிந்தும் - அக்கினி சூரியன் சந்திரன் என்னும் மூன்
றும், அவ்வணைந்தான் - அத்திருட்டாந்தம் போன்று, வகிக்கும்-
காககும்.

(ப-ம்)—இவ்விழிந்த வுடல் எங்ஙனம் வாதபித்த சிலேட்டுமை
மென்னு முத்தாதுச்களுஞ் சமமாயின்நிலை பெறுவதும் இன்றேல்
நிலை பெறுததாயு மிருத்தலின் அம்மூன்று தாதுக்களால் இருப்
புடையதாமோ அங்ஙனமே இவ்வுலகுஞ் சோம சூரியாக்கினி
யென்னு மூன்றனுள் யாதானு மொன்றின்றேல் குருடாதலிலு
னும் திதி யுண்டாகாமையானும் சோமசூரியாக்கினிகளாற் றரிக்
கப்படுகின்றதென்பது பொருள். (117

(அ-கை)—இவ்விழிந்த வுடலைத் தரிக்கும் மூன்று தாதுக்
ளைப் போன்று இவ்வுலகைத் தாங்கும் அக்கினியாதி மூன்று மச
திய மென்பதில் சுருதி திருஷ்டாந்தத்தைதாங் கூறியதென
கூறுகின்றார்.

இவணமிவ் விரவி வன்னி யிந்துவென் றுரைத்த மூன்று
பவசகத் திதியி னெதென் பதுபிர சித்தமாகு
முவமையின் மிருதி வேத முலகினல் வெளிய தீதது
சிவமறை யசத்த தென்னைச் செப்பிய தகுமை மன்னே.

(ப-ரை)—இவணம் - இங்ஙனம், இவ்விரவி வன்னி இந்.
வென்றுரைத்த மூன்றும்-இச்சூரியன் அக்னி சந்திரனென வுரை

கப்பட்ட மூன்றும், பவசகத் திதியி னேதென்பது - உற்பத்தி யுடைய உலக திதிகாரணமென்று கூறப்படுவது, உவமையில். சமானமற்ற, மிருதிவேத மூலகில் - ஸ்மிருதியிலும் வேதத்திலும் உலகத்திலும், நல்வெளியது பிரசித்தமாகும் - மிகவும் வெளிப் படையாகக் காணலாம், ஏது அதனை - காரணமான அச்சூரியன் முதலிய மூன்றையும், சிவமறை அசத்தென்ன - மங்கலவடிவ வேதம் மித்தையென்று, செப்பியது - கூறியது.

(ப-ம்)—கூறியவண்ணம் ரவி வன்னி சசி மூன்றும் உலக திதி காரணமென்று மிருதி வேதம் முதலியவற்றை யறிந்தோ ரிடம் வெளிப்படையாம் "இந்த அக்ஷரத்தின் ஆணையினனே வகார்க்கீ! சூரிய சந்திரர்கள் தாங்குகின்றவர்களாக நிறுத்தப்பட் டார்கள். நான் வைசுவான ராக்கினியாய்ப் பிராணிகளின் தேக த்தை ஆசிரயித்துப் பிராணபானனேனும் கூடி நான்குவித அந்தத் தைச் சீரணிப்பிக்கின்றேன். எந்த தேஜஸ் சூரியனை யடைந்து சர்வ லோகத்தையும் விளக்குகின்றதோ எவ்வொளி சந்திரனிட த்தில் எவ்வொளி அக்கினியில் அவ்வொளி என் சம்பந்தமென வறி. அக்கினியிற் பெய்யப்பட்ட ஆகுதி சன்ரு யாதித்தனை யடைகின்றது ஆதித்தனினின்றும் விருஷ்டி விருஷ்டியினின் றும் அன்னம் அதினின்றும் பிரஜைகள் உண்டாகின்றன" என் னும் வேதம ஸ்மிருதி ஆகிய இவைகளை அறிந்தோராற் கூறப் படும் உலக காரண சந்திர சூரியாக்கினிகளை சுருதி அசித்தமெ னக் கூறியதென்பது பொருள். (118)

(அ-கை)—எவ்வண்ணம் சுருதி அக்கினியாதி மூன்றையு மசத்தியமெனக் கூறினதென்னும் வேட்கையில் அச்சுருதியின் வாக்கியப் பிரகாரத்தைக் காண்பிக்கின்ரூர்.

எவ்வெழிற் சிவப்பு வெண்மை கருமையிவ் வுருவ மூன்றுந்
செவ்வழ லாதி தம்மிற் செகத்துள ரறிவர்தாமே
யவ்வித தைச சத்தோ டாப்பிய மன்ன மென்ன
மூவ்வகை யவையே நித்த மெனமறை மொழியுமாதோ.

(ப-ஈ)—எவ்வெழில் சிவப்பு வெண்மை கருமை - எந்த அழகிய செம்மை வெண்மை கருமை என, இவ்வுருவ மூன்றும்- இம்மூன் றுருவுமும், செவ்வழ லாதிதம்மில் செகத்துள ரறிவர்- செவ்விய அக்கினி சந்திரன் சூரியன் என்னு மிவைகளிடத்தில் உலகத்தோ ரறியா நிற்பர், அவ்வித-அங்ஙன மாய செம்மையாதி மூன்றும், தைசசத்தோடு ஆப்பியம் அன்னம் என்ன - தைசசம் (தேஜஸ் காரணம்) என்றும் (சந்திர காரணம்) ஆப்பியமென்றும் (சூரிய காரணம்) அன்னமென்றும் கூறப்படுவனவாம், மூவ்வகை யவையே நித்தம் என - அச்செம்மையாதி மூன்றுமே நித்தியங் கள் என்று, மறை மொழியும் - வேதங் கூறுகின்றது.

(ப-உ)—"யாது அக்கினியின் சிவப்பு ரூபம் அந்த ரூபம் தேஜசிற்கு, யாது சுக்கிலமோ அது ஆப்பியத்திற்கு, யாது கிருஷ்ணமோ அது அன்னத்திற்கு" என்று சாந்தோக்கிய சுருதி கூறுகின்றது. அக்கினி முதலியவற்றில் அனுகதமாக எச்சிவப்பு வெண்மை கருமை ரூபங்களை ஜனங்கள் அறிகின்றார்களோ; அவற்றில் யாது சிவப்புரூபமோ அது தேஜஸ் சம்பந்தி என்னும் தைஜஸமாம் அதாவது அக்கினிக்குக் காரணம் சிவப்பு ரூபமாம். அவற்றுள் யாது வெண்மை ரூபமோ அது அப்பு சம்பந்தி என்னும் ஆப்பியமாம்; ஈண்டு அப்பின் அபேதத்தால் அமிர்த கிரணமுடைய சந்திரன் வகுக்கப்படுகின்றான் இதனால் சந்திரனுக்குக் காரணம் வெண்மை ரூபமாம். அவற்றுள் யாது வினக்கமான கருமை வர்ணமோ அது, திவாகரன் என்ன காரணத்தின் அன்ன சத்தத்தால் வகுக்கப்படுகிறான் ஆகலின் அவனுக்குக் காரணமாம். என்று சுருதி கூறியவண்ணம் "கருமையோடுங் கூடிய செம்மையாலாவரிக்கப்பட்டோனாய்ச் சூரியனதிய தேவன் இரணியவடி வாதத்தைத் தூலலோகத்திலும் தேவலோகத் திலுந் தெளுத்திக்கொண்டு புவனங்களைப் பார்க்கின்றவனாய் அந்த ரதத்தாற் செல்லுகின்றான்" என்னுஞ் சுருதியால் திவா காரனுக்குக் கிருஷ்ண ரூபம் அறியப்படுகின்றது. இங்ஙனஞ் சந் திர சூரியாக்கினிகள் வெண்மை கருமை செம்மைகளின் காரி யங்களெனக் கூறிய சுருதியே வெண்மையாதிகள் சத்தியமெனக்

கூறியது. இதனுள் காரண வடிவ அருணாதி மூன்றுஞ் சத்தியம் அதன் காரியவடிவ வண்ணியாதி மூன்றும் அசத்தியம் எனச் சித்திக்கையில் இத்திருஷ்டாந்தத்தாற் காரியமான மன முதலிய வுலகு அனித்தியமெனவும் காரணவடிவப் பிரஹ்மஞ் சத்திய மெனவும் சாதிக்கக் கூடுமென்ப தபிப்பிராயம். (119)

(அ-ஸ) — இங்ஙனஞ் சுருதி எத்திருஷ்டாந்தத்தாற் காரண வருணாதிகள் சத்தியமெனவும் காரிய வண்ணியாதிகள் அசத்திய மெனவுங் கூறிற்றென்னும் அவா நிகழ அதற்குத் திருஷ்டாந்தத் தைக் கூறும்பொருட்டுக் கனகாதிகள் சத்தியமெனவும் ஆபரண திகள் அசத்தியமெனவுங் கூறுகின்றார் பின்னிரண்டு செய்யுட்க ளால், ஆண்டு முதற் செய்யுளால் ஆபரணதிகள் அசத்தியமெனக் காண்பிக்கின்றார்.

பொன்மய மாதி யான பூடண மாதி யெல்லா
நின்மல வணிமுன் ணமை நிமித்தமெ தெனினும் பொய்யாந்
தன்மைய தாக வென்றுந் தடையற வறியலாகு
மின்மணி யணிமுன் புந்தி யிவண்பிறந் திடுமெதாலே.

(ப-ஸ)—பொன்மய மாதியான - பொன்னின் வடிவமா கவே யிருப்பது முதலிய, பூடண மாதியெல்லாம்-கடககுண்டல ஆபரணதிகளெல்லாம், நின்மல வணிமுன்ணமை நிமித்தமெ தெனி ணும் - பரிசுத்தமான கடககுண்டல ஆபரணதிகளின் பெயருக் குக் காரணமாயினும், பொய்யாந் தன்மையதாக - மித்தையாத் தன்மையினையுடையனவாக, என்றுந் தடையற வறியலாகும்-எப் போதுஞ் சந்தேகமின்றி யறியத் தக்கனவாம், எதால் - ஏனெ னின், இவண் - எண்டு, இன்மணி யணிமுன் புந்தி - மகிழ்வு தரும் அழகிய கடககுண்டல ஆபரணதிகளின் புத்தி, பிறழ்ந் திடும் - பிறழ்ச்சியை யடைந்திடு மாதலினாலாம்.

(ப-ம்)—கனகாதி காரிய வாபரணதிகள் தமது நாம காரண மதேதனும் அவற்றின் ஞானம் பிறழ்வுடைமையின் அசத்தி யமா யறியப்படுகின்றன வென்பது பொருள். (120)

(அ-கை)—காரியமான வாபாணதிக ளசத்தியமெனக் கூறி இனிக் காரணமான கனகாதிகள் சத்தியமெனக் கூறுகின்றார்.

கனக முன்மதி யதுபுரு டனுக்கெந்தக் காலு
முனிற் பிறழ்ச்சிய தடையதிங் கலவுய ரதனற்
கனக முற்பொரு ளபிமதங் கருதுசத் தியமாய்
நினையி னைவதமில் விபர்யய மதுவிலை நீயே. (121)

(ப-னை)—கனகமுன்மதியது - பொன் முதலிய புத்தி, எந்தக் காலும் உளில் - கருதுமிடத்து எப்போதும், புருடனுக்கு - காரணவாராய்ச்சி செய்யும் புருடனுக்கு, பிறழ்ச்சியது உடையது இங்கு அல - ஈண்டுப் பிறழ்வை யடைவதன்று, உயர் அதனன் அபிமதம்-காரணமாக அங்கீகரிக்கப்பட்ட, கனகமுற்பொருள் - பொன்னாதி பொருள்களை, நீ சத்தியமாய் கருது - சத்திய வஸ்துக்களாக நினைப்பாயாக, நினை இலவதமில் - இங்ஙனங் கருதப்பட்டவைகளில், விபர்யயமதுவிலை - பிராந்தியின்று.

(ப-ம்)—உண்மையைக்காண விரும்பியானது பொன்னாதி புத்தி எக்காலும் பிறழ்வுடையதன்று. எனெனின் கனகாதிகாரிய வாபாணதிகளில் அநுகூதமா யிருத்தலிலுலாம். கனகாதிகளும் ஆபாணதிகளும் வித்தியாசமின்றியதேனும் கனகாதி சத்தியம் ஆபாணாதி யசத்தியமெனப் பொருள். (121)

(அ-கை)—அங்ஙனமாயின் திருவ்டாந்த தாவ்டாந்தங்களில் எது எதற்குச் சமானமென்னும் வேட்கையில் கூறுகின்றார்.

அணியாதி சமந்தழ லாதிய தாம நித்த
குணமாமத னற்சுட னாதி குலா விடுங்கா
ரணமா மருணாதிய மூன்று மநித்த மின்றுந்
துணிவாற்கன காதிய தோது துலிய மாமே. (122)

(ப-னை)—தழலாதியதாம் - நெருப்பாதி மூன்றும். அநித்த குணமதனல் - அநித்தியகுண முடையதனல், அணியாதிசமம் - ஆபாணாதி துல்லியமாம், சுடனாதிகுலாவிடும் - அக்கினி முதலியவற்றில் விளங்குகின்ற, காரணமாம் அருணாதிய மூன்றும்-காரணமான செம்மையாதி மூன்றும், அநித்தமின்றுந் துணிவால் - சத்

தியமென்னு நிச்சயத்தால், கனகாதியதோடு துலியமாம் - பொன் னுதிகளோடு சமானமாம்.

(ப-ம்)—அக்கினியாதி மூன்றும் அசத்தியகுண மூடைமை யின் ஆபாணத்தி யொத்து மித்தையாம். அக்கினியாதி காரண செம்மையாதி சத்தியகுணமூடைமையின் கனகாதி யொத்து சத் தியமாம் என்பது பொருள்.

(அ-கை)—இக்கனகாபாண வுபமானத்தால் காரணமான செம்மையாதி சத்தியமென்றும் காரியமான வக்கினியாதி யசத் தியமென்றுஞ் சுருதியே கூறினவென்று கூறுகின்றார். (124)

உவமான மிதுகொடு தீயுடு நாத வேடுஞ்
சவிதாவெனு மூன்றற் கதித்த மறைகள் சாற்றுந்
துவராதிய மூன்றற் கதித்தமி றாய்மை யுஞ்சீர்
நவமாகிய நான்மறை நாலு நவிலு மாதோ. (123)

(ப-ரை)—உவமான மிதுகொடு - இவ்வுபமானத்தானே யே- தீ - அக்கினி, உடுநாதன் - சந்திரன், சவிதா - சூரியன், எனு மூன் றற்கு - என்ற மூன்றிற்கும், மறைகள் - வேதங்கள், அதித்தம் - மித்தையாத்தன்மையினை, சாற்றும்-பிரதிபாதிப்பன, துவராதிய மூன்றற்கு - செம்மை முதலிய மூன்றினுக்கும், அதித்தமில் தூய் மையும் - நித்தமான பரிசுத்தத் தன்மையினையும், சீர் - சிறப்பு வாய்ந்த, நவமாகிய - அழகிய, நான்மறைநாலும்-நான்கு வேதங் களைப்போதும், நவிலும் - கூறுகின்றன.

(ப-ம்)—"காட்சிக்கினியனே! எங்ஙனமோர் மட் பிண்டத் தை யறிதலினல் சர்வமும் மண்வடிவா யறிப்பட்டதாகின்றதோ காமரூப விகாரம் வாக்கை யாரம்பித்தது மண் மாத்திரமே சத்தி யம் எங்ஙனம் ஏ சௌமியனே! ஓர் லோகமணியை யறிதலினல் சர்வமும் லோகவடிவா யறியப்பட்டதாகின்றதோ காமரூப விகா ரம் வாக்கு மாத்திரம் லோகமாத்திரமே சத்தியம்" என்பது முத லிய சுருதிகளினல் சர்வ காரியமும் காரணமாத்திரமே யெனக் கூறப்பட்டது. இக்கனகாபாண திருஷ்டாந்தத்தால் அக்கினியா

திகள் மித்தை என்றும் சம்மையாதிகள் சத்தியமென்றுங் கூறப் பட்டதென்பது பொருள். (123)

(அ-கை)—அநேக வுபமானங்களால் மன மூதலிய வுலகஸித் தியமெனச் சுருதி கூறியதென மூற்கூறப்பட்டது. அவ்வுபமானம் அனேகங்களை வேறு பிரித்தறிவிக்கின்றார்.

அனலாதிக் கனித்தியம் யாது மறைகளாறும்
பனுமீதத னற்றிருட் டாந்த மதாய்ப் பலிக்கு
நனிகாரியம் யாதுமெஞ் ஞான்று மதித்த மோதத்தின்
கனடாந்துணி வாலது போன்றலை காரணைக்தான். (124)

(ப-னை)—யாது அனித்தியம் - எவ்வனித்தியத் தன்மையினை, அனலாதிக்கு - அக்கினி மூதலியவற்றிற்கு, மறைகள் ஆறும் - வேதங்கள் கூறுகின்றனவோ, பனுமீதது - அனலாதியனித்தியமெனக் கூறப்பட்ட வீது, அஃன் நற்றிருட்டாந்தம் தாய்ப் பலிக்கும் - சர்வ காரியமுமனித்த மென்பதற்கு நல்ல வுபமானமாகும், (எனினின்) நனிகாரியம் யாதும் - மிகவும் யாது காரியமோ, எஞ்ஞான்றும் அநித்தம் - அது எப்போதுமநித்த மாதலினாலாம், (இந்தியம மெதுவெனினின்) ஐத்தின் கனமாந் தணிவால் - வேதத்தின் திடமான நிச்சயத்தால், அதுபோன்று காரணம் அல - வேத நிச்சயத்தால் காரணம் காரியம் போன்று அநித்தியமாகாது நித்தியமாம்.

(ப-ம்)—சுருதியி னிச்சயத்தாற் சர்வ காரியமும் ஆபாணாதிபோன்று மித்தையாம் காரணை மங்ஙனமன்று என்பது பொருள். (124)

(அ-கை)—காரணத்தைக் கொள்ளல், காரிய நாசியத்தின் நீக்கத்தில் சாதகமென்பதை உலகிலும் விளங்குகின்றதெனக் கூறுகின்றார்.

புடவை தனக்குப் பொய்ம்மைதனைப் போதித்திடும்
வேட்கையை னாயின், மடிய லுறுங்கா ரியமதனை மருவா
தொழிக்கு மதுபோல, நெடிய நூலின் சமமாகி நிகழு
மூன்றை நிலை நுக்கிக், கொடிய கனலாதிய வதற்குக்
கூறுமறைக ளொழிவி னையே (125)

(பா-ரை)—புடவை தலைக்கு-புடவையின், பொய்ம்மைதனைப் போதித்திடும் வேட்கையன் - மித்தையாத் தன்மையினை அறிவிக்க விரும்பியோன், நூலின்மடியலுதின் காரியமதனை மருவாதொழிக்கும் - நூலினது நாசமாகுங் காரியத்தைக் கொள்ளாது நிராகரிப்பன், அதுபோல - அவ்வுவமைபோன்று, நெடியநூலின் சமயாதி நிகழும் மூன்றை - நீண்ட நூலையொத்துச் சத்தியமாய் விளங்கும் அருணாதி மூன்றனையும், நிலைநிறுத்தி - நிலைபெறச் செய்து, கொடியகனலாதியவதற்கு - கொடியதாகிய அக்கினியாதி மூன்றிற்கும், மறைகள் - வேதங்கள், ஓதினவினை - அநித்தியத்தன்மையினை, கூறும் - பிரதிபாதிக்கும்.

(பா-ம்)—வஸ்துரத்தின் உண்மையைக்காண விரும்பியவன் எங்ஙனம் நூலின் காரியமான படம் நூல் மாத்திரமே யெனப் படத்தை நிராகரிக்கின்றானோ அங்ஙனமே எண்டெஞ்சுருதி நூலிற்குச் சமமான சௌம்மை முதலிய மூன்றையு மங்கீகரித்து அக்கினியாதி மூன்றையும் மித்தையெனக் கூறியதெனப் பொருள். (125)

(அ-கை)—இங்ஙனம் அக்கினியாதி திருஷ்டாந்தங்களால் மன முதலிய வுலகிற் சுசத்தியத்தன்மையும் சௌம்மையாதி திருஷ்டாந்தங்களாற் பிரஹ்மத்திற்குச் சத்தியத் தன்மையும் சுருதியினைப்பிராயமெனக் கூறப்பட்டன. இனி ஆண்டேது வினவில் காரியமாதலினாலும் காரணமாதலினாலும் என விராண்டிடத்து மேது கூறுகின்றார்.

மேதினி யாதி பாக விண்வரை யபர மான
வீதயர் பாத்து டைய காரிய மென்ன லாகும்
யாதினை லடா மாகுங் காரிய மழிய லாகும்
யாதினற் படம தாகுங் காரண மழியா தாமே. (126)

(பா-ரை)—மேதினியாதியாக - பூமிமுதல், விண்வரை - ஆகாய முடிவான, அபரமானவீது, தாழ்ந்ததானவீது, உயர்பாத்தையுடைய காரியமென்னலாகும் - உயர்வான பரமான்மாவின் காரியமென்று கூறத்தக்கது, அபரம் - உலகு, யாதினைல் - எக்காரணத்தால், காரியம் - காரியமாகுமோ, (அதனால்) அழியலாகும் -

(ப-ரை)—சத்து பாசனையினால் - பிரஹ்மோ பாசனையால், சத்துருத்தகைமை - பிரஹ்மவடிதன்மையை, இந்தச் சித்து யிரடையுமாயில் - இச்சீவனடைவனேல், இச்சீவன் செறிதன துருவு - பொருந்திய தனது மரண வடிவை, விதுவதின்றே - விடமாட்டானை, எத்தினல் - எதனல், இருவருக்கும் - விருத்த வியல்புடைய விருவருக்கும், மெய்யயிக்கிய ஞானந்தான் - உண் மையான அபேத ஞானமானது, இனைந்திடவிலது - பொருந் துவதின்றே அதனல்,

(ப-ம்)—இச்சீவன் பிரஹ்மோ பாசனையாற் பிரஹ்மத்தை யடைவானெனின் தனது மரணவியல்பை விடுவான். எனெனின் மிகவிலக்ஷணமான விரண்டு வஸ்துக்களுக்கு விருத்த தருமமிருத் தலில்லை ஐயிக்கியமான மூண்டாகாதாதலிலையாம், எகவடிவ பலத்தை அங்கீகரிக்கில் மரணவடிவ வியல்பு நீங்கும் அதனல் சொரூபத்திற்கும் நாசம் வருகின்றமையாலும் மரணவியல்பு நீங்கு லும் ஒன்று ஒன்றன் வடிவை யடைதல் கூடாமையாலும் ஜீவ னுக்குப் பிரஹ்மப் பிராப்தி யுபாசனைபலமன்று. ஆகவின் இரண்டு பிரகாரத்தாலும் பிரஹ்மத்தினடைவதுபாசனை பலமன்று. "ஒன்று ஒன்றாகாதாகையால் ஒன்றை ஒன்றுச் சிந்திக்கலாகாது. ஒன்று மற்றொன்றன் வடிவமேல் நாசமதற் கண்ணமையாகும்" என வாசார்யாவர்களாலும் புகலப்பட்ட தென்பது பொருள். (9

(அ-கை)—ஆகூடம் உலகில் ரசக்தோடற்ற விரும்பு சொ ரூப நாசமன்றி பொன்றன்மையை யடைவது போன்று ஜீவனு சுபாவமான மரண வியல்பை விட்டுத் தனது சொரூப நாசமில் றிப் பிரஹ்மப் பிராப்தி வடிவ பலமுடையவனின்றனென கேட்கின்றனன் பூர்வ பக்ஷி.

இயல்பதாகிய பிரகிரு தினையவிடுத் திரதமொடினை பான, வயமதாயது கனகத்தின் றனைமையை யடைந்தி மதுபோல, நியம மாகிய சத்துபா சனையினை னிமலன தி வாக, நயம தார்புரு டனுமன வரதரு ணன்னறின் னை (9 தாமே.

னப்பட்டது. அதனல் உற்பத்தியுடைய வுலக னித்தியமென
வ எம்மால் முன் கூறப்பட்டதோ அது இவ்வனம் நிலை பெற்
என்பது பொருள். (127)

(அ-கை)—ஆகேபம் கூறியவேது வானுலகு மித்தையா
மனமும் அதன் சஞ்சாரமான சாக்கிராதிகளும் மித்தையன்
ன வாகேபித்துக் கூறுகின்றார்.

ரம்பு கன்றிடு மேதுவி ணன்மூளத் தெழுந்த
ந்த னக்குமு சத்தியத் தன்மையே மருவு
ந்தி ணம்புரி சரிதமும் பொய்ம்மையாய் வயங்கு
ங்கு யிற்றிடு மதகரி மயற்செயன் மானும். (128)

(ப-ரை)—முனம் புகன்றிடு மேதுவினன் - முன் சொல்லப்
– காரியத் தன்மையாகிய வேதுவினல், மூளத்தெழுந்த
ந் தனக்கும் - காரியமாய் ஜனித்த மனதிற்கும், அசத்தியத்
மையே மருவும் - மித்தையாத் தன்மையே பொருந்தும்,
ம் - மனதும், தினம்புரி சரிதமும் - தினந்தோறுஞ் செய்யுந்
திரமாகிய அவஸ்தாத்திரயமும், பொய்ம்மையாய் வயங்கும்-
தையாகவே நிகழும், (எவ்வனமெனின்) மனங் குயிற்றிடு மத
- மனதினல் மயக்கற் செய்யப்பட்ட மதத்த யானையினது,
ற்செயல் மானும் - மயக்கத்தாற் காணப்பட்ட சேஷ்டையை
ரப்பாக என்பதாம்.

(ப-ம்)—மனதுங் காரியமெனக் கூறப்பட்ட வேதுவானே
தையாம். அதனுன் அதன் சஞ்சாரமாகிய அவஸ்தாத்திரய
கற்பித யானை மித்தையாதலின் அதன் சேஷ்டையும் மித்
யாவது போன்று மித்தையாம். (128)

(அ-கை)—ஆகேபம் மனங் காரியமாயின் மித்தையாம்
றல் அதனுற்பத்தி கேட்கப்படாமையால் அது வின்றெனப்
ய வாதி சங்கிக்கின்றனன்.

ககன மாதியி னின்றறி வினினின்றுங் கருத்தினுக்
ம்மேவத, மிகவு நீள்பிறப் பறைந்தில காதலா லெவ்வித
ணுலே, புகுமை காமன மிதனது வசத்தியப் புந்தியுற்
ல்கூடும், பகவ னேமிக வுறுதிய தாயெனக் கருளொடும்
ர்வாயால். (129)

அநித்தியமாம், பரம் - பிரஹ்மம், யாதிலல் - எக்காரணத்தால், காரணமாகும் - காரணமா யிருக்கின்றதோ, (அதலல்) அழியா காமே - அழிவற்ற நித்தியப் பொருளாம்.

(ப-ம்)—பிருதிவி முதலாகாயம் வரையான தாழ்ந்த விவ்வு லகு பிரஹ்மத்தின் காரியமாம். இதறற் காணப்படு மூலகனைத் தும் பிரஹ்மத்தின் காரியமாதலின் மித்தை காரணமான பிரஹ்ம மெனிலே பிரகிருதியாதலின் சத்தியம். திருஷ்டிய மன முதலிய வுலகனைத்தும் அநித்தியம் காரியமாதலின் அக்கினியாதி போன் றது. மேலான பிரஹ்மமோ சத்தியம் காரணமாதலின் சம்மை யாதி போன்று, அக்கினியாதி மூன்று மசத்தியம் காரியமாதலின் ஆபாணாதி போன்று. சம்மையாதி மூன்றும் சத்தியம் காரண மாதலின் கனகாதி போன்று. என்பது சமுதாயார்த்தம். (126)

(அ-கை)—கூறிய வேதவாற் சாதித்த பொருளை முடிக்கின் றார்.

ஆதலாற் பிரம மான சத்தசத் தாத லின்றும்
பேதமா மன்னி யங்கள் பெட்டெனல் சித்த மாகு
மாதலா லுதய முற்ற சகமசத் தென்ன முன்ன
மோதிய தென்ன லீண்டுச் சித்தமுற் றதுவீ யோரே. (127)

(பரா)—ஆதலாற் பிரமமான சத்து - ஆகலின் பிரஹ்மமான சத்வஸ்து, அசத்தாதலின்றும் - பொய்யாகாதாம், பேதமாம் அந்தியங்கள் - சைதன்னியத்திலும் வேறான காரியமனைத்தும், பெட்டெனல் சித்தமாகும் - மித்தை என்று சித்திக்கும் (இதன லென்ன வந்தது எனின்), ஆதலால்-இங்ஙனம் கூறியதால், உதய முற்ற சகம் - உற்பத்தியுடைய வுலகு, அசத்தென்ன - மித்தை யென, (என்றல்) முன்னம் ஓதியது - முன் கூறப்பட்டது, ஈண் டுச் சித்தமுற்றது - இங்ஙனம் நிலைபெற்றது, நீ ஓர் - நீ தெளிந்து கொள்ளுவாயாக.

(ப-ம்)—காரணஞ் சத்தியம் காரிய மசத்திய மென்பதனல் பிரஹ்மஞ் சத்தியம் அதனினும் வேறான சர்வகாரியமும் மசத்திய

மெனப்பட்டது. அதனல் உற்பத்தியுடைய வுலக னித்தியமென யாது எம்மால் முன் கூறப்பட்டதோ அது இங்ஙனம் நிலை பெற் றது என்பது பொருள். (127)

(அ-கை)—ஆகேபம் கூறியவேது வானுலகு மித்தையா குக மனமும் அதன் சஞ்சாரமான சாக்கிராதிகளும் மித்தையன் றென வாகேபித்துக் கூறுகின்றார்.

மூனம்பு கன்றிடு மேதுவி ணன்மூளத் தெழுந்த
மனந்த னைக்குமெ சத்தியத் தன்மையே மருவு
மனந்தி னைம்புரி சரிதமும் பொய்ம்மையாய் வயங்கு
மனங்கு யிற்றிடு மதகரி மயற்செயன் மானும். (128)

(ப-ை)—மூனம் புகன்றிடு மேதுவிணன் - முன் சொல்லப் பட்ட காரியத் தன்மையாகிய வேதுவினல், மூளத்தெழுந்த மனந் தனைக்கும் - காரியமாய் ஜனித்த மனதிற்கும், அசத்தியத் தன்மையே மருவும் - மித்தையாந் தன்மையே பொருந்தும், மனம் - மனதும், தினம்புரி சரிதமும் - தினந்தோறுஞ் செய்யுஞ் சரித்திரமாகிய அவஸ்தாத்திரயமும், பொய்ம்மையாய் வயங்கும்- மித்தையாகவே விகழும், (எங்ஙனமெனின்) மனங் குயிற்றிடு மத கரி - மனதின் மயக்காற் செய்யப்பட்ட மதத்த யானையினது, மயல்செயல் மானும் - மயக்கத்தாற் காணப்பட்ட சேஷ்டையை யொப்பாக என்பதாம்.

(ப-ம்)—மனதுங் காரியமெனக் கூறப்பட்ட வேதுவானே மித்தையாம். அதனன் அதன் சஞ்சாரமாகிய அவஸ்தாத்திரய மும் கற்பித யானை மித்தையாதலின் அதன் சேஷ்டையும் மித் தையாவது போன்று மித்தையாம். (128)

(அ-ை)—ஆகேபம் மனங் காரியமாயின் மித்தையாம் ஆனல் அதனுற்பத்தி கேட்கப்படாமையால் அது வின்றெனப் பூர்வ வாதி சங்கிக்கின்றன்.

ககன மாதியி னின்றறி வினினின்றுங் கருத்தினுக் கரும்வே தது, மிகவு நீள்பிறப் பறைந்தில தாதலா லெவ்வித மதனலே, புகுமெ காமன மிதனது வசத்தியப் புந்தியுற் றிடல்கூடும், பகவ னேமிக வுறுதிய தாயெனக் கருளொடும் பகர்வாயால். (129)

(ப-ரை)—அரும் வேதம் - அரிய வேதமானது, கருத்திலு க்கு - மனதிற்கு, இகலும் நீள் பிறப்பு - விரோதமான நெடிய வுற்பத்தியை, ககன மாதியினின்றும் - ஆகாயாதிகளி னின்றே றவும், அறிவினினின்றும் - பிரஹ்மத்தினின்றேறவும், அறைந் ஹும், அநிவினினின்றும் - பிரஹ்மத்தினின்றேறவும், அறைந் திலதாகலால் - கூறவில்லையாகலின், அதனால் - அங்ஙனம் கூறு மையான், புகும் மகா மனமிதனது - சஞ்சலமுடைய பொரிய விம்மனத்தினது, அசத்தியப் புத்தியுற்றிடல் - மித்தையாகிய ஞானத்தை யுடையவனுதல், எவ்விதம் - எப்பிரகாரம், கூடும்- பொருந்தும், (இதனை) பகவனே! - வீட்குண ஐசுவரிய சம்பன் னரே!, மிக வுறுதியதாய் - மிகவும் உண்மையாக, அருளாதும்- தங்கள் சீடனென யடியேயனுக்கு, பகர்வா யால் - தேவரீர் திருவாய் மலர்ந்தருளல் வேண்டும்.

(ப-ம்)—மனதி னுற்பத்தியைச் சுருதி பரமான்மாவி னின் றேறனும் அல்லதா காயாதிகளினின்றேறனுங் கூறவில்லையாகலின் மனம் எங்ஙனம் மித்தையாக வறியப்படல் கூடும் பகவனே இதனை விசாரித்துத் தாங்கள் கூறவேண்டுமென்பது துபிப் பிராயம். (129)

(அ-ரை)—சாந்தோக்கியத்தின் ஏழாவது அத்தியாயத்தில் "ஆன்மாவினின்று மனம்" என்பது முதலியவற்றால் மனம் பரமான்மாவின் காரியமெனக் கேட்கப்படுதலினால் இக்கேள்வி பொருத்தமின்றியதனைச் சித்தாந்தி பரிகரிக்கின்றார்.

சாந்தோக்கியத்தின் சத்தமத்திற் சத்தாம் பிரமமதி னின்றும், போக்த பாண்மை மனத்தனைக்கு முபயிப்பி தேறும் புகன்றிடலாற், சாந்த மாகுங் காரியத்தின் றாதும் வாய்ந்த மனமிதற்கே, காந்தியான மெய்ம்மையது மென னம் பவிக்குங் கழறுதியால். (130)

(ப-ரை)—சாந்தோக்கியத்தின் - சாந்தோக்கிய வுபநிடதத் தின், சத்த மத்தில் - ஏழாவது அத்தியாயத்தில், சத்தாம் பிரம மதினின்றும் - சத்தாகிய பரமான்மாவினின்றும், உயிர்ப்பி

ணேடு - பிராணேணேடுங் கூட, மனக் கனக்கும் - மனதிற்கும், போந்த பான்மை - உற்பத்தியான தன்மையை, புகஞ்றிடலால் - கூறுகின்றமையின், சாந்தமாகுங் காரியத்தின் றருமம் வாய்ந்த - காரணமாகும் காரியத்தன்மையையுடைய, மனமிதற்கு - இம்மனதிற்கு, சாந்தியான மெய்ம்மையதும் - பிரகாசமுடைய சத்தியத் தன்மையும், எவணம் பவிக்கும் - எம்மாதிரி யுண்டாகும், கழறுதி - கூறுவாயாக வென்பதாம்.

(ப-ம்)—சாந்தோக்கிய வுபநிஷத்தி னேழாவது அத்தியாயத்தில் ஆன்மாவினின்றும் பிராணேணேடு மனதினது வுற்பத்தியைச் சுருதி கூறுவதால் காரிய தருமமுடைய மனதைச் சத்தியமா யறிதலெங்ஙனங் கூடும்? ஆகலின் பரமான்ம காரியமாதலின் மனம் அத்தியந்த மசத்தென்பது பொருள். (130)

(அ-கை)—பரமான்மாவினின்றும் மனதி னுற்பத்தி மூண்டகத்திலுங் கேட்கப்படுகின்றதெனக் கூறுகின்றார்.

காணம்முயிர்ப் பதனேடு நுண் ககனதியி னேடுந்
தெருணற்பர மான்மாவெனத் திகழும்புரு டனினின்
றுருணம்மன முதிகம்மென வுயர்மூண்டக மொழியும்
பொருணுங்கிடு மனமாதலிற் பொய்யாமென வுணர் நீ

(ப-னை)—காணம் - காணத்தோடும், உயிர்ப்பதனேடும் - பிராணேணேடும், நுண் ககனதியி னேடும் - சூக்குமமான ஆகாயாதிகளோடும், தெருள் - ஞானவடிவு, நற்பரமான்மா வெனத் திகழும் - நல்ல பரமான்மாவென விளங்குகின்ற, புருடனினின்று - புருடனிடத்தினின்றும், உருள் நும்மனம் உதிதம் - சஞ்சலமுடைய வும்து மன முற்பத்தியானது, என - என்று, உயர்மூண்டக மொழியும் - உயர்ந்த மூண்டக வுபநிடதம் புகலும், பொருள் நுங்கிடு மனமாதலில் - மனம் பரமான்மாவினை லெழிக்கப்படுமாதலின், நீ பொய்யாமென வுணர் - பொய்யென நீ தெளிந்துகொள்.

(ப-ம்)—" இதனினின்றும் பிராணன் மனம் சர்வ இந்திரியங்களு மூண்டாகின்றன. ஆகாயம், வாயு, அக்கினி, அப்பு, சர்

வத்தையுந் தாங்குகின்ற பிருதிவியும்" என்பன முதலிய முண்
டக வுபநிடதத்திலும் பிராணதிகனோடு பரமான்மாவினின்றும்
மனமுண்டாயிற் றென்பதனால் நீ மனத்தை மித்தை என வுணர்
எனப் பொருள். (181)

(அ-கை)—இங்ஙனம் மனம் பரமான்மாவின் காரியமாகக்
கேட்கப்பட்டமையின் மித்தை எனப்பட்டது. இனி பௌதிக
மாகக் கேட்கப்படுதலினாலும் மித்தை எனக் கூறுகின்றார்.

மனமோவன மயப்பான்மைய தெனவேமறை மொழிபு
நனியாதலி னுலையுட லதுபோலநற் பிடமாய்க்,
கனபூத மென் னதன்காரியங் கசடேயற வுறலா,
மனமானது வதனன்மலி பொய்யாமென மதிநீ. (132)

(ப-ரை)—மனமோ - மனமானது, அனமயப் பான்மைய
தெனவே - அன்னமயத் தன்மையது என்று, மறை மொழியும்-
வேத வாக்கியமும், நனியாதலினால்-மிகவும் கூறுகின்றதா யிருப்
பதினால், நற்பிடமாய் - நல்ல நிச்சயமாக, உடலதுபோல - சரீ
ரம் போன்று, கனபூத மென்னதன் - பருத்த பூத மென்பதினது,
காரியம் - காரியமாக, கசடேட யறவுறலாம் - குற்றமற வுடைதின்
றது, அதனால் - பூத காரியமாதலின், மனமானது, மலிபொய்யா
மென மதிநீ - அத்தியந்தம் பொய்யென நீ அறிவாயாக.

(ப-ம்)—"வேற! காண்டற் கினிதியாதேனை! மனம் அன்ன
மயம். பிராணன் ஜல மயம். உண்ட வன்னம் மூன்று பாகம்
அதன் மிகச் சூக்குமம் மனம்" என மனமன்ன மயமா யறியப்
படுதலினாலும் மித்தை என வறிவாயாக வெனப் பொருள். (132)

(அ-கை)—இங்ஙனங் காரியத்தன்மையாகிய வது வுடைமை
யின் மன முதலிய வுலக னித்திய மெனப்பட்டது. இனி ஆகி
யந்த முடைமையாலு மெனவேறனுமானத்தினாலும் மன முத
லிய வுலகிற் கனித்தியத்தன்மை சாதிக்கத் தக்கதாம் எனச் சிவ
யோகிகள் சிகாமணிக்கின்றார்.

ககனாதிய வுதயஞ்செறி யிவையா வைபுங் கருதி,
ஓகுமா பொய்ம்மை யெனுமீதினைப் பிரதிஞ்ஞை யென்று
ஞற்றுய், தகுமீயினின் மூதலில்லிலை யெனவே துவதாகும்,
புகுபூடணை மதுபோலெனல் புகல்வாயுவமமெனை. (133)

(ப-னா)—ககனாதிய - ஆகாய மூதலிய, உதயஞ் செறி-உற்பத்தியுடைய, இவை யாவையும்-இப்பூதாதி யாவையும், கருதில்-எண்ணுமிடத்தில், உகுமா பொய்ம்மையெனு மீதினை - அழிவான மித்தை யென்னுமிதனை, பிரதிஞ்ஞை என்றுஞற்றுய்-பிரதிக்ஞையாகச் செய்வாய், தகும் - தகுதியுடைய, ஈறினின் (இலை) மூடிவிலுமின்று, மூசலில் இலை - உற்பத்திக்கு முன்னுமின்று, என - என்பது, எதுவதாகும் - எதுவாகும், புகுபூடண மதுபோலெனல் - அழியும் ஆபரணத்தைப்போன்று என்பது, புகல்வாயுவமமெனை - உவமானமென்று கூறுவாய்.

(ப-ம்)—விண்முத லுண்டா முலகனைத்து மனித்தியம் உற்பத்திக்கு முன்னும் நாசத்திற்குப் பின்னு மின்மையால் ஆபரணந் போன்று என்பது பொருள். (133)

(அ-கை)—கனக ஆபரண திருஷ்டாந்த தாஷ்டாந்தங்களை விரித்துரைக்கின்றார்.

கனகந் தனி லெழுபூடண மூனமுண்டல கருதிற்
பினுநன்முடி வதிலிங்கிலை யெனபோ ழுதையதே
மனுமிவ்வழி வனினுமம்மினை மானுமம்மிவை யெவையாஞ்
சனிகம்பெறு நடமாதிக டனடயில்லசத் தாமே. (134)

(ப-னா)—கனகந் தனில் - பொன்னினிடத்து, எழுபூடணம் - உண்டாகாநின்ற வாபரணமானது, கருதில் - விசாரிக்குமிடத்தில், மூனமுண்டல - உற்பத்திக்கு முன்னின்றது, பினும் நன் முடிவதில் - நன்றாக அழிந்த பின்னரும், இங்கிலையென போழுதை - என்று இன்று என்றுமிகப் பொய்யாம், அதே-அதனையே, மனும் இவ்வழி தனினும் - பொருந்திய நிகழ்காலத்திலும் இன்று, இதை மானும் - இப்பொன்னாபரணம் போன்று,

இவை எவையாம் சனிதம்பெறு நபமாதிகள் - இவ்வுற்பத்தி யுடைய எவ்வாகாயாதிக ளுண்டோ அவைகள், தடையில் அசத் தாம் - தடையின்றித் துச்சமாம்.

(ப-ம்)—காரண வடிவ கணகத்திற் காரியவடிவ ஆபாணதி கள் முன்னும் பின்னுமின்று "முன்னும் பின்னும் யாதின்றே நிகழ்விலு மஃதங்ஙனமே" எனனு நியாயத்தால் நிகழ்காலத்தி லுங் கனகவிய திரோகடாக ஆபாணதியின்று, அங்ஙனமே உற் பத்தியுடைய வுகு மூன்முகாலத்து மின்றென்பது பொருள்.

(அ-கை)—இங்ஙனங் கனகாபாண திருட்டாந்தத்தினல் காரியங் காரணத்தினு மன்னியமாக வின்றெனத் தனது சித்தாந் தங் கூறப்பட்டது. ஆண்டிஃதா சங்கையாம். காரிய காரணங் களுக்கு அத்தியந்த பேதமுண்டு அவற்றின் அபேத விளக்கமோ சமவாய சம்பந்தத்தாற் றோன்றுகின்றது என வைசேஷிகாதிக ளின் சங்கை அவர்களைக் குறித்துச் சித்தாந்தி கூறுகின்றார்.

கனகாதியி லுளதாகிய களிபூடண முதலான் பொனின்வேறென வுளதாயிடிற் புகலும்பரி மான நனிகூடிட லிலதேனினவை தமிணடிடி னலமாய்ப் பனல்வேண்டிடுங் தடையொன்றறப் படிமீது தனையே.

(ப-னை)—கனகாதியி லுளதாதிய - பொன்னுதிகளி லுண் டான, களிபூடண முதல் - பிரியமான ஆபாணதிகள், பொனின் வேறெனவுளதாயிடல் - காரணமான பொன்னிலும் அன்னிய மாயின், புகலுய் பரிமாணம் - பிரதிபாதியா நிற்கும் பருமன் ஆனது, நலமாம் காடிடல் - நன்றாக வாராயுமிடத்து, இவைதமில் இவ்வாபாணதிகளில், நனிகூடிடல் இலது என் - என் மிகவும் அதிகமாகக்காணப்படவில்லை, படிமீது - இப்புவியில், இதனை - காரணத்தினு மன்னியமான காரியத்தில் பரிமாணாதிக்கம் அதிக மாகக் காணப்படாமையை, தடை யொன்றற - யாதொரு தடை யுமின்றி, பனல் வேண்டிடும் - கூறவேண்டும்.

(ப-ம்)—கனகாதிகளினும் ஆபாணதிகளன்னியமாகவே யுண்டாயின வென்ன் அக்காலிவ்வாபாணதிகளில் என் அதிக

குருத்துவமுண்டாகவில்லை என்று கேட்கின் குசலர்களான தார்க்கீகர்கள் இவ்வினவிற்கு அவசிய முத்தரங் கூறவேண்டும் கூற முடியாதென்பது பொருள். (135)

(அ-கை)—இதனுங் காரிய காரணங்களுக்குப் பேதம் பொருத்தமன்று.

கனகாதியி லுளவாதலிற் கனகாதிக டமின்வே
றெனவேயணி முதலாயன வுளவேயில வெதனாற்
றனியேயென கமதாதிய கொளலே தகவிலதா
லெனகாரண மதுவேநிச மிதில்வேறிழு தையதே. (136)

(பதம்)—கனகாதியிலுளவாதலில் - பொன்னுதிகளிலிருக்கின்றமையின், கனகாதிகள் தமின்வேறெனவே - பொன்னுதிகளினும் வேறாயிருக்கின்றன வென, அணிமுதலா யனவுனவே யில - ஆபரணதிகள் இருப்பனவேயில, எதனால் - ஏனெனின், தனியே - அன்னியமாக, கனகமதாதிய - கனகாதிகளைக் காரணமாகவுடைய (ஆபரணதிகள்), கொளலேதகவிலதால் - கொள்ளுதலுக்குத் தகுதியுடையதன்றுதலினால், என - என்று, காரண மதுவே நிசம் - காரணமே சத்தியம், இதில் வேறு- காரணத்தினு மன்னிய காரியம், இழுதையது - பொய்யானது.

(பதம்)—ஆபரணதி கனகாதியினு மன்னியமா யறியப்படாமையின் வேறன்று. ஆகலின் காரணமேயுண்மைப் பொருள் அதினன்ய காரிய மசத்தியமெனப் பொருள். (136)

(அ-கை)—ஆக்ஷபம் அங்ஙனமேனும் காமரூபாகாரங்களாற் காரிய காரணங்களுக்குப் பேதமே யென்று பூர்வவாதி சங்கிக்கின்றான்.

தருகாரண மதிணமமொ டருவந்தனி னேடும்
விரிவேறென வுளதாகலின் விளகாரியம் வேறே
யிரிகாரிய முறுகாரண மிதின்வேறதிங் கிலதா
மருமாமதி யெங்ஙன்னுள ததுவாமிதை யறைவீர். (137)

(பா-ரை)—தருகாரணமதின் - உண்டாக்கும் காரணத்தின் வேறுனை, நாமமொடு - பெயரோடும், உருவந்தனிறேனும் - சூபத்திறேனும், விளைகாரியம் - உண்டாகும் காரியமானது, விரி வேறெனவுளதாகலின் - விரிந்த பேதத்திறல் வேறுகவுண்டாவ தலால், வேறை - அன்னியமேயாம், இரிகாரியம் - அழியுங்காரிய மானது, உறுகாரணமிதின் - பொருந்திய காரணத்திறும், வே றது இங்கு இலதாம் - வேறுக வீண்டு இன்றியதாகும், அருமா மதி - அரிய பெரிய புத்தியாளனே, வங்கவுனை - யாண்டு இருக் கின்றது, அதுவாம் இதை - அங்ஙனமுண்டாகு மிப்புத்தியினை, அறைவீர் - கூறுவீராக.

(பா-மீ)—காரணத்திறுங் காரியத்திற்குப் பெயர் ஆகாரம் வேறுகக் காணப்படுகின்றமையின் வேறன்றென வறியப்படுத வேலங்ஙனம் பொருந்து மிதனைப் புகலல் வேண்டும். காரணத் திறுங் காரியம் வேறு காமத்தாலும் வடிவத்தாலும் காரியத்தின் மையாலும் என்பதாம் வேதபம் எனப்படுவதாகும். (137)

(அ-கை)—இவ்வுலமாணம் பிரத்தியக்ஷ விரோதமெனச் சித் தாந்தி கூறுகின்றார்.

ஈண்டு வீரணைத் தந்தவொன் மன்னனை யிணையே
நீண்ட பாய்பட மாரமுங் குடமதாய் நிகழுக்
காண்ட லாயது வுலகுரார்க் கண்டிடு மதனல்
வேண்டு காரணங் காரியம் வேறில வறிநீ. (138)

(பா-ரை)—ஈண்டு, கண்டிடும் - பார்க்கின்ற, உலகுரார்க் - உல கத்திலுள்ள சர்வ சனங்களாலும், வீரணம் - சேகரை, தந்த - தனால், பொன், மண், எனுமிவையே - என்ற மூன்று பிரகிருதியே, நீண்டபாய் - நீளமான பாய் என்றும், படம் - வஸ்திர பென்றும் நீண்டபாய் - நீளமான பாய் என்றும், குடமதாய் - குடமென்றும் (ஆகிய ஆகாரம் - ஆபரணமென்றும், குடமதாய் - குடமென்றும் பார்க்கப் இவைகளாக), நிகழுக் காண்டலாயது - கண்ணுக்குத்தெரிய காரியமாகப் பட்டது, அதனல் - அங்ஙனம், காரணத்தைத்தேய காரியமாகக் காண்டலின், வேண்டு காரணம் காரியம் வேறுதில - வேண்டப் படுங்காரணமும் காரியமும் அன்னியமாகவின்றி யென, நீ அறி நீ அறிவாயாக.

(ப-ம்)—வியவகார காலத்தில் பார்ப்போரால் கோரையாதி கனே பாயாதி வடிவாய்க் காணப்பட்டது. வஸ்திராயின் வடிவம் நூலாதியாகவே காணப்பட்டமையின் காரணத்தினுங் காரியம் வேற்றுமையை யுடையதன் றென்பது பொருள். (138)

(அ-கை)—கூறிப்போந்த பொருளையே விரிக்கின்றார்.

காரண மதனி னின்றுங் காரிய மனிய மின்றேற்
பேருரு வாதி யாய பேதமும் பொருந்தா தென்ன
ஆருண ருணர்வு வாளா வுறுமுல கினர்க ளாலே
காரண மண்ண பேதங் காணலாங் காட்சி யாலே. (139)

(ப-மா)—காரண மதனினின்றும் - காரணத்தினின்றும், காரிய மன்னிய மின்றேல் - காரியமானது அன்னியமாக இராதாயின், பேர் உருவு ஆதியாய பேதமும் பொருந்தாது என்ன - நாமரூப முதலிய வேற்றுமை பொருந்தாது என்று, ஊர் உனது உணர்வு - ஆராய்ச்சி செய்யச்செல்லுகின்ற உன் புத்தியானது, வாளாவுறும் - வீணாகவே பொருந்தியது, (எனினின்) உலகினர் களாலே - உலகத்தவர்களால், காரணமண்ண பேதங் காணலாங் காக்ஷியாலே - காரிய குடம் காரணமான மண்ணினுமபேதமாகக் காண வமைந்துள்ள பிரத்தியக்ஷத்தினால்.

(ப-ம்)—காரணத்தினுங் காரியம் வேறுகாதெனின் நாமரூபகாரிய பேதமும் பொருந்தா தென்னு முன்னுடைய புத்தி காரியகாரண பேதத்தைச் சாதிப்பதாகாது. எனினின் பிரத்தியக்ஷமாய் உலகோரால் காரியமான கடம் காரணமான மண்ணினும் அபேதமா யறியப்பட்டதாலாம். இதனன் உனது ஞானம் பயனின்றிய தெனப் பொருள். (139)

(அ-கை)—உன தனுமானம் கேவலம் பிரத்தியக்ஷ விரோதமாத்திரமன்று ஆனல் அனேகாந்திகம் (பிறழ்வுடையது) எனச் சித்தாந்தி கூறுகின்றார்.

உருவமு நாமந் தானுங் காரிய மொருந டற்குத்
தெரிவது வேற தாயு நடன்றிக ழனிய னென்னை
மருவுத லெனின் றென்றே வினவிடின் மதிய ராலே
யுரியவுக் காரம தீதை யுரைத்திடல் கடனதாமே. (140)

(ப-ரை)—ஒரு நடற்கு - ஒரு கூத்தாடியான நடனுக்கு, உரு வமும் நாமந்தானும் - உருவமும் நாமமும், காரியம் - காரியமும், வேறதாயும் - அன்னியமாய், தெரிவது-அறிவிப்படுவதினின்றும் திகழ் நடன் - விளங்குகின்ற நடனனவன், அனியனென்ன - நான் வேறானவனென்று, மருவுதல் எனின்று - பொருந்துதலில் லனவன் அடையப்படவில்லை, என்றே - என்று, வினவிடல் - கேட்குமிடத்தில், மதியாலே - புத்திமான்களான நையாயிக ரால், உரிய உத்தாமது ஈதை - சரியான சமாதானத்தை, உரைத் திடல் கடனெதாம் - கூறுதல் கடனாகும்.

(ப-ம்)—உருவம் காரியம் நாமம் ஆகிய இவைகள் நடனுக்கு வேறாயறியப்பட்டனவெனின் அக்கால் நடன்தன்னிடத்தும் அவற் றை வேறாகவே னறிகின்றிலன் என எம்மாற் கேட்கப்படின் நியாய சூசலர்களான தங்களால் இதனைச் சொல்லவேண்டும். உமது பிதாக்களாலுரைத்தாங் கூறமுடியாதென்பது பொருள்.

(அ-கை)—சத்து அசத்து சதசத்து என்னு மிவைகளுக்கு ற்பத்தியசம்பவமாதலினாலும் காரிய காரணத்தன்மைகள் கற் பிதமாதலினாலும் காரியம் காரணத்தினு மயலன் றெனப் பின் னுள்ள செய்யுட்களாற் கூறுகின்றார். ஆன்று அசத்தென்பது வைதேஷிகமதம். சத்தென்பது சாங்கிய மதம் சதசத் தென் பது திகம்பரமதம். இவற்றுள் முதல் வைதேஷிகமதத்தைக் கண்டிக்கின்றார்.

சத்திலதிற் கெவ்விதமுஞ் சனனமது சம்பவியாதசத்த தாலே, சத்தவிசும் பின்குசும மதுபோலத் தோற்றமுள பொருட்குத் தானு, மெத்தவுற லிலதாகு முனமேயே மினிர்வதனு லான்ம னேபோற், சத்ததுதா னிட்டமதா மதனுற்சத் தசதத்தினுக்குச் சனனமின்றே. (141)

(ப-ரை)—சத்திலதற்கு - அசத்தான காரியத்திற்கு, எவ் விதமும் ஜனனமது சம்பவியாது - எவ்வேதுவாலு முற்பத்தி கூடாது, அசத்தாதலினால், சத்தவிசும்பின்கு சுமமதுபோல- பரிசுத்தமான ஆகாயப் பூப்போன்று, தோற்ற

முன பொருட்குத்தாணும் - முன்பே சத்தாயுள்ள பதார்த்தத்திற் கும், மெத்தவுறவிலதாகும் - மிகவும் உற்பத்தியுடைமை பொருந் தாது, முனமேமேயே மிளிர்வதலல் - முன்னமே விளங்கிக்கொண் டிருத்தலினல், ஆன்மனே போல் - ஆன்மாவைப்போன்று, சத் தது தானிட்ட மதாமதலல் - சத்தான பொருள் உற்பத்திக்கு முன்னமே இருக்கின்ற தென்று விரும்பப்படுவதினல், சத்த சத்திஹுக்குச் சனனமின்றே - சத்தாயம் அசத்தாயுமுன்ன வற்றிற் குற்பத்தி பொருந்தாது.

(ப-ம்)—ஆகாயபுட்பம் போன்று உற்பத்திக்கு முன்பே காரி யம் அசத்தாதலின் அதற்குற்பவிக்குந் தன்மை யின்றென வைசேஷிக மதகண்டனமும் ஆன்மாவைப்போன்று உற்பத்தி க்கு முன்பே இருத்தலின் சத்காரியத்திற்கு உற்பத்தி பொருந்தா தெனச் சாங்கிய மதகண்டனமும் செய்யப்பட்டன வாதலின் அசத்தான காரியத்திற்கும் சத்தான காரியத்திற்கும் உற்பத்தி கூடாதென்பது பொருள். (141)

(அ-கை)—சத்திற்குற் பத்தி பொருந்தா தென்றதைக் கேட்டுச் சத்காரியவாதிகளெல்லாங் கூடி எழுந்திருக்கின்றார்க ளெனக் காண்பிக்கின்றார்.

